REGISTERED
17 SEP 1910
OFFICE ... BOOKS
MADRAS.

# வித்யாவிஹாரிணி

காவியம், சரித்திரம், கலைக்கியானம், தொழின்முறை, வேடிக்கைக்கதைகள்,
முதலியன விளக்கிச் சித்திரசகிதமாப் நடைபெறும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை

ஸி. என். கிருஷ்ணஸ்வாமி அய்யர், எம்.ஏ., எல்.டி. பத்திராதிபர்.

புஸ்தகம் I | சாதாரணவூ ஆடிமாதம் | சஞ்சிகை, 11
Vol. I | July 1910 | No. 11

## பிரபஞ்சவர்த்தமானம்

"பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல, கால வகையினனே."

**நமது புதிய ராஜப்பிரதிநிதியவர்கள்.**

தற்காலம் நமது ராஜப்பிரதிநிதியாகிய மிண்டோ பட்டவர்த்தனர் இவ்வருஷக் கடைசியில் திரும்பச் சீமைக்குப்போகவேண்டியிருப்பதால், அவருக்குப் பின் யார் வருகிறாரென்று கொஞ்சநாளாகக் கேள்வி பலப்பட்டு வந்தது. இவர் வரலாம், அவர் வரலாமென்று பலபெயர் பதவிதமாகத் தர்க்கித்தார்கள். கடைசியில் சர் சார்லஸ் ஹார்டிங்கு துரையவர்கள்தான் வருவதாக நிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது.

மின்டோ பட்டவர்த்தனரைப்போலவே சர் ஹார்டிங்கும் இந்தியாவில் அலுவல்பெற்று உழைக்க மிராசுபாத்தியம் பெற்றவர். ஏனெனில் இவர் பாட்டனார் ஹார்டிங்கு இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்து, 1844-ம்வூ முதல் 1848-ம்வூவரை உழைத்து வந்தவர். அவர் காலத்தில் பஞ்சாபில் சீக்கர் யுத்தம் நடந்ததும், அதில் அவராகவே சேனை நாயகராக ஏற்பட்டு, அந்த யுத்தம் நேர்த்தியாக நடந்து நிறைவேறியதும், அபிமானிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டிய விஷயம். ஆதலால், வருபவர் நமக்குப் பழைய பந்து தான். இவர் 1858-ம் வருஷத்தில் மேற்சொல்லிய கவர்னர் ஜெனரலுடைய மூத்த மகனுக்கு இரண்டாவது குமாரராகப் பிறந்தவர். 1881-ம்வூ முதல் இவர் அங்கிலேய ஸ்தானாபதியாகவோ, அந்த ஹோதாவில் வேறு அம்சங்களிலோ, விடாமல் உழைத்து வந்திருக்கிறார். துருக்கி, ஜர்மானியா, பிரான்சு, பர்சியா, ருஷியா, அமெரிக்கா முதலிய எல்லா இடங்களிலும் இவர் உழைத்துப் பழகியிருப்பதால் அனுபவம் முற்றியவரென்பதில் சந்தேகமில்லை. ஆசியாவில் அனுபவம் கூடியும், காலஞ்சென்ற சக்கரவர்த்தியவர்களுடைய சௌம்மிய நடவடிக்கைகளில் வெகுவாய் சம்பந்தப்பட்டுமிருப்பதால், இவர் இந்தியாவிலும் எல்லா வகுப்பாரையும் வசியஞ் செய்துகொண்டு துரைத்தனத்தை ஆற்றொழுக்காக நடத்துவாரென்பதில்

ஐயங் காணவில்லை. சுமார் 30-௵ காலம் சர்க்கார் தரபில் பெரிய பதவிகளிலிருந்து உழைத்தவர் யாருக்கும் விரோதிகளில்லாமலிருப்பது அசாத்தியம். ஆனால் நமது ராஜப்பிரதிநிதியாக வருபவருக்கு விரோதஞ் சொல்லுபவரொருவரும் காணவில்லையாதலால், அதைப்பெரிய நற்குறியாகக்கொள்ளவேண்டும். இந்திய துரைத்தனத்தில் பெரிய விமர்சனங்களாகி வருகின்றன. அவற்றின் பலனைக் காலதருமத்தையனுசரித்துக் கொடுப்பிப்பவர் ராஜப்பிரதிநிதியாதலால், இவ்விஷயத்தில் சர் ஹார்டிங்கு துரை சத்தியத்தையும், தருமத்தையுமனுசரித்து, இந்நாட்டிலுள்ள பல வகுப்பாருக்கும் இதம்செய்து வருவாரென்றே நம்புகிறோம்.

பழைய காலத்தில் கிரேக்க நீதிமானொருவர், "யாவனொருவன் எந்தக்காரணம் பற்றியாவது ஜனங்கள்வாயில் விழாமலிருக்கிறானோ, அவனைத்தான் வாஸ்தவத்தில் நல்லவனென்னல் தகும்," என்கிறார். அந்தப்படி விசாரிப்போமாகில், நமது புதிய ராஜப்பிரதிநிதியை வாஸ்தவத்தில் நல்லவரென்னல் தகும். ஆக்ஷேபமேயில்லை. ஏனெனில் மேற்சொல்லியபடி இவர் இதுவரை ஜனங்கள் 'வாயில் விழவே' யில்லை.

சர்க்கார் உத்தியோகஸ்தரும் ராஜத்துரோகமும்.

முன்னொரு மாதம் தேசிய பாஷைகளை ஐரோப்பிய உத்தியோகஸ்தர் கற்றுத் தீரவேண்டுமென்று விஹாரிணியில் நாம் வாதித்தது அபிமானிகளுக்கு ஞாபகமிருக்கலாம். அது முதற்கடமையென்றும், அதைப்பழைய காலத்துத் துரைமார்கள்போல இக்காலத்தவரும் அக்கரையுடன் கற்று, ஜனங்களுடன் பழகி வந்தால், அனேக மங்களங்களுண்டாகுமென்றும், நாம் வற்புறுத்தினோம்.

இதை யனுசரித்துச் சமீபகாலத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு பெரிய சர்க்கியுலர் அனுப்பியிருக்கிறார்கள். அது சர்க்கார் உத்தியோகஸ்தருக்கென்று பிறந்திருப்பது வாஸ்தவம். ஆயினும் அது மகாஜனங்களையும் இவ்விஷயத்தில் உழைக்கவேண்டுவதால், அதிலுள்ள முக்கிய அம்சங்களை இங்கு சுருங்க உரைக்கிறோம்.

இப்பொழுது சில வருஷங்களாக இந்நாட்டில் ராஜத்துரோகம் பிரபலித்து வருவதுகொண்டு, அதை எவ்விதத்திலும் அடக்கவேண்டியது ராஜாங்கத்தாரின் முதற்கடமையாகிவிட்டது. ஆதலால், கொஞ்சகாலமாக அதற்கு வேண்டிய தண்டோபாயங்களைச் சர்க்கார் தேடவேண்டி வந்திருப்பதும், அவ்வாறு தேடியவைகளில் சிலவற்றைக்கைப்பற்றியிருப்பதும் அபிமானிகள் அறிவார்கள். ஆனால் இப்பெருங்காரியத்தில் அடிப்பது மட்டும் போதாதென்பது நிச்சயம். ஒரு கை அடித்தால் மற்றது ஆதரிப்பது தான் தருமதுரைத்தன லக்ஷணம். ஆகவே இந்தியா கவர்ன்மெண்டார் தங்கள் சிப்பந்திகள் மூலமாய் மகாஜனங்களை ஆதரிக்கவிரும்பி, இவ்வாறு ஆக்ஞாபிக்கிறார்கள்.

"ராஜத்துரோகமென்பது மகாஜனங்களுக்குள் பெரும்பாலார் நாளதுவரை அறியாத விஷயம். படித்தவர்களாகியும், பணங்காசு அதிக மில்லாதவராகியும் உள்ள சிலபெயர் தான் இதில் இதுவரை சம்பந்தப்பட்டிருப்பவர்கள். இவர்களுக்கும் இம்மாதிரி ராஜாங்கத்திற்கு விரோதமாகப் பேசுவதற்குத்தக்க நியாயம் ஒன்றுமில்லை. வைசிகமுறையில் காணும் இரண்டொரு சில்லரைத் தோஷங்களைப் பெரியனவாக்கி, பூனைபோனதைப் புலிபோனதாக வருணித்து வருகிறார்கள். இவர்களில் ஒருவகுப்பார் ராஜாங்கத்திற்கு நேர்விரோதமொன்றும் செய்வதில்லை. ஆனால் அதற்குச்சமயங்களில் உதவாமலும், தெரிந்தோ, தெரியாமலோ,ராஜபக்தியைக்குறைத்தும் வருகிறார்கள். மற்றைய வகுப்பார் யோக்கியரான மகாஜனங்களையும், உத்தியோகஸ்தரையும் வெடிகுண்டு முதலியவற்றால் வெருட்டி வருகி

றார்கள். இவர்கள் அநேகமாய்ப் பள்ளிப்பிள்ளை
கள். மொத்தத்தில் இவ்விருகட்சியாரும் ஒரு
வருக்கொருவர் சகாயம் செய்துவருவதாகவே
காணுகிறது.

இப்படிக்கிளம்பி, எங்கும் குழப்பமுண்டா
கும்படி இந்தவகுப்பார் செய்துவருவதற்கு
மூலகாரணம் ஒன்றுதானென்று இந்தியாகவர்
ன்மெண்டாருக்கு நிச்சயம். அதாவது, அங்கி
லேய ராஜாங்கதருமத்தை மகாஜனங்களுக்குள்
பெரும்பாலார் அறியாமலிருப்பதாம். அரை
குறையாகப் படித்துவிட்டு, நமதுநாட்டில் அன்
னியர் இருக்கவே கூடாதென்று குருட்டுத்
தனமாய்ப் பேசிவரும் சில துஷ்டருடைய சப்
தம்தான் இதுவரையில் மகாஜனங்கள் காதில்
விழுந்து வந்தது. ஆனால் அங்கிலேய ராஜாங்க
முறையை நன்றாயறிந்தவர்கள் யாரென்றால்,
அந்தராஜாங்கத்தில் அலுவல்களிலமர்ந்து அனு
பவமடைந்தவர்களேயல்லது இவர்களல்லர்.

இப்படியிருப்பதால் இந்தியா கவர்ன்மெண்
டார் தங்களுடைய துரைத்தனத்தை நிர்வகி
த்துவரும் உத்தியோகஸ்தராகிய 'நம்பிமுதல்
திருவலகுவரை' உள்ள சமஸ்தமான பெயரை
யும் இதனால் எச்சரித்து, இவ்விஷயத்தில் அவர்
கள் செய்யவேண்டியது இன்னதென்று அறிய
விரும்புகிறார்கள். வெகுநாளாகச் சர்க்கார்
உத்தியோகஸ்தர், வந்த கடுதாசிகளுக்குப்
பதில் எழுதிவிட்டால், அல்லது கணக்குக
ளைப் பார்த்துப் பைசல் செய்துவிட்டால்,
தங்கள் வேலை முடிந்துவிட்டதென்று எண்
ணிவந்திருக்கிறார்கள். இது பெரிய பிசகு.
இந்த வேலைகள் ஆகியே தீரவேண்டியவை
தாம். சந்தேகமில்லை. ஆனால் இதையே
தங்களுக்காக வேண்டிய காரியமாகவும்,
வேறொன்றுமில்லையென்றும் தீர்மானிப்பது
பிசகு. காலவகையை யனுசரித்து, சர்க்கார்
உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும், தத்தமக்
கியன்றமட்டில், மகா ஜனங்களுக்கு விவேக
மதிகரிக்கச் செய்யவேண்டும். அங்கிலேய
துரைத்தன தருமங்களையும், அதனாலுண்டாகி
யிருக்கும் நற்பயன்களையும் அவர்களுக்கெடுத்
துக்காட்டி, துர்மந்திரிகளுடைய ஆலோசனை
களெல்லாம் வீண்காரியங்களென்று விளக்கி
வரவேண்டும்.

எல்லா டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்த
ரும் இக்காரியத்தைப் பொறுப்பாகக்கொண்டு
நடத்தவேண்டியதுதான் கிரமம். ஆனால்
மகாஜனங்களுக்குள் கல்வியைப் பரவச்செய்வ
தையே முக்கிய விரதமாகக்கொண்டிருப்பவர்
எட்யூகேஷன் டிபார்ட்மெண்டாராதலால்,
அதிலுள்ள எல்லாவகையான உபாத்திமார்க
ளும் இவ்விஷயத்தில் நன்றாக உழைக்கவேண்டு
மென்பது சர்க்காருடைய சந்தோஷம்.
பள்ளிப் பிள்ளைகளுக்குச் சரித்திரம், வைசி
கம் முதலிய கலைகளைச் சொல்லிக்கொடுப்பவர்
மனம் போனபடி பேசியும், நடந்த காரியங்
களை உள்ளபடி யுரைக்காமலுமிருப்பதால்
தான் அனர்த்தங்கள் விளைகின்றன. உபாத்தி
மார்களுக்கே இவ்விஷயங்கள் நன்றாகத் தெரி
யாதாகையால், போதனைமுறைப் பாடசாலை
களில் இதற்குப் பரிகாரங்கள் தேடவேண்டும்.

ஜில்லா கலெக்டர்கள் தங்கள் சரகத்தில்
நடக்கும் சகல காரியங்களையும் கவனித்து,
சமயத்திற்குத் தக்க பரிகாரம் தேடவேண்டும்.
இதுவரையில் இவர்களிருந்தமாதிரி யிருப்ப
தில் இனிப் பிரயோஜனமில்லை. துஷ்டர்கள்
யாராகிலும் துராலோசனைகளைப் பிரபலிக்கச்
செய்தால், அதைக் கண்டிக்கவேண்டும். முக்
கியமாக ஜனங்களில் யோக்கியர், அயோக்கி
யர், இரு திறத்தாரையும் உத்தியோகஸ்தர்
நன்றாகப் பழக்கஞ்செய்துகொண்டு, நற்புத்தி
சொல்லியோ, கண்டித்தோ, வரவேண்டும்.

இந்திய மகா ஜனங்களில் சாமான்னியமாய்
எல்லாரையும், செல்வாக்குள்ளவர்களை விசேஷ
மாகவும், அனுதரணை செய்து வருவதாக, பிரிட்
டிஷ்துரைத்தன உத்தியோகஸ்தர் மீது பிரி
யாதுகேட்டு வருகிறது. ஆதலால் புதிதாகவரு

ம் உத்தியோகஸ்தரைப் பழையகாலத்திய அநுபோகஸ்தர் தக்கவழியில் போகும்படி வற்புறுத்துவதன்றி, சர்க்கியூட் போகிறவர்கள் அங்கங்கே செல்வாக்குள்ள பெரிய தனக்காரர்களைப் பார்த்துப்பேசி, அவர்களுடைய சுகதுக்கங்களையறிந்து, தக்கபடி சமாதானப்படுத்திப்போவது அவசியமாம்.''

இவ்வாறு இந்தியாகவர்ன்மெண்டார் சொல்லிய விஷயங்கள் உத்தியோகஸ்தருக்குமட்டுமேயன்றி, மகாஜனங்களுக்கும் பொருந்தியவைகளாதலால், அவர்களும் இந்த லக்ஷியத்தை நன்குமதித்து, உத்தியோகஸ்தரை மரியாதையுடன் நடத்தி, மகா ஜனங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைப் பயப்படாமலும், கூசாமலும், ஒளிமறைவில்லாமலும், உள்ளபடியுரைத்துத் துரைத்தனம் தருமமார்க்கத்திலே செல்லுமாறு உதவிபுரிவார்களென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம்.

கர்நூல் புரோவின்ஷியல் கான்பேரன்ஸ்.

மதிராசு ராஜதானியின் க்ஷேமலாபங்களை விசாரிக்கவேண்டி வருஷவாரியாகக்கூடும் இம்மகா நாடு இந்த வருஷம் கர்நூலில் கூடிற்று. சென்ற ஜூன்மீ 9-தேதி முதல் மூன்றுநாள் மகாஜனப்பிரதிநிதிகள் ஒருங்கு கூடி, நமக்குவேண்டிய காரியங்களை முறையே விசாரித்துத் தீர்மானித்தார்கள். ஸ்ரீமான். பி. ஆர். சுந்தர அய்யரவர்கள் சபாநாயகராகி, நடக்கவேண்டியவைகளைச் சுருக்கி உரைத்தார். அவற்றுள் முக்கியமானவை (1) தென் ஆபிரிக்காவில் நம்மவர்கள் படும் கஷ்டங்களை அங்கிருந்து வெளி யேற்றப்பட்ட சில கனவான்களும், ஸ்ரீமான் போலக்கு துரையும், விவரித்து, அந்தக் கஷ்ட நிவாரணத்திற்காகச் செய்யும் பிரயத்தனங்களுக்கு உதவியாகப் பணம் சேகரிக்கப் பட்டது. (2) நமது கோயில்கள், மடங்கள் முதலிய பொதுச் சொத்துகளும், அவற்றின் தஸ்திக்குகளும் கண்டவர்தின்று,கேட்பாரற்றுக் கிடைப்பதை மாற்றவேண்டுமென்று நாம் பலவருஷங்களாகப் போராடி வருவது அபிமானிகளுக்குத் தெரியும். அதற்குப் பரிகாரம் சீக்கிரமாக வேண்டுமென்று இந்தச்சபையார் ஏகோபித்து ஒப்புக்கொண்டார்கள். (3) வித்தியாப்பியாச விஷயமாகச் சர்க்கார் சமீபகாலத்தில் செய்து வரும் காரியங்கள் க்ஷேமகரமல்லவென்றும், பள்ளிக்கூடங்களில் சம்பளங்களை உயர்த்தியும், பிரைவெட் கலாசாலைகளைப்பலவிதமாக நிர்ப்பந்தித்தும் வருவது நல்லதல்லவென்றும், மகாஜனங்களுடைய க்ஷேமத்தைக்கோரி சர்க்கார்தொழிற்சாலைமுதலிய என்ன உபாயங்களெடுத்தாலும், அவர்களில் பெரும்பாலருக்குச் சாமான்னியமாய் எழுதப்படிக்கத் தெரியாதவரை, இவையொன்றும் பயன்படாவென்றும், இந்தச் சபையார் ஒப்புக்கொண்டார்கள். (4) மற்றபடி இதற்குமுன் இச்சங்கங்களில் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்ட விஷயங்களெல்லாம் மறுபடியொப்புக்கொள்ளப்பட்டன.

இந்தச்சபைக்கு அநுபந்தமாக ‘ஆசார விமர்சன சபையும்’ வருஷவாரியாகப் பதிவுபோல் கூடிற்று. ஸ்ரீமான் கே. நடராஜ அய்யரவர்கள் அக்கிராசனாதிபதியாகி, நமக்குள் காணும் துராசாரங்களை வருணித்துப் பரிகாரமும் காட்டினார். ‘உயர்குலத்தவராகிய’ இந்தியர்களுக்குள் காணும் துராசாரங்களில் முக்கியமானவை அநேகமாய் எல்லோருக்கும் தெரியும். பதுமைக்கல்லியாணம், பெண்களுக்குள் கல்வியின்மை, கலியாணச்சிலவுகள், வரதக்ஷிணை, பரியம், கணக்கிலடங்காத ஜாதிபேதம், ‘இழிகுலத்தவருடைய’ கஷ்டநிஷ்டூரங்கள், ஆகிய இவைகளைப்பற்றிக் கேளாதவர் இக்காலத்தில் அநேகமாயில்லை யென்னலாம். ஆதலால் இவையெல்லாம் சீக்கிரம் தொலையவேண்டுமென்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். இவ்வருஷம் புதிதாக ஒரு விஷயம் மட்டும் கூடிற்று. தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்கு, நமது நாட்டுக் கூலிகள், ஆணும் பெண்ணும் அப்பாவிகளாகியிருப்

பவர், முறியெழுதிக் கொடுத்துப்போவதும், அவ்வாறு போவதற்குச் சர்க்கார் சம்மதிப்பதும் அதருமமென்றும், அக்கிரமமென்றும் எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள்.

இவ்விஷயமாக நமது நண்பர் ஸ்ரீமான் தாம்ஸன் பாதிரியார் எழுதுகிறார்:—"மகாஜன க்ஷேமத்தை நாடிப் பல காரியங்களாகி வருகின்றன. அவைகளில் "வியவசாயச் சங்கங்கள்" வெகு முக்கியமானவை. ஆனால் இவைகள் இந்தியாவில் இன்னும் வேரூன்றவில்லை. ஏனெனில், இவைகள் செழிக்கவேண்டுமானால், குடியானவர்களே இவைகளை நிர்வகித்து வரவேண்டும். குடியானவர்களுடைய க்ஷேமத்தையே இவைகள் கோரவேண்டும். குடியானவர்களே இவற்றிற்கு மெம்பர்களாகவேண்டும். இந்தியாவிலோ இப்படியொன்றுமில்லை. வியவசாயச் சங்கங்களை ஜமீன்தார்களும், சாவுகாரர்களும், வக்கீல்களும், வர்த்தகர்களுமே விசேஷித்து நடத்தி வந்தால், அவைகள் செழிப்பதெப்படி?

வியவசாயச் சங்கங்கள்.

அமெரிக்காவில் விசாரித்தால் சங்கதியே வேறாகிக் காணுகிறது. அவ்விடத்திய வியவசாயச்சங்கங்களுக்கு அபாரசக்தியுண்டு. பிரசிடெண்டுமுதல் குமஸ்தாவரை எல்லா உத்தியோகஸ்தரும், பூமியுழுது பயிரிடும் குடியானவருக்கு மரியாதை வைத்து அவர் சொல்லுவதை வெகுமானித்து நடக்கிறார்கள். அவ்விடத்தில் நடமாடும் பணவகைகளிலெல்லாம் குடியானவர் மீத்து வைக்கும் பணமே அதிகமாக நடமாடி வட்டி விகிதத்தைக் குறைக்கவோ, கூட்டவோ செய்கிறது.

இந்தியாவிலோ, "குடியானவன் வீட்டு அம்மியை அதிகாரி வீட்டுக் கோழி முட்டை உடைத்து விடுகிறது." இதை மாற்ற வேண்டுமானால் ஒரே உபாயம்தான் உள்ளது. இந்தியக் குடியானவர் எல்லா வருக்கத்தவரையும் ஒன்று சேர்த்து, வியவசாய சங்கங்களைப் பலப்படுத்தவேண்டும். ஓங்கோல் பண்டக் காக்ஷி வருஷாவருஷம் நடந்துவரும் அழகைப் பார்ப்பவருக்கு இது அசாத்தியமாகக் காணுவதில்லை. இவர்கள் ஒன்று சேர்ந்தால், 'பண்டங்களைப் பெருக்கி, வேண்டியவர்களுக்கு நெல்லூர் தினுசுமாடுகளையோ, காளைகளையோ விற்று, பெருத்த லாபமடையலாம்.

கிருஷிகர்கள் மெம்பராகாமலிருப்பது தோஷம்தான். அல்லாமலும், இச்சங்கங்களில் வியாபார முதலில்லாமலிருப்பது மற்றொரு பெரிய தோஷம். மேனாட்டு வியவசாயச் சங்கங்களில் பணம் வேண்டியமட்டிலிருப்பதால், பாலடைக்கட்டி, வெண்ணெய்,முதலிய சரக்குகளை இவைகள் மூலமாகப் பெரும்படியாகத் தயார் செய்து விற்றுவருகிறார்கள். அதனால் முந்தியிருந்த மாதிரி பெண்கள் தயிர்கடைந்து கடைந்து கை சோர்ந்துபோகிற கஷ்டம் இப்பொழுதில்லை. எல்லாம் யந்திரசகாயத்தால் நடக்கிறது. கறவைமாடுகள் நன்றாய்த்தின்று கொழுத்து, பாலும் சாஸ்திர சம்மதமாகக் கொடுக்கின்றன. முன்னாளில் ஆண்பிள்ளைகளுக்குப் பகல் முழுதும் வேலை. பெண் பிள்ளைகளுக்கோ இரவும் பகலும் வேலை. அதெல்லாம் இப்பொழுது மாறி, அநேகமாய் எல்லோருக்கும் எழுதப்படிக்க அவகாசமுண்டாகியிருக்கிறது. பழைய நாளில் பால், வெண்ணெய், முதலிய சரக்குகள், சாப்பிடுவோருக்குத் தோஷச்சுரம்,க்ஷயம் முதலிய வியாதிகளுக்கிடங்கொடுத்துக் கொன்று வந்தன. இப்பொழுதோ, அந்தச் சப்தமே கேட்பதில்லை.

பழைய நாளில் நகரத்துச்செட்டிகளுடைய பணத்தைக்கொண்டே கிருஷி நடந்ததில், குடியானவர் இவர்களுடைய அதீனமாகிப் பிராணன் போகாமற் கஞ்சிமட்டும் குடித்து வந்தார்கள். இப்பொழுதோகுடியானவர்களுடைய பணம் தான் ரயில்ரோடு போடுவதற்கும், வாய்க்கால் வெட்டுவதற்கும், ஏரி கட்டுவதற்கும் உபயோகப்படுகிறது. இந்தியாவிலும் இப்படி நடப்பது நலமா, அல்லவா, விவேகிகள் சொல்லட்டும்.

இந்தியாவில் வியவசாயச் சங்கங்கள் மாடு கன்றுகளை விருத்திசெய்ய ஆரம்பித்தால், அதனால் இந்திய நகரங்களுக்கு எவ்வளவு உபகாரமென்று நான் சொல்லவே வேண்டியதில்லை. இப்பொழுது நீலகிரியில் உதக மண்டலத்தில் 'பால்' என்று ஒருவஸ்து விற்கிறது. வெளுத்ததெல்லாம் பாலானால், இதுவும் பால்தான். ஆனால் அதில் தண்ணீர் எவ்வளவு, அது எந்தத் தண்ணீர், என்று விசாரித்தால், கெட்ட வேலையாகிவிடும். யாராகிலும் சில விவேகிகள் ஒன்று சேர்ந்து, இவ்விடத்தில் ஒருசங்கம் ஏற்படுத்தி, மாடுகன்றுகளை வாங்கி, முறைப்படி காரியம் நடத்திவந்தால், எல்லாருக்கும் மங்களம் கிடைக்கும். யார்செய்கிறார்கள் ?

தவிர வியவசாயத்தில் பெருங்காரியங்கள் பலர் சேர்ந்துதானாகவேண்டும். அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாகாணத்தில் பூமிக்குள் ஒரு பெரிய ஏரி இருப்பதாகத் தெரிந்தது. ஆனால் அந்த ஜலத்தைக் குழாய்கள் மூலமாய் வெளிப்படுத்துவதென்றால், ஒருவராலாகக்கூடியதல்ல. ஆகவே சங்கங்கள் பலசேர்ந்து, பூமியை மெம்பர்களுக்கு 100 ஏகராவிழுக்காடு சம்பாதித்துக்கொடுத்து, வேண்டியபணமும் உதவிக்காரியமாரம்பிக்கவே, இப்பொழுது அவ்விடமெல்லாம் நெல்விளைந்து, பொன்பொலிகிறது. ஆதலால் இத்தேசத்தவரும் தூக்கத்தைவிட்டு எழுந்து, ஒன்றுசேர்ந்து, கோஆபரேஷன் முறையில் வியவசாயத்தைப் பிரபலப்படுத்தினால், காலக்கிரமத்தில், மற்றையதேசத்துக் குடியானவரைப்போல் இவர்கள் சுகப்படுவதன்றி, அவர்களுக்கும் வேண்டியபடி யுக்தி சொல்லிக்கொடுக்கலாம்.''

இதை விஹாரிணி அபிமானிகள் அனைவரும், விசேஷமாகக் குடித்தனத்தில் அக்கரையுள்ளவர்களும், கவனிக்கவேண்டும். மொத்தத்தில் நமது பாதிரிநண்பர் சொல்லியதை நன்கு மதித்து, அவருடைய லக்ஷியத்தை நன்குணர்ந்தால், அவர் வக்கீல்கள், வியாபாரிகள் முதலியவர்களைக்குறித்துச் சொல்லியது காரமாகாதென்று நாம் உறுதியாய் நம்புகிறோம்.

**மைசூர் யுவராஜாவின் திருமணம்.**

மைசூர் சத்திரபதி மகாராஜாவின் தம்பியாகிய சத்திரபதி கண்டீரவ நரசராஜ அரசு பஹதூர் அவர்களுக்குச் சென்ற ஜூன்மீ 17-தேதி வெள்ளிக்கிழமைதினம் நடந்த கல்யாண மகோற்சவத்தை அபிமானிகள் அறிய வேண்டுகிறோம். அன்றையதினமும் அடுத்த நாலைந்து தினங்களிலும், மைசூரில்கண்ட சம்பிரமங்களை வருணிப்பதற்கு விஹாரிணியில் இடம் முதலிய சௌகரியமில்லாதது 'விசாரிக்கத்' தக்கதுதான். என்றாலும் இரண்டொரு விசேஷங்களை மட்டும் நாம் குறிப்பிடாமலிருக்க வொண்ணாது. முதலாவது, இந்தக்கல்யாண மகோற்சவத்தைக் குறித்து இந்தியாவெங்கும் பேசியும் எழுதியும் வருகிற அதிசயம். இதனால் மைசூர் ராஜ வமிசத்தினுடைய க்ஷேமாதிசயங்களை இந்தியாவிலுள்ள முக்கியஸ்தரெல்லோரும் தமதாகவே பாவித்து, அந்த வமிசம் மேலுமேலும் தழைக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக ஆசீர்வதித்து வருவது வெளியாகும். இரண்டாவது, இந்தியப்பிரபுக்கள், மகாஜனங்கள் அனைவருடையவும் பிரதிநிதிகளை மகாராஜா அவர்கள் வரவழைத்து உபசரித்துவந்த அதிசயம். அவ்வாறு சென்ற விருந்தினருள் திவான் பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரவர்கள் ஒருவர். இவ்வளவு விமரிசையாக இதுவரை பாரதவருஷத்திய முக்கியஸ்தரையெல்லாம் வரவழைத்துக் கல்யாணம் எந்தச்சமஸ்தானத்திலும் நடக்கவில்லையென்னல் சத்தியம்.

யுவராஜா அவர்களுக்குப் பாரியையாகிய சௌபாக்கியவதி கெம்பு செலுவராஜம்மணியவர்கள், 600-வருஷங்களுக் கதிகமாகவே மைசூர் சமஸ்தானத்திற்கு முதன் மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவுமிருந்து வந்த



மைசூர் யுவராஜாவின் திருமணம்

தோர் பெரியதும், புராதனமானதுமான அரச குடும்பத்தவர். மகோற்சவம் வெகு சம்பிரமாக நடந்தேறியதாகமட்டும் சொல்லி நிறுத்தவேண்டியிருக்கிறது.

கல்லியாணத்திற்கு முதல்நாள் யுவராஜாவுக்குக் குடும்ப வழக்கப்படி உபநயனம் நடந்தது. மறுநாள் குறித்த முகூர்த்தத்தில் விவாஹமும், அத்துடன் சேர்ந்த காசியாத்திரை முதலிய சடங்குகளும் நடந்தன. பிறகு உருட்டாணி (நலங்கு) முதலியன நடந்து கடைசியாக நாகவல்லியும் அதையனுசரித்து யானைமேல் ஊர்கோலமும் நடந்தன. இதன் பிறகு, வந்தவர்களுக்கெல்லாம் முகமன்கூறி, சால்வை முதலிய மரியாதைகள் செய்து வழியனுப்பினார்கள்.

கல்லியாணச் சடங்குகளைப் பார்க்குமிடத்து, சாமான்னிய இந்துக்களுள் காணும் சடங்குகள்தான் மகாராஜாக்களும் அனுஷ்டிப்பவையென்று காணும். ஆனால் ஒவ்வொரு சடங்கும் நடப்பது வெகுதூரம் வித்தியாசப்பட்டுக் காணுவது சகஜம். முக்கியமாக யானைமேல் ஊர்கோலமென்பது வெகு பெரிய உற்சவம். அதைப் பார்க்க வந்திருந்தவர் கணக்கிடமுடியாதவரென்னலாம். சத்திரபதி யுவராஜாவும் அவர் ராணியும், மக்கட்பேறு பிரபலித்து, நீடூழி வாழவேண்டுமென்பது நமது மனப்பூர்வமான பிரார்த்தனை.

தீக்குச்சி செய்தல்.

இந்தியா கவர்ன்மெண்டு பாரஸ்டு இலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் இந்தக் கைத்தொழில் இந்தியாவில் பிரபலிக்கவேண்டி ஆலோசித்ததில், இந்தியாவில்பலபிராந்தங்களிலும் கானல்களில் வளரும் மரவகைகளைக் குச்சியாகவேண்டியயோக்கியதை யுண்டாவென்று பரிக்ஷித்து, இன்ன இடங்களில் இவையகப்படுகின்றன வென்றும், ஆகையால், இன்ன இடங்களில் வேலையாரம்பிக்கலாமென்றும் கண்டு ஒரு ஜாப்தா தயார் செய்திருக்கிறார். அவைகளில், கோயம்புத்தூர் ஜில்லாவில் உடுமல்பேட்டையும் ஒன்றாகக் காணுவதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். தீக்குச்சி நல்ல சரக்காக மட்டுமிருந்தால், இந்த ராஜதானியில் மட்டுமே எத்தனையோ லக்ஷம் ரூபாய்க்குச் செலவுண்டு. ஆதலால் காலதாமதமின்றி, உடுமல்பேட்டை மகா ஜனங்களும், சுற்றுப் பக்கங்களில் பிழைக்கும் வழி யறிந்தவர்களும், சீக்கிரத்தில் இது விஷயமாக முயன்று ஆரம்பம் செய்வார்களென்று நம்புகிறோம். வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவதற்கு இதுவரை என்ன நியாயமிருந்தாலும், இனிமேல் இராதென்பது நிச்சயம்.

சமீபகாலத்தில் லாகோரில் ஒருபெரிய கம்பெனி உண்டாகிறதென்றும், அதில் தினமொன்றுக்கு 700-குரோஸ் பெட்டிகள் உண்டாகுமென்றும் கேட்டோம். ஆனால் அது யாரோ ஜர்மானிய புத்திமான் ஒருவர் முயற்சியென்று தெரிகிறது. அதனால் நமக்குப் பூராவாகப் பிரயோஜனமில்லை யாதலால், நம்மவர்கள் எப்படியாவது முயன்று, தொழில் கற்றவர்களை வரவழைத்து, வெகு அவசியமான இந்தச் சரக்கை இந்தத் தேசத்தில் எங்கெல்லாம் கூடுமோ, அவ்விடங்களில் உற்பத்தியாக்குவார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு சுவாமிகள்.

ஸ்ரீ சிருங்ககிரி குருபீடத்தைத் தற்காலம் அலங்கரித்து, வித்தை, விநயம் முதலிய குணங்களில் வெகுதூரம் சிறந்து, கீர்த்தி பெற்றுவிளங்கும்இந்தச்சுவாமிகள் காலடிப்பிரதிஷ்டை கழிந்தபின், கேரளத்தில் அங்கங்கே தங்கி மரியாதை பெற்றுக் கடைசியாய்ச் சென்ற ஜூன்மீ ஆரம்பத்தில் கோயமுத்தூர் வந்து ஒருபக்ஷம் தங்கிச் சிஷ்ய ஜனங்களால் அவரவர் சக்தியை யனுசரித்துப் பாதபூஜை முதலிய மரியாதைகள் பெற்றுப் போனார்கள்.

இதில் விசேஷ மொன்றுமில்லை யென்னலாம். ஏனெனில் மடாதிபதிகளுக்கு ஊரூராக விஜயம் செய்வதும், சிஷ்ய ஜனங்களிட

மிருந்து பலவகையானும் பணத்தைப் பறிப்பதும், வெகு நாளைய தருமமாகி வந்திருக்கிறது. இவ்விஷயத்தில் இந்த மடத்திற்கு விசேஷ அபக்கியாதி இல்லை யென்றாலும், கேரளத்தில் அனேகருக்குச் சுவாமிகளுடைய பரிவாரங்களால் சிரமமுண்டானதாகக் கேட்டு விசாரிக்கிறோம். நிற்க.

சுவாமிகள் விஷயத்தில் நாம் மேற்சொல்லியபடி வித்தை, விநயம் முதலிய பலசுபகுணங்கள் நிறைந்திருப்பதால், போனவிடங்களிலெல்லாம் வேண்டியபடி மரியாதை நடப்பது அதிசயமல்ல. முன்னொருமுறை நாம் இவ்விஷயமாய் எழுதியதில், சுவமதஸ்தர் மட்டுமேயன்றி விசிஷ்டாத்துவைத முதலிய பரமதஸ்தரும், சுவாமிகள் விஷயத்தில் ஒரேமாதிரி பக்தி வைத்திருப்பதாகச் சொன்னோம். அதுவும் அதிசயமாகக் காணவில்லை. ஸ்ரீ பகவத்பாத ஆசாரிய சுவாமிகள் அத்வைத மதஸ்தாபன விஷயமாய்ப் பிரவசனஞ்செய்தும், பாஷியாதிகளைப் பிரசுரித்தும் வந்தபின், அந்தப்பரம்பரையில் மடத்துக்கணக்குப்படி நாளதுவரை 33 ஆசாரிய புருஷரிருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தச் சங்கியையில் தற்காலமுள்ள சுவாமிகளைப்போல வித்தை, ஆசாரம், விநயம் முதலிய குணங்கள் கூடிப்பெருமை பெற்றவரெத்தனை பெயரென்றால், ஐந்து அல்லது ஆறு பெயர்கூடத் தேறுதென்று காணுகிறது. இந்தமடம் மட்டுமே யன்றி வேறெந்த மடங்களில் விசாரித்தாலும், அவ்விடத்தில் ரூபாய், அணா, பைசாவை யொழித்து வேறு பிரஸ்தாபம் விசேஷமாய்க்கேட்பதில்லை. ஆதலால், சுவாமிகள் பணவிஷயமான பேச்சைக் கட்டுடன் ஒழித்து, வாஸ்தவமான அர்த்தவிசாரத்திலும், கேட்பவருக்கு ஹிதத்தை உபதேசிப்பதிலும், காலத்தைக் கழித்து வருவது ஒரு பேருபகாரமென்பதில் ஐயமேயில்லை. ஏனெனில் சாமான்னிய தருமங்களையும், நம்போலியர் சொல்வதைவிட, பலவித மகிமைகளும் நன்கு வாய்ந்த குருபீடாதிபதிகள் உபந்நியசிப்பதில் பலன் எத்தனையோ மடங்கு அதிகமென்பது பிரத்தியக்ஷம்.

ஆதலால் இவ்வாறு தாம் போகுமிடங்களிலெல்லாம், சாமான்னியருக்குச் சாமான்னிய தருமங்களை உபதேசித்து வருவதில் சுவாமிகளுக்கும், கேட்போருக்கும், திருப்திகரமென்றே நாம் நம்பியிருக்கிறோம்.

ஆனால் பிரவசன விஷயங்களை யோசிக்குமிடத்துக் கொஞ்சம்போல அபிப்பிராயபேதத்திற்கு இடங்கொடுப்பதைச் சுவாமிகள் மன்னிக்கவேண்டும். மதம், ஆசாரம் இவைகளைப் பற்றித்தான் சுவாமிகள் பேசிவரவேண்டும். என்றாலும், இவ்விரண்டு வகையில் உள்ள அம்சங்களைச் சுருதிபூர்வகமாய் உதகரிப்பது அவர்களுடைய முக்கிய தர்மமென்பது வாஸ்தவமாகிலும், யுக்தி, அனுபவமாகிய இரண்டும் காலதேசவர்த்தமானங்களையனுசரித்தே போவது நலம். ஆதலால், தற்காலம் ஆகவேண்டியவைகளான வித்தியாப்பியாசம், அன்னிய தேசயாத்திரை, விவாகவிஷயம், பெண்கல்வி, ஒரேஜாதியில் காணும் பரஸ்பரபேதங்கள், முதலியவைகளைக் குறித்துச் சுவாமிகள் கோயமுத்தூரில் பேசியபடி பேசி வருவதில் அதிகமாகப் பிரயோஜனமிராதென்றே நம்மில் படிப்பும், அனுபவமுமுள்ள பெரியோர் அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதுநியாயமென்றேநமக்கும் காணுகிறது. சுவாமிகளுட்பட, மானுஷியமாயுள்ள யாருக்கும் சர்வக்ஞத்துவம் கிடையாதாதலால், எந்த விஷயத்தில் அவரவர் பரிசிரமப்பட்டிருக்கிறார்களோ, அதைப்பற்றியே பிரவசனஞ் செய்வது உத்தமம். சுவாமிகளுடைய ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ பகவத் பாத சுவாமிகளுடைய சித்தாந்தத்தை யனுசரித்து, சாமான்னியமாய்ப் புகட்டக்கூடிய தர்மங்கள் அபாரமாயிருப்பதாலும், நிராக்ஷேபகரமாயிருப்பதாலும், அவற்றை விஸ்தரிப்பதும், இம்மாதிரி கேவலம் லௌகிகமாயிருக்கும் விஷயங்களை, சாஸ்திரம் படித்து, லௌகிகத்தையே




ஸ்ரீமான் சரத்குமார் மல்லிக்

அனுசரித்து வந்திருக்கும் கிரகஸ்த சிஷ்யருக்கு ஒப்புவித்துவிடுவதும், யுக்தமென்று நமக்குக் காணுகிறது. சுவாமிகளுக்கும் அதி சம்மதமாகக் காணுமென்றே நம்புகிறோம்.

தவிர இதுவும், இதுபோன்ற வேறிரண்டொரு மூல தோஷங்களும் பரிகாரமாக வேண்டுமானால், அவைகளைத் தீர விசாரித்துப் பழைய அனுபவம், ஐதிகம் முதலியவற்றை யனுசரித்து மடவிஷயமாகச் சிலதிருத்தங்கள் ஆகவேண்டும். அதற்கு இம்மாதிரி சற்குண சம்பன்னராகிய மகான் அனுகூலமாகவேயிருப்பாரென்று நமக்கு நிச்சயமிருப்பதால், கூடிய சீக்கிரத்தில் வேறொரு சந்தர்ப்பத்தில், அதை விவரிப்பதாக யோசித்திருக்கிறோம். முக்கியமாக அவைகள் மடத்துக்காரியங்களை விசாரிப்பதிலும், பரம்பரை கிரமமாக நடப்பதிலும் ஆகவேண்டிய விமர்சனங்களாம். இவை இந்த ஒரு மடத்தில் காணுமாகில், வேறு மடங்களுக்கும் காலக்கிரமத்தில் வழி பிறப்பது நிச்சயம். அவ்வாறு விமரிசையாகி நடப்பதில் கிடைக்கக்கூடிய பலனைப்பற்றியோ நாம் பேசவேண்டியதேயில்லை.

கல்கத்தா தேசீய அயுர் வேதவித்தியா சாலை.

இப்பொழுது கொஞ்ச காலத்திற்குள் ஏற்பட்டிருக்கும் இந்தக் கலாசாலையையும், அதை யேற்படுத்தி நடத்தி வருபவருக்கிருக்கும் லக்ஷியத்தையும், நமது ஜனங்கள் அறிய வேண்டுகிறோம். பங்காளத்தில் தான் அற்புதங்களெல்லாம் காணுவது போலும். ஒருபக்கத்தில் வெடிகுண்டு போன்ற வேண்டாக்காரியங்கள் கண்டாலும், மற்ற பக்கத்தில் இம்மாதிரியான உத்தம காரியங்களும் அங்கேதான் நடந்துவரக்கூடுமென்று காணுகிறது.

ஏனெனில் இந்த வைத்திய சாலையில் மேனாட்டு முறையில் கைதேர்ந்து, வெகுவருஷங்களாய் சர்க்கார் தரயில் உயர்ந்த பதவியிலுழைத்துக் கீர்த்திபெற்ற பங்காள வைத்திய சிரோன்மணிகள் தருமார்த்தமாகப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதா யேற்றுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதென்றால் சாத்தியப்படாத காரியம். இப்படியிருந்தும், கட்டிடம், கருவிகள் முதலியவற்றிற்கு எத்தனையோ லக்ஷம் வேண்டிவந்ததில், அந்தத்தொகை சிரமமில்லாமல் வசூலாகிக் காரியமு மாரம்பமாகிவிட்டது. டாக்டர் ஸ்ரீமான் சரத்மல்லிகர் அத்தியக்ஷராகி நடத்தி வருகிறார். மேனாட்டு ரணவைத்தியமும், தேசீய சிகிச்சையும் இரண்டும் ஒட்டி வருவதால், இதில் படித்துத்தேறி வரும் வைத்தியர்களுக்கு இனி வெகு நல்ல காலமிருப்பதாக நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம். நமது பிராந்தத்திலிருந்தும் சில குமாரர்கள் போயிருப்பது நற்குறியாம்.

இந்துஸ்தானத்தில் இவ்வாறு வைத்தியம், கலைகள் முதலிய பலவகை வித்தைகளும், தொழில்களும், பிரபலிக்க வேண்டிப் பொருளுதவியும், தேகப்பிரயாசையும் வேண்டிய போது, வேண்டியமட்டில் கிடைக்கவும், இந்தக்கர்ம பூமி சங்கதி எப்படியிருக்கிறது? நாலுபெயரும் சொன்னப்படிதான். அம்மாதிரிப்பெரிய கைகளுமில்லை. சுமாராயிருப்பவருக்கு இப்படிப்பட்ட தரும சிந்தையுமில்லை. கனம் ஜட்ஜி ஸ்ரீமான் வி. கிருஷ்ணசுவாமி அய்யர் ஒருவர்தாம் நாளதுவரை உப்புக்கல் போல் தப்பித் தன்னாலியன்றவரை தருமம் இவ்வழியில் செய்திருப்பவர். அவருடைய காற்று இன்னும் யாருக்கும் அடிக்கவில்லை. கல்கத்தாவை ஒட்டியாவது ஏதாகிலும் சில்லரைப் பிரயத்தனம் நடந்தால் நலம். அதற்குத் திரவியமும், ஜன சகாயமும் வேண்டும். எங்கே போகிறது? தெரியவில்லை. பங்காளத்திலிருப்பவர்போல் ஜமீன்தார்களில்லை யென்பது வாஸ்தவந்தான். ஆனால் இருப்பவர் தங்களாலியன்றதையெல்லாம் செய்தாகிவிட்டதா வென்பதை நாம் ஆலோசிக்கவேண்டும். அல்லாமல், மேனாட்டு முறையில் கைதேர்ந்த டாக்

டர்களில், இங்கிருப்பவர் எத்தனை பெயர் டாக்டர் ஸ்ரீமான் சரத்மல்லிகர்போல தருமத்திற்கு உழைக்கத்தயாரென்பது நமக்குத் தெரிந்தபாடில்லை. நற்காலம் எப்போது வருமோ அறியோம்.

**மற்றொரு பிரும்ம சுவரூபிணி கேஸ்.**

கோயமுத்தூர் ஜில்லா கரூர் தாலூகாவில் மாஜிஸ்திரேட்டாக இருந்த வியாசராவ் என்னும் பிராம்மணரொருவருக்கு லஞ்சம் வாங்கியது முதலிய குற்றங்களேற்பட்டு 18-மாசம் தண்டனையாகிவிட்டது. உத்தியோக தருமத்தை மறந்து, சத்தியம் முதலிய குணங்களையும் கைவிட்டுத் தப்புவழியில் அனேகர் பிரவேசிப்பது நிசமாகையாலும், அவரனைவரும் அகப்படுவதில்லையாதலாலும், அகப்பட்டவர்களை சிக்ஷிப்பது கிரமம்தான். ஆனால் இந்தக்கேசில் வேறு சில விசேஷங்களிருப்பதால், அவைகளை அபிமானிகள் அறியவேண்டுகிறோம்.

தண்டனையடைந்த வியாசராவ் என்பவர் நல்ல குலத்திலுதித்தவர். அவருடன் பிறந்தவர்களும், அவருடைய தகப்பனார், பாட்டனார் முதலியோரும் சர்க்கார் தரபிலோ, வேறு வகையிலோ நல்ல பதவிகளைப்பெற்று, மரியாதையாகவும், வாகினியாகவும் ஜீவித்துவந்தவர்கள். வியாசராயரும் சுமார் 1900-ம்௵ வரை பழைய சம்பிரதாயப்படியே யிருந்து, ஸ்நானம், நித்தியவிதிகள் முதலிய காரியங்களில் சிரத்தையுடனும், தமையன் முதலிய பெரியோர்களிடத்தில் பக்தியுடனும், நல்ல மாதிரியாகவே காலங்கழித்து, சர்க்கார் ஊழியத்திலும் வெகு நாணயமாக நடந்துவந்தவர்.

பிறகு மேற்சொல்லிய வருஷத்திலோ, அல்லது ஏறக்குறைய அந்தக்காலத்திலோ, வியாசராயருக்குக் கிரகணம் பிடித்தது. அதாவது கோயமுத்தூருக்குச் சுமார் 8-மைல் தூரத்தில் 'விளாங்குரிச்சி' யென்கிற கிராமத்தில், சென்ற 30-௵ காலமாக வேதாந்தி வேஷம் பூண்டு, யோகம் முதலிய செப்பிடு வித்தைகள் மூலமாய்ச்சில புத்திமான்களையும், பல மூடர்களையும் கைவசமாக்கிக்கொண்டு, எல்லாரையும் காணிக்கை சமர்ப்பிக்கச் செய்து, வரவுசெலவு விஷயத்தில் வெகு சிரத்தையாக இருந்துவரும் தட்டானொருவனுடைய வலையில் இவரும் அகப்பட்டார். அது முதல் குருபக்தி வெகுவாய் முற்றி, சம்பாத்தியத்தில் ஒரு பகுதியைக் கெடுத்தவறாமல் மணியார்டர் செய்து, சமயம் கிடைத்தபோதெல்லாம் சுவாமியார் சன்னிதிக்கு ஓடியும், உற்றார், உறவினர், சுற்றம், பந்து, பிள்ளை, பெண் முதலிய யாரையும் பக்கத்தில் அணுகவொட்டாமலும், அவர்களுடைய க்ஷேமலாபத்தைக் கவனியாமலும், வந்தவர்களை வெருட்டியும், பெரியாரை யிகழ்ந்தும், நித்தியவிதிகளை மறந்தும், வந்து கடைசியில் உத்தியோகதருமத்தையும் கைவிட்டு இந்தக் கதியானார். வேறு அனேக உத்தியோகஸ்தரும் இவ்வாறு போஸ்து (அபின் செடிக்கொழுந்து) தின்று, புத்தியை யிழந்து, பல அனர்த்தங்களுக்கு இடமுண்டாக்கிக்கொண்டு திரிகிறார்கள்.

அனேகம் மோசங்களை நிறுத்தச் சட்டமேற்பட்டிருந்தும், சுமுகம் அய்யர், இந்தத் தட்டான், முதலிய பெருமோசக்காரரைக் கண்டிக்கச் சட்டமொன்றும் காணவில்லையே யென்பது சாதுக்கள் சங்கடப்படவேண்டிய விஷயம். ஆனால் விளக்கைப் பிடித்துக்கொண்டே கிணற்றில் விழுபவரைத் தடுக்க யாரால் முடியும்? ஓ விவேகிகளே, இனியாகிலும் புத்தியாய்ப் பிழையுங்கள்.

## கிராமப் பாங்குகளுக்குள்ள தசை

எடிட்டர்

வைகாசி மாதத்திய விஹாரிணியில் இவ்விஷயமாய் ஒரு வியாசம் மொழி பெயர்த்தோம். அதில் கிராமங்களுக்கு முன்னிருந்த தசையும், இனிவரக் கூடிய தசையும் ஏதோ ஒருவாறு கண்டிருந்த போதிலும், சாமான்னியருக்கு அனேக அம்சங்கள் தெரியாததுகொண்டு, அதை யனுசரித்தே கொஞ்சம் விரிவாக நாம் இந்தச் சஞ்சிகையிலும், வேண்டுமானால் அடுத்த சஞ்சிகைகளிலும், எழுதுவதாக உத்தேசித்திருக்கிறோம். பிரிட்டிஷ் ராஜாங்கம் ஏற்படு முன்னும், அது ஏற்பட்டு வந்த 19-ம் நூற்றாண்டு ஆரம்பத்திலு முண்டாகிய மாறுதல்களை முதன் முதல் விளக்குவோம்.

புராதனமாக, அனேகமாயிரம் வருஷங்களாய், இந்தியாவில் பொதுக்காரியங்கள் எப்படி நடந்து வந்திருக்கின்றன, என்று விசாரித்தால், கிராமத்தை மூலாதாரமாகக் கொண்டுதான் என்று தைரியமாய்ச் சொல்லலாம். இந்தியா படத்தை விரித்துப்பார்த்தால், இக்காலத்திலும் அப்படியேதான் எங்கும் கிராமமயமாகக் காணுகிறது. ஆனால் பழையநாளில் தலைமுறை தலைமுறையாகக் கிராமங்களில் எத்தனையோ ஆயிரம் வருஷம் விசேஷமாறுதலில்லாமல் நடந்துவந்த மரியாதைகள் எல்லாம், சென்ற நூறுவருஷத்திற்குள் மாறிப்போயினவென்பது கொஞ்சம் யோசிப்பவர்களுக்குக் காணும். அப்படி மாறுவதற்குச் சில விஷயங்களில் சர்க்காரும், சிலஅம்சங்களில் நாமும் காரணம். இருதிறத்தாரும் வேண்டுமென்று ஒரு கெடுதலும் செய்தவர்களல்லர். நலத்தையெண்ணியேதான் ஒவ்வொரு காரியமும் நடந்தது. ஆனால் அநேக காரியங்களுக்குப் பலன் இன்னவையென்பது முன்னாடிச் சொல்லக் கூடாமலிருப்பதால், கிராமங்கள் விஷயத்திலும் அப்படியேயாயின. இரண்டொரு உதாரணம் இதை விளக்கும்.

முன்னாட்களில், கிராமத்திற்குரிய சகல காரியங்களும் கிராமப் பஞ்சாயத்திலும், கிராமச்சாவடியிலோ, மரத்தடியிலோ கூடும் மகா ஜனசபைகளிலும், பேசித் தீர்மானமாகும். சர்க்கார் தீர்வையைக் கிராமத்தார் தங்களுடைய சிப்பந்திகளைக்கொண்டே வசூல்செய்து மொத்தமாகக் கஜானாவில் செலுத்துவார்கள். கிராமத்தில் ரிவினியூ விஷயமாகவும், தாயபாகம் முதலிய விஷயமாகவும் நடக்கும் விவகாரங்களெல்லாம் பெரியதனக்காரருடைய தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும். கிராமப் போலீஸும் அப்படியே.

இவ்வாறு முக்கிய காரியங்களெல்லாம் கிராமத்தாரைப் பொறுத்தேயாகி வந்ததில், ஒருவருக்கொருவர் தாக்ஷிண்ணியப்படவேண்டியதும், ஒருவரையொருவர் அனுசரிக்கவேண்டியதும் நியமமாயிற்று. எல்லோரும் ஒருமித்தேயிருந்து தீரவேண்டியதுகொண்டு, கக்ஷிகள் வலுக்க நியாயமின்றி யிருந்தது. அப்படியேதாகிலும் வலுப்பதானாலும், வேற்றூரார் உபத்திரவித்தாலும், அதற்குச் சர்க்கார் உதவி வேண்டுவதுண்டு. ஆனாலிது வெகு அபூர்வம்.

பிரிட்டிஷ் துரைத்தனமேற்பட்டது முதல் விசாரித்தாலோ, சுமார் நூறு வருஷமாக இந்தியாவெங்கும் ஒரே விதமான மாறுதல் கிராமங்களிலுண்டாகிவந்தது. மேற்கண்ட விஷயங்களிலெல்லாம் ஒவ்வொன்றாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர் பிரவேசித்து நடத்தத் தலைப்பட்டார்கள். ஆகவே, கிராமத்தாருக்கும், கிராமப் பஞ்சாயத்திற்கும், கிராமச்சாவடிக்கும் மகிமை குறைந்தது. இவைகளைக்கெடுக்கவேண்டுமென்பதுசர்க்காருடைய எண்ணமல்லவென்று முன்னமே நாம் பேசியிருக்கிறோம். அக்காலத்திய உத்தியோகஸ்தர் தங்களுக்கு நலமென்று கண்டதையெல்லாம் ஊர்ஜிதப்படுத்தி வந்ததில், அவற்றின் துர் லக்ஷணங்கள் இப்பொழுது கொஞ்சகாலமாகத்தான் நன்றாகக் கண்டு

வருகின்றன. சர்க்காருடைய சக்தி அபாரமாதலாலும், சட்டம் முதலியன தரும மார்க்கமாயிருந்ததாலும், துரைத்தனஞ் செய்பவரெல்லாம் புத்திமான்களும்,யோக்கியருமாதலாலும், இந்த மூலமாய் நடக்கும் காரியங்களுக்குக் குறைவும் இருப்பது சாத்தியமென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. ஆகவே கிராமத்தாருடைய அதிகாரம் சிறிது சிறிதாக எங்குமில்லாமற் போய்விட்டது.

ஜனங்கள் இதை வேண்டியதற்கோ ஒருகாரணம் முக்கியம். தொன்று தொட்டு வந்திருந்த கிராமப்பஞ்சாயத்து முதலிய சாதனங்களுக்கு, அவைகளை அடக்கியாளும் தரும துரைத்தனம் வலுத்திருந்தவரை குறைவொன்று மிருக்கவில்லை. சேர சோழ பாண்டியரோ, பல்லவர்களோ, நாயக்கன்மாரோ, மகம்மதீய நவாப்புகளோ, யாராகிலும ஓர் கைவலுத்த அதிகாரியிருந்து இவைகளை யடக்கியாளும் வரை, இவை நேர் வழியிலேயே போயின. பிறகு, பதினெட்டாவது நூற்றாண்டில், தேசமெங்கும் குழப்ப முண்டாகி, அதிகார மின்னவிடத்தில் தான் நிலைபெறுமென்று சொல்லுவதற்கில்லாமற் போகவே, தடியெடுத்தவனெல்லாம் தண்டற்காரனாகிவிட்டான். ஊரில் கக்ஷிகளதிகரித்துப் பெரியதனக்காரருடைய வழக்குகள் முற்றிப்போயின. பஞ்சாயத்துகள் தத்தளித்து, கைவலுத்தவன் காணியாக நியாயங்களைப் பைசலாக்கி வந்தன. ஆகவே இந்த அநியாயம் எப்போது தொலையுமென்றும், தருமதுரை யெப்போது வருவாரென்றும், கிராமத்தவர் காத்திருந்தார்கள். இப்படி யெங்கே பார்த்தாலும்,

கொடுங்கோல் வேந்தன் குடிகள்போலப்
படுங்கதிரமயம் பார்த்திருந்தோர்க்குப்
பன் மீன்றானையொடு பாற்கதிர் பரப்பித்,
தென்னவன் குலமுதற் செல்வன்றோன்றி,

யென்றபடி பிரிட்டிஷ் துரைத்தனமும், அத்துடன் மகா ஜனங்களுக்குக் கலகமுதலிய பீடைகள் நீங்கி அதனாலுண்டாகும் நற்பயனும் கிடைத்தன. 1858-ம் ௵த்திய மகா சாஸனம்போன்ற துரைத்தன நீதியைப் படிப்பவருக்கும், கேட்பவருக்கும், ஆனந்தமுண்டாவதற்குக் கேட்பானேன். ஆதலால் ஜனங்களெல்லாருக்கும் இம்மாதிரிச் சர்க்கார் கிடைத்ததற்காகக் கடவுளை வாழ்த்தவும், அவர்கள் நியமனப்படி நடக்கவும் உற்சாகமுண்டாயிற்று. ஆகவே பழைய வழக்கங்களெல்லாம் சிறிது சிறிதாக மாறிப்போயின. ரிவினியூ தகரார்களெல்லாம் கலெக்டர் முதலியவரிடத்திலும், அடிதடி வழக்குகள் மாஜிஸ்டிரேட்டுகளிடத்திலும், சிவில் வியாச்சியங்கள் முன்சீபு முதலிய பெரிய கோர்ட்டுகளிலும், பைசலாகி வந்தன. வக்கீல்களும் சட்டங்களும் பலத்துவர, கக்ஷிகளும் பலத்து வந்ததில், ஊரில் பெரியதனமென்பது இல்லாமலே போய்விட்டது. ஏரி, வாய்க்கால், குளம், முதலியவற்றின் மராமத்துகளும், பாசன முறைகளும், ஒரு டிபார்ட்மெண்டுக்கு அதீனமாகிச் சாஸ்திர ரகசியந் தெரிந்த சிலர் கையுளடங்கிப்போக, அவ்விஷயத்திலும் கிராமக்கட்டுப் பிரிந்தது.

ஆனால் இவைகளையெல்லாங்கொண்டு இந்தப் பிரகிருதத்திற்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லையென்னலாம். என்றாலும் இவற்றையனுசரித்தே பத்திலொன்றாக நமது விஷயமும் அடங்குவதுகொண்டு இவற்றைச்சுட்டிப் பேசநேரிட்டது. அதாவது கிராமவாசிகளாகிய குடித்தனக்காரருள் வறுமையும், கடனும் அதிகரித்து வந்ததாகிய துர்லக்ஷணமாம்.

கிஸ்து பழையகால முறைப்படி மகசூலில் ஏதோ ஒரு பகுதியிருக்கும்வரை குடியானவனுக்கு வெள்ளிப்பணம் விசேஷமாகவேண்டியிருக்கவில்லை. குடும்பச் செலவிற்காகவோ, விவசாய முட்டுவழிக்காகவோ,பணம் வேண்டியிருந்தால், 'செல்லுஞ் செல்லாத்திற்குச்செட்டியார்' இருந்தார். அவரிடத்தில் கடன் வாங்குபவரும், கொடுப்பவரும், பரஸ்பரம் நன்று

கத் தெரிந்தவர்களாதல் கொண்டு லேவாதேவி மாமூலை யனுசரித்தே நடந்து வந்தது. வட்டி யதிகம் வேண்டுமென்றாலும், வேறு ஏதாகிலும் புதுமைசொன்னாலும், அதற்குப்பதிவுண்டோவென்று கேட்பார்கள். பதிவுக்கு விரோதமாக நடப்பதால் செட்டியாருக்கு இருவகை பயமுண்டு. குடித்தனக்காரர் ஓட்டாண்டிகளாவதில், காலக்கிரமத்தில் தன் தொழிலுக்கு லோபம் வந்துவிடுமென்னும் பயமொரு புறத்திலும், அப்படி யெல்லோரும் ஓட்டாண்டியானால் தன்மேல் அவர்களுக்கு க்ஷாத்திரமுண்டாகி, அதனால் தனக்கு ஏதாகிலும் பிராயச்சித்தமுண்டாகிவிடுமென்னும் பயம் ஒரு புறத்திலுமிருந்து வந்ததால், அவர் மிதமீறிப்போவதில்லை.

பிரிட்டிஷ்துரைத்தனமேற்பட்டபின் கிஸ்து வெள்ளிப்பணமாகவே செலுத்தவேண்டி வந்ததன்றிச் சாவுகாருக்குப் பழைய பயமும் விட்டுப்போயிற்று. ஏனெனில் புதுச்சட்டங்களுக்கும், கோர்ட்டுகளுக்கும், வக்கீல்களுக்கும் பிராபல்லியமதிகரிக்க அதிகரிக்க, மாமூலுக்கு வலிமை குறைந்து வந்து, எந்த அக்கிரமம் நடந்தாலும் அதற்குப்பழையபடி பிராயச்சித்தம் நடப்பதுகூடாமற்போயிற்று. ஒருசில்லரை விஷயம் இதைநன்கு விளக்கும். குடியானவனுக்கு மகசூல் ஒரு மாசத்திற்குள்ளாக வீடு வந்து சேரலாம். என்றாலும் கிஸ்துக்காகவோ, வேறு அவசர நிமித்தமாகவோ பணம் அந்த க்ஷணமே வேண்டும். சாவுகார் தவிர வேறு யாரும் பணம் படைத்தவரில்லை. ஆதலால் அவர்கேட்பதைக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் தான் பணம் பெயரும். திம்மனுக்கு இருபது கண்டகம் ராகி இன்னும் ஒரு மாதத்தில் கிடைக்கும். அப்போது ராகி விலை கண்டகம் 6-ரூபாய்க்கு விற்கலாம். ஆனால் இப்போது திம்மனுக்கு 15-ரூபா வெகு அவசரம். சாவுகாரைக் கேட்டால், அறுவடையானவுடன் தலையுதிராக 5-கண்டகம் அளப்பதானால் கொடுப்பதாகச் சொல்லுகிறார். கொடுத்துத் தொலைக்கவேணும். நிவிருத்தியில்லை. இப்படிச் சிறு தொகை வாங்குவதை விட்டுப் பெருந்தொகையாக ஏதாகிலும் வாங்கிவிட்டாலோ, காலக்கிரமத்தில் பூமி காணி முதலிய சகல சொத்தையும் தோற்றுவிட்டுக் கோவணாண்டியாய்ப்போவது அனேகமாய் நிஷ்கரிஷைதான். இப்படியாகவே, இந்தியா தேசமெங்கும் மொத்தத்திலும், தக்ஷிணமேட்டுப் பிராந்தமாகிய பம்பாய் முதலிய சில பிரதேசங்களில் விசேஷித்தும், சாவுகார் கைவலுத்துக் குடியானவர் க்ஷீணித்து வந்தார்கள். இதுதான் பூர்வகதை சங்கிரகம்.

இது சர்க்காருக்கு விசதமானவுடன் பரிகாரம் தேட வேண்டியது அவசியமாயிற்று. மூன்று விதமாக இதற்கு உபாயம் விசாரிக்கப்பட்டது. முதலாவது பூமியைக் கிரய விக்கிரயம் செய்வதில் ஏற்படக்கூடிய நிர்ப்பந்தம். இப்பொழுது நம்மில் கிரயம் முதலியவற்றிற்கு சாசனம் பிறப்பதானால், அதில் இம்மாதிரி வாசகங் காணுவது சகஜம். அதாவது, இன்ன உடைமையை வாங்கிக் கொள்பவர், "தானாதி விக்கிரயங்களுக்கு யோக்கியமாய், புத்திர பௌத்திர பாரம்பரியமாய், ஆசந்திரார்க்கம்" அனுபவித்துக்கொள்ள வேண்டுமென்பது. இதைக் கொஞ்சம் நிர்ப்பந்தித்து, கிரயவிக்கிரய மென்பது உடைமைக்காரர் இஷ்டம் போலிருக்கக் கூடாதென்றும், அப்படியேதாவது பூமியைக் கொடுப்பதும் வாங்குவதும் அவசியமானால், குடித்தனக்காரருக்குள்ளாகவே அந்த வியாபாரம் நடக்க வேண்டுமல்லது சாவுகார், வக்கீல் முதலியோருக்கு விற்கக்கூடாதென்றும், சட்டம் ஏற்படுவது நலமென்று ஒரு கக்ஷியாருடைய வாதம்.

காரணம் சுலபமாய் விளங்கும். வாங்குபவர் குறைந்துவந்தால் பூமிக்குக் கிராக்கி குறையும். குறைந்தால் விற்க எண்ணமுள்ளவர்கள் அவ்வளவாகத் தீவரப்படமாட்

டார்கள். பூமியை அடைவுவைத்துப் பணம் வாங்குவதும் மட்டுப்படும். இப்பொழுதிருக்கிறபடி, குடியானவருக்குப் பூமியை அடைத்துக் கடன்படுவதும், பிறகு விற்றுவிடுவதும், சுலபமா யிருக்கிறபடியாலும், சாமான்னியமாய் அவர்களுக்கு முன்யோசனை யென்பது விசேஷமாயில்லாததாலும், ஒரு குடியில் ஒரு பூமி இரண்டு தலைமுறை தாங்குவதுகூட சிரமமாகக்காணுகிறது. தவிர இந்தச்சாதியில், எதையாவது மீத்துவைப்பதும், வியாதி, மூப்பு முதலிய காலத்தில், உதவும்படி சேர்த்துவைப்பதும், எக்காலத்தும் இல்லை. இந்த வருஷம் நன்றாக விளைந்தால், அதைக்கொண்டு மக்களுக்குக் கலியாணம் நடத்திவிடுவது. பிறகு இவர்களில் ஒவ்வொருவரும் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வது. இந்தச்சமயத்தில் எப்போதாகிலும் ஒருமுறை மழை பெய்யாவிட்டால், எல்லோரும் பிழைக்க வகையில்லாமல், பெருவாரியாகக் கூண்டுடன் கைலாசம்போவது. இப்படி மொத்தத்தில் பதிவாகிவிட்டதால், இவர்களைக் கலியாணத்திற்கு வகையில்லாமல் செய்துவிடவேண்டுமென்பது இந்தக் கக்ஷியாருடைய முக்கிய மதம். கலியாணத்தின் இழவுபேரிழவாயிருப்பதால்காளைகளுக்கு நடக்கிறமாதிரி செய்துவிடக்கூடுமானால் மெத்தவும் நலம்தான்! அது சாத்தியமில்லையாதலால், அதற்கிரண்டாவதாகப் பூஸ்திதியில் அவர்களுக்கிருக்கும் உரிமையைச் சற்று மட்டம் தட்டிவிடுவது நல்லதென்று இவர்கள் மதம். பம்பாயிலும், பஞ்சாபிலும், இம்மாதிரி யேதோ இரண்டொரு சட்டம் பிறந்ததாக ஞாபகம். ஆனலதனால் விசேஷப் பிரயோஜனமில்லையென்பது அனுபவ சித்தமாயிருக்கிறது. ஆதலால் இது தேசமெங்கும் பிரபலிக்கவில்லை. தவிர இந்தியக் குடியானவர், இந்தியாவிலுள்ள வேறு சில வர்க்கத்தவரைப்போல், மக்கட்பேறினால் விசேஷமாக உபத்திரவப்படுவதில்லை யென்றும், பிறந்தமக்கள் ஆண் பெண்ணனைவரும் உழைத்துத்தான் ஜீவனம் செய்கிறார்களென்றும், அவர்கள் கஷ்டப்படுவது வாஸ்தவமென்றாலும், அதற்குக் காரணம் வேறென்றும், விவேகிகளில் அனேகர் எதிர்வாதம் சொல்லிவந்ததால், அதையும் நம்பத்தான்வேண்டியாயிற்று.

இரண்டாவது, குடியானவருக்குப் பூமி தரஸ்துகளுக்காகவும், எருது முதலியன வாங்குவதற்காகவும், கிணறு முதலியன வெட்டுவதற்காகவும், சகாயம் கவர்ன்மெண்டாரே செய்து வருவதற்கு எடுத்த உபாயமாம். இது இந்தியாவெங்கும் நடக்கவேண்டுமென்பது சர்க்காருடைய எண்ணமாதலால், இதற்காகச் சட்டங்கள் அனேகமா யெங்கும் பிறந்து அனேக வருஷங்களாக வேலை நடந்து வருவதாகவே சொல்லலாம். ஆனல் இந்த உபாயம் முற்றும் பலிக்கவில்லை யென்பதே வருஷாவருஷம் நாம் கேட்கும் பல்லவம். இதற்கு இருதிறத்தாரும் காரணமென்னல் தகும். சர்க்கார் மூலமாகப் பணம் வாங்குவது சுலபமல்ல. சுவாமி வரங்கொடுத்தாலும், பூசாரி கொடுப்பதில்லை யென்பது எல்லோருமறிந்த ரகசியம். ஆனல் சர்க்காரென்ன செய்யலாம்? உத்தியோகஸ்தர் மூலமாகத்தான் நடவடிக்கை நடத்தவேண்டும். உத்தியோகஸ்தரும் ஒரே மாதிரியாயிருப்பதில்லை. தவிரக் கடன் வாங்கும் குடிகளும் பொறுப்பில்லாமல் காரியம் செய்து விடுகிறார்கள். கிணறுவெட்ட வாங்கிய பணம் பூதபலியாகிவிடுகிறது. இப்படியிருவகைக்காரணங்களாலும், மொத்தத்தில் காரியம் கைகூடவில்லையென்பது நிச்சயமாயிற்று.

ஆகவே இதற்கென்ன செய்வதென்று ஆங்காங்கு உத்தியோகஸ்தர் விசாரித்ததில், நமது ராஜதானியில் 1892-ம௵த்தில் சர். எப். நிக்கல்ஸன்துரை இதைக்குறித்து இரண்டு பகுதிகளாகப் பெரிய புஸ்தகமொன்று எழுதினர். அவர் அதில் சொல்லியது இது. இந்த ராஜதானியில் பாங்குகள் செழித்து வந்திருப்பதா

லும், ஜனங்களுக்குள் அதற்கு வேண்டிய யோக்கியதை யிருப்பதாலும், ஜர்மானிய சம்பிரதாயப்படிக் கிராமப் பாங்குகள் கோஆபரேஷன் முறையிலேற்படவேண்டுமென்பதேயாம்.

ஆனல் அக்காலத்திய ரிவினியூ போர்டார் இது நடவாத காரியமென்று கட்டை போட்டு விட்டதால் இங்கு ஒன்றுமாகவில்லே. கங்கை யமுனை பாயும் யூனைடெட் மாகாணங்களில் பழைய கிராம வழக்கங்கள் இன்னும் பூராவாகப் போகவில்லே. ஆதலால் அவ்விடத்திய உத்தியோகஸ்தராகிய ஸ்ரீமான் ட்யூபர்னெக்ஸ் என்பவர் இந்தக் கோ ஆபரேஷன் முறையில் பாங்கு நடப்பதற்கு அவ்விடத்தில் விசேஷ சௌகரிய மிருப்பதாக எழுதிப் பரீக்ஷையும் காண்பிவிக்க, அதன்மேல் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் திருப்தியுண்டாகிச் சட்டமும் 1904-ம் வூத்தில் பிறந்தது.

இப்படி வந்திருப்பதில் கோ ஆபரேஷன் முறையாக இனிக்காரியங்கள் சம்பிரமமாக நடக்குமென்றும், நடக்கவேண்டுமென்றும், நாமெல்லோரும் சம்மதிப்பதால், அவ்வாறு நடப்பதில் எந்தெந்தத் தொழில் முன்னுக்கு வரக்கூடுமென்பதும், எங்கெங்கே, எவ்வெவ் விதமாக இம்முறையில் காரியம் நடப்பது சாத்தியமென்றும், அவ்வாறு எங்கும் நடந்து வரும் காலத்தில் நமக்குக் கிடைப்பதாகிய பலன் இன்னதென்றும், நாம் செம்மையாயறிந்து கொள்வதற்கிது நல்ல தருணமாம்.

சட்டப்படிப் பார்க்குமிடத்து இந்த முறையில் கிராமநாணய மென்றும், நகர நாணய மென்றும் இருவகைப்படுத்தி யிருக்கிறது. இது நல்லமுறை தான். கிராமங்களி லிருப்பவருடைய கஷ்ட நிஷ்டூரங்கள் வேறு, பட்டணங்களிலுள்ளவருடைய கஷ்டநிஷ்டூரங்கள் வேறு தான். நாம் மேற்கூறியபடி கிராம வாசிகளுக்கு வருஷத்தில் சில காலங்களில் தான் பணம் அவசரமாக வேண்டும். அக்காலத்தில் சாவுகாரை நம்பினல், அவர் 'வேகிற வீட்டில் பிடுங்கினது லாபம்' என்கிற நியாயத்தை யனுசரித்து வியாபாரம் செய்கிருர். அது ஒழிந்தால் வேறுவகையில்லே. ஆதலால், இப்பொழுது சேலம் ஜில்லாவிலிருக்கிற மாதிரிக் கஸ்பாவில் பெரிய பாங்கும், அதையனுசரித்துச் சங்கிலித்தொடர் போன்று, ஜில்லாவிலுள்ள முக்கியக் கிராமங்களனேவற்றிலும் சில்லரைப் பாங்குகளுமிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். சர்க்கார் பொருளுதவி விசேஷமாயில்லாமல், ஜனங்களே இதற்கு வேண்டிய முதல் போட்டு, டிபாசிட்டுகள் முதலியன அதிகரித்து வருவதில், வேலே கிரமமாக நடக்கிறது. எந்தக் கிராமத்திலும் பாங்கில் கடன்யாராவது கேட்டால்,பாங்கு டைரெக்டர்களுக்கு அவனேப்பற்றி யறியவேண்டிய முக்கிய விஷயம் தெரியுமாதலால், பணம் திரும்ப வருவதற்கு வேண்டிய நிஷ்கரிஷை செய்துகொண்டு கொடுக்கிருர்கள். ஆதலால் அவன் வீட்டில் கல்லியாணமா அல்லது வேறு விதமா, அவன் கிணறு வெட்டுகிருனு, பூதபலியிடுகிருனு, அல்லது பெண்சாதிக்குத் தோள்வளேயிடுகிருனு வென்கிற விசாரணை ஒழிந்து போகிறது. வாங்குபவனுக்கும் பணத்தை மறுபடி கொடாமல் சால்ஜாப்செய்வதற்கு வகையில்லேயென்று தெரியும்வரை, கண்மூடித்தனமாக வாங்க மாட்டானென்பது நிச்சயம். தவிர, கால், அரை, ஏதாவது சில்லரை மீத்து வைப்பதென்ருல், அதற்கு வெகு நாளாக மொந்தை தான் குடித்தனக்காரனுக்குப் பாங்காக இருந்து வருகிறது. மொந்தையில் 5-ரூபாயை எத்தனேநாள் போட்டிருந்தாலும் அது குட்டி போடாது. கிராமபாங்கில் போட்டு, ரசிதை வாங்கிவைத்துக்கொண்டால் ஒவ்வொருமாதமும் அது ஈனும். பிறகு வேண்டியகாலத்தில் அசலும் வட்டியுமாக வாங்கலாம். தவிரப் பணம் வாங்குவதற்கு முன் சர்க்கார் தரபில் காணும் பூசாரிகள் இங்கு இல்லே. கோ ஆபரேடிவ் பாங்கு செகரெடரிகளும், குமாஸ்தாக்களும், சுவாமி வரமல்லது

வேறு தாங்களாக வரங்கொடுக்கத்தக்கவரு மல்லர்.

இப்படிப் பாங்குகள் எங்கெங்கெல்லாம் செழிக்குமோ, அவ்விடங்களில் வேறு நற்காரியங்களும் ஒவ்வொன்ருக வந்து பிரபலிப்பதில் தடையில்லை. வயல்கள், தோட்டங்கள் முதலியவற்றைச் சாகுபடி செய்வதில், இனி யந்திர முதலிய சகாயங்கள் வேண்டும். தான்னியத்தை விற்பனைசெய்வதில், இப்போது நடக்கிறபடி சந்தையிலும், வேறுஎப்போதாகிலும் வரும் வியாபாரிமூலமாயும், காரியம் நடத்துவதைவிட, பெரும்படியாக விலையுயரும் சமயமறிந்து விற்று, அம்மூலமாகவும் லாபமடைவது நலம். முக்கியமாகக் கையிலிருக்கும் முதலைத் தலைகீழ் விலைக்கு விற்கவேண்டிய அவசரமேயில்லை. ஏனெனில் பாங்கிலோ பணமிருக்கிறது. நாணயஸ்தர் எப்போது வருவாரென்று செகர்டெரிகளும் காத்திருக்கிருர்கள்.

ஆதலால் கிராமப்பாங்குகள் இனித்தழைப்பதில் சிறிதும் சந்தேகமில்லை. முதன்முதல் ஏற்படுவதுமட்டும் ஜாக்கிரதையாக ஏற்பட்டுவிட்டால், ஜனங்களுக்குள் நாளுக்குநாள் அவற்றின் உபயோகம் நன்குவிளங்கிப் பிறகு காலக்கிரமத்தில், கரும்புதின்னக் கூலி வேண்டாது, எல்லோரும் அவைகளை அபிமானித்தும், ஆதரித்தும் வருவார்கள். இதுவிஷயத்தில் என் போன்ற சிலருக்குச் சந்தேகம் சிறிதுமில்லை.

பாங்குகள் எங்கு செழிக்கின்றனவோ, அங்கே வேறு பொதுக் காரியங்களும் செழிக்க இடமுண்டாகும். இட்டேறிகள் இப்போதிருக்கிறபடி மைலுக்கு மூன்றிடங்களில் வண்டிகள் குடைசாயும்படியே எப்போதுமிருக்கவேண்டியது என்று எந்த ஸ்மிருதியிலுமேற்படவில்லை. பத்துக் கிராமங்களிலிருந்தும் பிட்டிஷன் போய், இட்டேறிகளை நேராக்க வகையுமேற்பட்டால், அது எவ்வளவு பெரியஉபகாரமென்பது சொல்லவும் வேண்டுமா? தவிரக் கிராமப் பள்ளிக்கூடங்கள், கிராமச் சுகசாதனங்கள், கிராமக்கோர்ட்டுகள், கிராமபந்தோபஸ்துகள், முதலிய எல்லாம் காலக்கிரமத்தில் சாத்தியமாகிவிடுமென்பது நமக்கு நிச்சயம். சாகுபடி விஷயத்தில் ஒற்றுமையும், வியாபார முதலிய விஷயங்களில் பெரும்படியும், தினசரி விஷயத்தில் மேற்கூறிய பல சில்லரை நலங்களும் கைகூடிற்றென்ருல், கிராமவாசிகளுக்கு என்ன தசையென்பதை வருணிக்கவும் வேண்டுமா?

ஆனல் இதுகளெல்லாம் நாம் விசாரிப்பது போல் ஆகவேண்டுமானல், மேற்கூறியபடி ஆரம்பத்தில் நடப்பது வெகு ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். தூரதிருஷ்டி யென்பது மகாஜனங்களுக்குள் அனேகமாயில்லையென்னலாம். அதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானல், மரணபண்டுகளைப் பார்க்கவேண்டும். அதாவது அவைகளில் நேராய் நடப்பவைகளையே நாம் குறிப்பிடுவது. மகா ஜனங்களுக்குள் ஆஸ்திக்காரரையும், படுபாபர்களையும் நீக்கிப் பார்த்தால், இந்தியாவில் ஏதோ ஒருவிதமாகக் காலக்ஷேபஞ்செய்து வருபவர் எத்தனைகோடி பெயர்? அதில் இன்ஷூர் செய்திருப்பவர் எத்தனை பெயர்? இதை விசாரிக்கையில் தீர்க்க திருஷ்டி யெத்தனை பெயரிருக்கிறதென்பது விளங்குகிறதல்லவா? கையில் ஒரு ஜிலேபித் துண்டைவைத்துக் கொண்டு குழந்தையைக் கூப்பிட்டு, இதோ இருப்பதுவேண்டுமா, சாயரக்ஷை 1-சேர் மிட்டாய் வேண்டுமாவென்ருல், குழந்தைக்கெதுவேண்டும்? அதைப்பார்த்து நாம் சிரிக்கிறேம். என்ருலும் நமக்கு முக்கியமாயாகவேண்டிய சில அம்சங்களில் நம்மில் முக்காலே மூன்று வீசமும் குழந்தைகளாகத்தானிருக்கிறேம். ஆதலால் பாங்குகள் இம்மாதிரிக் குழந்தைகளே நிறைந்திருக்குமிடங்களி லாரம்பமாகக் கூடாது. அவர்களுக்குத் தீர்க்க திருஷ்டி யுண்டாவதற்குச் சாதனங்களாகிய, கல்வி கேள்வி முதலி

யவை அவர்களுக்குள் பலத்த பிறகுதான் ஆரம்பிக்கவேண்டும். ஆதலால்தான் ஐக்கியநாணய ரிஜிஸ்திரரவர்களிடம் நூற்றுக்கணக்காகப்பிட்டீஷன்கள் வந்தபோதிலும், அவர் அவசரப்படாமல், வந்ததொவ்வொன்றையும் நிதானித்து, யோசித்து, கிராமத்தில் பித்த வாத சிலேஷ்மங்கள் எல்லாம் இருக்கவேண்டியபடியிருக்கின்றனவா வென்றும், பித்தம் கொஞ்சம் உபரியானால், அதற்குத் தக்க சூடுபோட்டுப் பரிகரிப்பது சாத்தியமா வென்றும், யோசித்தே காரியம் நடத்திவருகிறார். இப்படியே இன்னும் நடந்து வருமளவும் கிராமப்பாங்குகளுக்கும், அவற்றினாலுண்டாகும் இதர நன்மைகளுக்கும், நல்ல தசையிருப்பதாகவே நமக்குக் காணுகிறது. குடியானவர்களாகிய மகா ஜனங்களும் இதன் அருமையை அறியவேண்டியபடி யறிந்து, குழந்தைத் தனத்தை விட்டுப் பொறுப்பாக வேலைசெய்து தாங்களும் நற்பயனை யடைந்து, தேசத்திற்கும் க்ஷேமத்தை விளைவிப்பார்களென்பது நிச்சயம். ஏனெனில் இம்மாதிரிப்பாங்குகளால் கிடைக்கும் பலன் பிரத்தியக்ஷம். தவிர மற்றைய தருமகர்த்தர்களுக்குத் தெய்வம் நின்று கூலிகொடுக்குமாதலால், அந்தத் தெய்வங்களுடைய சக்தி தமக்குத் தெரியுமென்று துணிந்தே தருமகர்த்தாக்கள் கோயிற் சொத்தைத் 'தமது போலப்பாவித்து' நடத்தி வருகிறார்கள். கோஆபரேஷன் பாங்கு விஷயத்திலோ, நயம், நஷ்டம் இரண்டும் கைமேல் கிடைக்கும். ரிஜிஸ்திரார் தெய்வம் பிரத்தியக்ஷ தெய்வம். அது நெறிப்படி நடப்பவருக்கு எல்லா மங்களமும், நெறிதப்பியவருக்குத் தக்க பிராயச்சித்தமும், நிர்த்தாக்ஷிண்ணியமாகக் கைமேல் கொடுக்கும் பெரும் பிடாரிதேவதையாதலால், நாமெல்லோரும் பயந்து நடக்கவேண்டும். அதுவரை நமக்கு ஒரு குறைவுமில்லை. 'பலவின் மிக்கவர் தேவரிற் பார்த்திலர்,' என்று பெரியோர் சொல்லியது வீண் பேச்சல்ல.

## ஜப்பானிய ஸ்திரீகள்.—

## I சில குறிப்புகள்

ஸ்ரீமதி மங்களாம்பிகா பாய் அவர்கள்

ஜப்பான் தேசம் பலவகையிலும் விநோதமானதென்று பார்த்தவர்களெல்லோரும் சொல்லிவருகிறார்கள். ஆனால் அத்தேசத்திய விசேஷங்களிலெல்லாம் விசேஷமானது அவ்விடத்திய ஸ்திரீஜாதியாம். ஏனெனில், அவர்களைப் பார்த்தவர்களுக்கெல்லாம் அவர்களிடத்தில் ஒருவிதமான அன்பும், மரியாதையும் தானாக உண்டாகிறது. அழகுமட்டும் இதற்குக் காரணமாகாது. ஜப்பானிய ஸ்திரீகள் அநேகமாய் எல்லோரும் சுந்தரிகள்தான். என்றாலும் அவர்களுக்கு ரூபத்தைவிடக் குணமே பெருத்த பூஷணம். நாணம், மடம் முதலிய பெண்மைக்குரிய விசேஷ குணங்கள் இவர்களுக்குள் எங்கும் காணுவது. அதுதான் இந்த மரியாதைக்கும், அன்புக்கும் காரணமாவதென்று தெரிகிறது.

ஜப்பானிய ஸ்திரீகள், நமது தேசத்து உத்தமஜாதி ஸ்திரீகளைப்போலவே 'அடக்கம்' என்பதை முதல் தருமமாகக் கொண்டவர்கள். சிறு பெண்ணானால் தகப்பனுக்கும், பெண்சாதியானால் புருஷனுக்கும், விதவையானால் மூத்தமகனுக்கும், அவர்கள் அடங்கி நடக்கவேண்டியவர்கள். மனுஸ்மிருதி படித்தவர்களுக்கு இந்தத் தருமம் சாமான்னியமாய்த் தெரியும். "ஆட்டுக்குட்டியுமல்லவா, தாய் முலையுண்ணும்பொழுது (மரியாதையுடன்) கால்மடித்து ஊட்டுகிறது!" என்று ஜப்பானியருக்குள் ஒருவசனம். ஆகவே பெற்றோரிஷ்டப்படி அவர்கள் யாரை வேண்டுமானாலும் கல்லியாணம் செய்துகொண்டோ, அல்லது 'பொட்டுக் கட்டிக்கொண்டோ,' காலங்கழிக்கிறார்கள். எழுதப் படிக்கவும், வீணைமுதலிய வாத்தியங்கள் வாசிக்கவும், கூத்தாடவும், கொஞ்சம் காவியம் வாசிக்கவும்,

அவர்களில் அனேகமாய் எல்லோரும் கற்றுக் கொள்ளுவது வழக்கம்.

கல்யாணம் பெற்றோருடைய மனம்போல் நடப்பதால், மேனாட்டாருடைய சுவயம்வர லக்ஷணங்களும், பர்த்தாவும், பாரியையும் இஷ்டம்போல் காகிதப்பத்திரங்கள் எழுதிக்கொள்ளுவதும், ஒருவரையொருவர் நினைத்தோ, நினைப்பதாகப் பாசாங்குசெய்தோ, பிதற்றுவதும், மற்றபடி பேய்க்கூத்தாடுவதும், ஜப்பானியருள் காணுவதில்லை.

பழையநாளில் ஜப்பானியஸ்திரீகள் கல்யாணத்தன்றைக்குத் தங்கள் பற்களைக் கறுப் புச்சாயம் போட்டுக் கரேலென்று செய்து கொள்ளுவார்கள். 'தலைச்சன்' பிறந்ததும் புருவங்களைச் சிறைத்து விடுவார்கள். இம்மாதிரி வழக்கங்கள் இக்காலத்தில் அனேகமாய் இல்லையென்றே சொல்லிவிடலாம். ஆனால் குலஸ்திரீ யென்பவள் புருஷன் வீடுவந்து சேர்ந்தால்,வீடேதான் அவளுக்குக்கதி. அதை விட்டு நகருவதற்கிடமில்லை. புருஷன் எங்கு வேண்டுமானாலும் போகிறான். எல்லாருடனும் கலந்து களிக்கிறான். பெண்சாதிக்கு இம்மாதிரிப் பிரபஞ்சமே கிடையாது. புருஷனுக்குப் பல நாட்டாருடைய பழக்கத்தினாலும், படிப்பு, கேள்வி முதலிய சாதனங்களாலும், தொழில் வைபவத்தினாலும், உலகம் பல வகைத்தென்பது தெரிகிறது. பெண்சாதிக்கோ, உண்டு, உடுத்துச் சுகிப்பதும், மக்கட் பேறும் தவிர வேறு அனுபவமில்லை. ஆதலால் இம்மாதிரித் தம்பதிகளுக்குள் மேனாட்டுத் தம்பதிகளுக்கிருக்கும் லக்ஷணங்கள் காணுவது அபூர்வம். "இஷ்டமித்திரர் சந்தித்த சமயத்தில் தான் அந்த இஷ்டமித்திரருக்குப் பிரதியாகவும், ஆகவேண்டிய காரியங்களுக்கு யுக்தி யுக்தமாக உபாயம் சொல்லும் தகப்பன் போன்ற மந்திரியாகவும், நோய் முதலிய உபத்திரவகாலங்களில் பெற்ற தாய்போன்றவளாகவும்,இந்தச் சமுசாரமாகிற பாலைவனத்தில் ஓர் இளைப்பாற்று மண்டபமாகவும்," என்று மேனாட்டார் தமது மனைவிமார்களைச் சிலாகிப்பது போல் ஜப்பானியர் சொல்லிக்கொள்ளுவதற்காகாது.

ஜப்பானியருள் கல்யாணமென்பது கிரய விக்கிரயம் போன்றதோர் வியாபாரமல்லது, இந்தியாவிலும்வேறு நாட்டிலுமுள்ளபடி 'சம்ஸ்காரமன்று.' சம்பிரமம் அதிகம் தான். ஆனால் அது சம்பந்திகளுக்கும் அவர் இஷ்டமித்திரருக்கும் சேர்ந்ததொழிய மற்ற யாருக்கும் ஒன்றுமாக வேண்டியதில்லை. இப்படி விவாகம் நடந்ததற்கு ரிஜிஸ்திரார் ஆபீசில் பதிவாவது தான் சாக்ஷி. அக்கினி, பிராம்மணர் முதலிய சாக்ஷிகள் இல்லை. இப்படி யிருப்பதால், இல்வாழ்க்கை வேண்டாமென்றால் ஒழிந்துவிடலாமென்று அனேகர் நினைக்கலாம். ஆனால் வாஸ்தவத்தில், இருகக்ஷியாருடைய பந்துக்களும், குடும்பத்தவரும் சேர்ந்து, அநியாயம் நடக்கவொட்டாமல் பார்த்துக் கொள்ளுவதுதான் சாதாரணமாக நடப்பில் காணுவது. பிரிவதென்றால், இந்தியாவில் காணுவதுபோலப் புருஷன்மட்டும் பிரிவதென்றில்லை. பெண்சாதியும் தக்க நியாயங்கொண்டு வேண்டுமானால் பிரிந்து, மறுபடி கல்யாணம் செய்து கொள்ளலாம்.

'பல பெண்சாதிகள்' ஜப்பானியருள் கிடையாது. சட்டப்படியும் ஒரே பத்தினிதான் பாரியையென்று சித்தாந்தம். ஆனால் இங்குக்களில் பழைய நாளில் சொகுசுக்காரர் பலர் செய்துவந்தபடி விலைமாதர் அனேகம் கிரகஸ்த குடும்பங்களிற் காணுவார்கள். என்றாலும், இப்பொழுது நமது நாட்டில் இது எப்படிக் குறைந்து வருகிறதோ, அப்படியே ஜப்பானியரிலும், பெரிய மனிதர்களுக்குள் இந்தத் துர்லக்ஷணம் குறைந்தே வருகிறது.

இப்படி யெல்லாமிருந்தாலும், ஜப்பானிய ஸ்திரீக்கு மரியாதைக்கொன்றும் குறைவில்லை. அவளைப்பற்றிப் பேசுபவரெல்லாம் 'யஜமானி

அம்மாள்,' என்றே வழங்குவார்கள். அவளுக்கு எல்லாவகை மரியாதையும் வைப்பார்கள். அவளும் தன் மரியாதையைக் குறைத்துக்கொள்ளாமல், மகா பதிவிரதையாய்ப் புருஷனுக்கு அடங்கியேதான் நடப்பாள். இப்போதிருக்கிற ரீதிக்கு, மேனாட்டுமுறையென்பது முக்கியமந்திரிகள் முதலிய வெகு பெரிய மனுஷரிடம் மட்டுமே காணுவது. ஆனால் நாகரிகம் வெகுதுரிதமாக முற்றுவதால், இப்போது குழந்தைகளாயிருப்பவர் பெரியவர்களாகும்போது, மேனாட்டு முறையும் அதிகமாய்ப் பிரபலிக்கும். அக்காலத்தில் அவர்களுக்குள் மேனாட்டு முறையின்படி காணும் உத்தம லக்ஷணங்களும், கோர லக்ஷணங்களும், இரண்டும் பிரபலிக்கும்.

ஜப்பானிய ஸ்திரீகளுக்குள் இப்போது வெகுதூரம் விசாரணையாகிவருவது 'உடை' விஷயமாம். பழையபடியே யிருந்து உடம்புக்கு உபத்திரவ மொன்றுமில்லாமல், பாவாடை, ரவிக்கை, தாவணி முதலியவை போதுமென்றிருப்பதா, அல்லது, மேனாட்டவர்போல் திமிங்கல எலும்பு முதலியவைகளை வைத்து இறுக்கிக்கொண்டு, தேகத்தையும் கெடுத்துக்கொண்டு, செலவையும் அதிகரித்துக் கொள்ளுவதா, என்று அவர்களுக்குள் தர்க்கம் வெகுதூரம் வளர்ந்துவருகிறது. மகாராணி மேனாட்டு முறையையே அனுசரிப்பதன்றி, தன்னெதிரே வரும் ஸ்திரீகளெல்லாம் அப்படித்தான் உடுக்க வேண்டுமென்று உத்தரவு கொடுத்திருக்கிறார். புருஷர்களில் அனேகர் தம் பெண்டுகள் மேனாட்டு முறைப்படியே பழகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மற்ற பக்ஷத்திலோ, ஜப்பானிய ஸ்திரீகளுக்குத் தங்கள் முறையே அழகென்றும், செலவு குறைச்சலென்றும், தெரியும். தவிர அமெரிக்க துரைசானிகள் முதலிய அனேகர் மேனாட்டு முறையிலுள்ள அவலக்ஷணங்களை விளக்கி, அந்த முறைவேண்டாமென்று பண்ணுடி வருகிறார்கள்.

"ஜப்பானியர், நாம் செய்துகொள்ளுவது போல் காது, மூக்கு முதலியவைகளைத் துளைத்துக் கண்டதையெல்லாம் தொங்கவிட்டுக் கொண்டு உபத்திரவப்படுவதில்லை. கையில் வளை முதலியவைகளையும், விரல்களில் கணக்கற்ற மோதிரங்களையும் போட்டுக்கொண்டு இம்சைப்படுவதுமில்லை. மேனாட்டாரைப்போல் மார்புக்கு எலும்புகளினாலோ, இரும்புத் தகடுகளினாலோ ஆக்கிய கவசம் தரித்தும், கால்களுக்குப் போதாத மோஜாக்களைத் தரித்தும், உடம்பைக் கோணலாக்கிக் கொள்ளுவதில்லை. தலையில் பெருங்கூடைகளைக் கவிழ்த்துக்கொண்டு, அதில் உலகிலுள்ள பக்ஷிகளின் இறகுகளையெல்லாம் சொருகிக் கொள்ளுவதுமில்லை," என்று ஒரு இஷ்டர் எழுதுகிறார்.

இது வாஸ்தவம். ஜப்பானிய ஸ்திரீகளின் உடையும், ஆபரணங்களும் வெகு விநோதமானவை. அவைகளால் அவற்றைத் தரிப்பவருக்கு ஒரு உபத்திரவமுமில்லை. ஆனால், இப்போது மேனாட்டாருடன் அவர்கள் ராஜரீக விஷயமாய்ப் பழகவேண்டியிருப்பதால், அதற்காக அனேகர் மேனாட்டு வேஷந்தரிக்கவேண்டியிருக்கிறது.

ஜப்பானிய ஸ்திரீ ஜாதிகளுக்குள் வேறு நாட்டில் காணாத ஒரு சம்பிரதாயம் காணுகிறது. பெற்றோர் தமது பெண்களை விற்பது என்னாட்டிலும் காணுவதென்றே வைத்துக்கொள்ளலாம். நமது நாட்டில் இக்காலத்திலும் பெற்றோர் பணத்திற்காகப் பெண்களை விற்பதும், (இப்பொழுது பிள்ளைகளை விற்பதும்,) பொட்டுக்கட்டிவிடுவதும், சர்தாரணமாகக் காணக்கூடிய லக்ஷணங்களேயாம்.

ஆனால் ஜப்பான் தேசத்தில் பெற்றோர் தமது பெண்களை விற்று ஜீவிக்கவேண்டினால் அவர்களைக் கேஷாக்கள் ஆக்கலாம். இப்படிச் செய்பவர்கள், தமது பெண்களை யாரோ ஒருவருக்கு பதினைந்து—அல்லது பதினேழு வயதாகும்போது, சுமார் 150-அல்லது 200-

ரூபாய்க்குக் கொடுத்துவிடுகிறார்கள். வாங்கியவர் அவளுக்குப் பாட்டு, கூத்து முதலிய வித்தைகள் சொல்லுவித்து, நல்ல ஆடையாபரணங்களிட்டு, ஆதரித்து வருகிறார். நாட்டியம் தெரிந்ததும், இவர்களுக்குப் புதுப்பெயர்கள் பிரபலித்து வழங்குகின்றன. 'வஸந்தமல்லிகை' 'சந்திரவதனே' யென்பவை போன்ற பெயர்கள் பிரபலிக்கும். இவர்கள் 'சாயைக் கிளப்புகள்' 'கச்சேரிகள்' இவைபோன்றஇடங்களுக்குப் போய் அவ்விடம், பொழுது போக்க வருபவர்களுக்குப் பாட்டுமுதலிய சாதனங்களால் உபகரித்து, மணிக்கு இவ்வளவென்று சம்பளம்பெற்று வயிறு வளர்க்கிறார்கள். வரும்படியில் முக்கால்வரிசையும் இவர்களை வளர்த்தவர் எடுத்துக்கொள்ளுவது வழக்கம். நல்ல ரூபமும், சாதுரியமும், வித்தையுமுள்ளவர்களுடைய பெயர் எங்கும் பிரபலிக்கும். வரும்படி அதிகரிக்கும். இப்படிப்பல வருஷங்களாகையில், ஒருநாள் இருந்தாற்போலிருந்து அவர்களில் இரண்டொருவர் காணுவதில்லை. எங்கு விசாரித்தாலும் சங்கதி தெரிவதில்லை. எங்கேபோனார்கள்? யாரோ ஒருதனிகன் இவர்களில்யார் பேரிலோ பிரியப்பட்டு, அவளைவளர்த்தவனுக்குப் பரிசு ஏராளமாகக் கொடுத்து, அவளைத்தனக்கு மனைவியாகவாங்கிவிட்டானென்று தெரிகிறது. 'அவள் போய்விட்டாள்.' ஆனால் இந்தப்படி கோஷாவாகக் காலங்கழித்தவர்களுக்குக்குலஸ்திரீயினுடைய தருமம் ருசிப்பது வெகு அபூர்வம்.

என்றாலும் 'ஜப்பானியருடைய நாகரிகம் முற்ற முற்ற இந்தகேஷா சம்பிரதாயமும் மாறிவிடும்' என்று தெரிந்தவரெல்லாம் எழுதி வருகிறார்கள். நமது நாட்டிலும், பழையபடி 'கச்சேரிகள்,' (பாட்டு, கூத்து முதலியன) குறைந்தே காணுகின்றன. இவ்வளவிற்கு அதை நல்லதாகவே சொல்லலாம்.

---

## ஜப்பானிய ஸ்திரீகளின் தேசாபிமானம்

ஸ்ரீமான் ஏ. வி. சேயளம் அவர்கள்

உலகத்தே வசிக்கும் எச்சாதியாராயினும் அன்னார் நாகரீக வழிகளில் விருத்தியடைந்து பேரும் பிரபலமும் பெறவேண்டுமானால் அதற்கு இன்றியமையாத சாதனங்கள் சிலவுண்டு. அவைகளுள் பெண்பாலார் கல்வித்திறம் பெற்றிருக்கவேண்டுமென்பது முக்கியமானதாகும். பெண்கள் அறிவற்றவர்களாயிருப்பின் ஆடவருக்குத் துணையின்றித் துக்கமே யேற்படக் காரணமாகும். பெண்கள் அறிவற்றவர்களாயிருப்பின் ஆடவர் பற்பல துன்பங்களால் தளர்வடைந்து மனஞ்சோர்ந்து துன்புறுங்காலத்து, அன்னார்க்குச் சந்தோஷத்தையும் தைரியத்தையும் உண்டுபண்ணும் ஆற்றலுடையார் பெண்டிரேயன்றி வேறல்லர். ஓயாத ஊக்கமும் உழைப்பும் மேலிட்டு, ஆடவர் வேலை செய்து ஊதியம் பெறுவதற்கும், எத்துன்பங்கள் தாக்கினும் சலியாது நிற்பதற்கும், நல்ல வழிகளில் ஒழுகி, கியாதியும் சிறப்பும் பெற முயல்வதற்கும், ஏற்படக்கூடிய பலகாரணங்களில் பெண்பாலரிடத்துப் பொருந்திய காதலுமொன்றாகும். அதனை மறுப்பார் ஒருவருமிலரென்க. இதற்கு நாம் எவ்வளவோ திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டலாம். சுமார் 7-8-வருஷங்களுக்கு முன்பு பிரிட்டிஷாரும் போவர்களும் எதிர்த்து ஒருவரோடொருவர் உலகப்புரளியான கலகம் செய்த பொழுது, இருதிறத்துள்ள போர்வீரர்களில் அநேகர் தங்கள் நாட்டுப் பிராபல்லியத்தை நினைத்து, அதனை நினைக்குந்தோறும் ஊக்கமும் உற்சாகமும் கொண்டு, யுத்தத்தில் தோல்வியடைந்தால் நாட்டின் சீரும் சிறப்பும் குன்றி மங்கிப்போகுமேயென ஏக்கங்கொண்டு, உடலிடத்தேயுள்ள வலிமையெல்லாம் காட்டி மிக உக்கிரமாகச் சண்டை செய்தார்கள். இப்படிச் சண்டை செய்வதைத்தான் கற்றோர் தேசாபிமானம் என்பார்கள். வேறனே



ஓர் ஜப்பானிய பெண்

கர் தங்கள் பெண்டு பிள்ளைகளை நினைத்து அதற்காகவும் சண்டைசெய்திருக்கலாம். தன்னைப் பற்றியோரும், தன்னுடையசுற்றத்தாரும், மற்றும் நெருங்கிய பந்துக்களும் புகழவேண்டுமேயென்பதைக் கருதியும் யுத்தக்களத்தில் யுத்த வீரர்கள் அசையாது நின்று சமராடியிருக்கலாம். யுத்தத்தில் தோற்றுப்போனால் பெண்டுகள் நகைப்பார்களே, அந்தக் கேவலம் வரக்கூடாதே யென்பதை நினைத்தும் போர்புரியலாம். திருஷ்டாந்தமாக மகாபாரத யுத்தத்தில் அருச்சுனனுடன் கொடிய யுத்தம்செய்து துரியோதனன் புறங்காட்டி ஓடியபோது, அவனை நோக்கி அருச்சுனன், ஏ! துரியோதனா!

"கார்முகம் கைத்தலத் திருப்பக் கைம்மிகு
போர்முகந் தன்னி னீபுறந் தந்தேகினு
லூர்முகக் களிற்றின் மேலுலாவும் வீதியில்
வார்முகக் கனதன மாதரென் சொலார்"

என்று இகழ்ச்சியாகப் பேசினான். அது போலவே ராமாயண யுத்தத்தில் முதல் நாள் சண்டையில் இராவணன் தோற்றுப்போய்த் தன்னுடைய அரண்மனைக்குத் திரும்பிய போது, தன்னுடைய தோல்வியை நோக்கிக் கேவலம் பெண்ணாகிய சீதையும் சிரிப்பாளே யென மிகவும் வருத்தப்பட்டானாம்.

"வானகு மண்ணு மெல்லாம் நகுநெகு
வயிரத்தோளான்
நானகு பகைஞ ரெல்லாம் நகுவரென்
றதற்கு நாணன்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியள்
மிதிலை வந்த
சானகி நகுவ ளென்றே வெட்கத்தாற்
சாம்பு கின்றான்"

எனக் கம்பர் வெகு சாமர்த்தியமாகக் கூறினார். ஆகையினாலே பெண்களின் நல்லெண்ணத்துக்காகவும் அவர்கள் முன் சிறப்படைய வேண்டு மென்பதற்காகவும் போர்புரிந்து உயிரை விடுவோர் பலர். யுத்தகளம் நோக்கிச் செல்லும் ஒருவனை அழகுடைய ஸ்திரீ ஒருவள், நீ யுத்தத்தில் வெற்றி பெற்றாலன்றி மற்றையோர் கௌரவத்திற்கு ஆளாகமாட்டா யெனக்கூறினால், அந்த வீரன் தன்னுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டிப்போர்புரிவானல்லனோ? இதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசவேண்டியது அனாவசியம். உலகத்தார் தங்கள் தங்கள் அனுபவத்தால் இதனை யறிந்திருக்கிறார்கள். சுமார் 4, 5-வருடங்களுக்கு முன் ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் போர்நடந்ததல்லவா? இந்த யுத்தத்தால் வெற்றி பெற்றவர்கள் ஜப்பானியர்களென்பது உலகம் பிரசித்தமே. இயற்கையிலேயே ஜப்பானியர்கள் பெரியதேசாபிமானிகள். மலைகலங்கினும்மாதிரங் கலங்கினும், மனங்கலங்காது எதிர்த்து நின்று போர்புரியும் சாமார்த்தியம் பெரிதும் படைத்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு யுத்தம் செய்யும்படியாக வேறே தூண்டுகோலுமிருந்தால் அப்போது அவர்கள்செய்யும் உக்கிரமான போரைப்பற்றி நாமே சிந்தித்துக் கொள்ளலாம். ஜப்பான் தேசத்து ஸ்திரீகள் யுத்தகளம் நோக்கிச்செல்லும் ஒவ்வொரு ஆடவரையும் உற்சாகப்படுத்தி விடுகிறார்களாம். சிறுமிகள் (சிறுபெண்கள்) கூடத்தங்கள் சகோதரர்களையுந் தகப்பன்மார்களையும்உற்சாகப்படுத்துகின்றார்களாம். திருஷ்டாந்தமாக ஒரு ஜப்பானியச் சிறுபெண் யுத்தகளத்தே போராடிக்கொண்டிருந்த தன்னுடைய சகோதரனுக்கு எழுதியிருபத்தை மொழிபெயர்த்துஎழுதுகின்றோம். இந்தச் சகோதரன் அக்குடும்பத்துக்குத் தலைமகன். அவன் யுத்தத்துக்குப் போய்விடவே குடும்பக் காரியாதிகளைக் கவனிக்கும் கஷ்டம் அவனுடைய சிறிய சகோதரிமேல் விழுந்தது. அந்தச் சிறுமியின் பெயர் டோனே. அவளுடைய சகோதரன் சுமார் 15வரு களுக்கு முன்னர் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த யுத்தத்தில் சண்டை செய்து கொண்டிருந்தான். அவனுக்கு இச்சிறுமியெழுதிய கடிதம் யாவர் மனத்தையும் கரைந்துருகச் செய்யும். காகிதம் பின்வருமாறு:—

"அன்புள்ள சகோதரனே! நீ யுத்தம் நோக்கிச் சென்றநாள் முதல்நம்முடைய குடும்பத்தைத்தாங்கிக் கொண்டிருந்த பெரிய தூண் மறைந்து போனது போலிருக்கின்றது. நாங்கள் உன்னுடைய துணையை யிழந்து விட்டோம். இருந்தபோதிலும் நான்என்னால்கூடிய வரை முயன்று நீயிருந்தால் எப்படிச்செய்திருப்பாயோ, அதேமாதிரி நானும் நம்முடைய பெற்றோர்களுக்கு அதிவிசுவாசத்துடன் ஊழியஞ்செய்து கொண்டு வருகிறேன். ஆகையினாலே நீ குடும்பக் காரியாதிகளைப் பற்றி மனதில் கவலைப்படவேண்டாம். நம்முடைய சேனையானது அநேகவிடங்களில் வெற்றி பெற்றிருப்பதாகவும், எதிரிகளுடைய பீரங்கிகளில் அநேகபீரங்கிகளையும், ஏராளமான கருமருந்தையும் கைப்பற்றிக் கொண்டதாகவும் கேள்விப்படுகிறேன். இதைக் கேள்விப்பட்டு நாங்களெல்லாம் ஊரில் வெகுவாய்ச் சந்தோஷப்படுகிறோம். நம்முடைய சக்கிரவர்த்தியோ, தம்முடைய தரைப்படையும் கப்பல் படையும் செய்த போர்த்திறமையைப்பற்றி வெகுவாய்த் திருப்தியடைந்திருக்கிறார். உன்னைப்போன்ற போர்வீரர்கள் தற்காலம் யுத்தத்தில் கஷ்டஜீவனம் செய்கிறார்களே யென்பதற்காக அளவில்லா அனுதாபங்கொண்டு, தம்முடைய மாளிகையில் சொற்பச்சிலவு செய்து ஆடம்பரமில்லாதிருக்கிறாரென்று நான் கேள்விப்படுகிறேன். ஜப்பானனது சீனாவைவிட மூன்றுபங்கு பலங்கொண்டதென்றும், சீனாவினுடைய முழுபலமும் அதனைத்தோற்கடிக்க முடியாதென்றும் இதுவரை கடலிலும் தரையிலும் நடந்த யுத்தங்களால் இந்தரகசியங்கள் விளங்கியிருக்கின்றனவென்றும் நாட்டுபத்திரிகைகள் கூறுகின்றன. எதிரிகளுக்குச்சொந்தமான பியான்யாங் என்ற கோட்டைக் கதவை நீங்கள் திறந்து உள் நுழைந்த சாமர்த்தியத்தைப் பற்றி நாங்களெல்லாம் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். 3, 4-வயது சிறுகுழந்தைகள் கூட இப்போது தெருக்களில் ஆனந்தமாகப் பாட்டுப்பாடிக்கொண்டு, ஜப்பான்வெற்றிபெற்றதற்காகச் சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு செல்கிறார்கள். நம்முடைய பெரிய சக்கிரவர்த்தியோ அளவற்ற கருணையுடன் யுத்தகளத்தே யிருக்கும் போர்வீரர்களுடைய குடும்பங்களின் க்ஷேமத்தில் ஏராளமான பிரியங்காட்டி வருகிறார். வாஸ்தவத்தில் நீ எங்களைப்பற்றிச் சற்றேனும் கவலைப்படவேண்டியதில்லை. யுத்தத்தில் தைரியத்துடன் முன்னேறிச்செல். ஜப்பானியர்கள் எவ்வளவு தைரியசாலிகளென்பதை உலகத்தார்கள் பார்த்துப் புகழட்டும். யுத்தகளத்தில் முன்னேறிச் செல்வதில் நீ மற்ற போர்வீரர்களுக்குப் பின் வாங்காதே. நீ இப்படிச் செய்வதே உன்னுடைய பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்தும் சிறந்த மார்க்கமாகும். நீ உன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதை மட்டும் கருதுவாயானால், அப்போது நீ நம்முடைய சக்கிரவர்த்திக்கும் நாட்டுக்கும் ஒன்றும் செய்ய முடியாதவனாயிருப்பாய். ஆனால் நீ மரித்தும் போகக் கூடாது. அப்படி மரித்தால், ஏதாவது அருமையான போர்செய்து பிரபலமான சாமார்த்தியம் காட்டி மரிக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட விஷயங்களை நினைத்து நான் இரவும் பகலும் கடவுளைப் பிரார்த்தனை செய்கின்றேன். அருமையான சகோதரனே! நீ எங்களைப்பற்றி யாதொரு கவலையும் படவேண்டாம். இன்னும் நான் உனக்கு எவ்வளவோ சொல்லவேண்டும். ஆனால் அவைகளை யெல்லாம் அடுத்த காகிதத்தில் சொல்லுகின்றேன்.

இப்படிக்கு,

உன்னுடைய பிரியமான தங்கை

டோனே."

இந்தக் காகிதத்தைப் பெற்றபோர்வீரனுடைய உற்சாகத்தை நாம் கூறவேண்டிய தனவசியம். நாட்டுப் பெண்கள் இப்படி இருந்தாலல்லவோ தேசம் க்ஷேமப்படும். ஜப்பான் இவ்வளவு சிறப்படைந்திருப்பதற்கு இது முக்கியமான காரணமல்லவா?

## கல்லிக்கோட்டை சமரீன்

ஸ்ரீமான் ஏ. எஸ். வைத்தியநாத அய்யரவர்கள்,
எம். ஏ., எல். டி.

சென்ற ௵ டிசம்பர் ௴த்தில் கல்லிக்கோட்டையிலிருந்தவர்கள் ஒருநாள் காலையில் ஒரு பெரிய அதிசயம் கண்டிருப்பார்கள். யாரோ ஒரு பெரிய மனுஷர் படத்தில் காணுகிறபடியோ, வேறு விதமாகவோ உடைதரித்து, அனேக அலங்காரங்களும் செய்துகொண்டு, 'மஞ்சல்' என்னும் பல்லக்கில் ஏறி, மலையாள மகம்மதீயரான மாப்பிள்ளைமார் வாத்திய கோஷம் செய்ய, தெருக்களில் ஊர்கோலம் சென்றார். பிறகு அவ்வூர் அரண்மனையில் பல ஜனங்களும் கூடியிருக்க, கலெக்டர் துரையவர்கள் இவருக்கு முகமன் கூறி, ஏதோ ஒரு சன்னது கொடுத்துப் பல்லாண்டு கூறினர். பிறகு பிராம்மணருக்குத் தக்ஷிணை, சமாராதனை, முதலியன நடந்தது. கூட்டமும் கலைந்தது.

இந்தப் பெரிய மனுஷர் யார்? இந்தச் சடங்குக்கு என்ன அர்த்தம்? பிராம்மணர்களுக்குச் சாப்பாடு, தக்ஷிணை முதலிய உபசாரங்களொருபுறம் பலமாக நடக்க, மாப்பிள்ளைமார் என்னத்திற்காக வாத்திய முதலிய உபசாரங்கள் நடத்தவேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு நம்மாலியன்றவரை உத்தரஞ் சொல்ல முயல்வோமாக.

இந்தப் பெரிய மனுஷர் சமரீன் எனப் பட்டப்பெயர் பூண்டவர். இவர் பழைய காலத்தில் மலையாள ராச்சியத்தில் கல்லிக்கோட்டையிலிருந்துகொண்டு ஒரு பெரிய பகுதியைக் கட்டியாண்ட ராஜவம்சத்திலுதித்தவர். இவருக்கு முந்தியிருந்த பெரியவர் கோயமுத்தூர் ஜில்லா பவானியில் இறந்துவிட்டதால், அந்தப் பதவியை இவர் வகிக்க வேண்டி வந்தது. அந்தப்பதவிக்கு இவருக்குள்ள பாத்தியதையைப் பிரிட்டிஷ் துரைத்தனத்தார் அங்கீகரிக்கவேண்டியது பதிவாகையால், கலெக்டர் துரையவர்களும் அவ்விடம் வந்து வாழ்த்திப்போனார்கள்.

பள்ளிப்பிள்ளைகளில் இந்துதேச சரித்திரம் படித்தவரனைவர்க்கும் கி. பி. 1498-ம் ௵த்தில் போர்த்துகல் தேசத்துக் கப்பற்றலைவனாகிய வாஸ்கோடிகாமா கல்லிக்கோட்டையில் வந்திறங்கிய கதை நன்றாய்த் தெரியும். அக்காலத்தில் கல்லிக்கோட்டைதான் மலையாளத்தில் வெகு முக்கிய ஸ்தலம். அதுதான் சமரீனுக்கு ராஜதானி. போர்த்துக்கல்காரருடைய ஆசையோ, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வியாபாரமெல்லாம் தங்கள் மூலமாகவே நடக்கவேண்டுமென்றும், முக்கியமாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வர்த்தகம் தங்கள் கையிலகப்படவேண்டுமென்றும், இருந்தது. ஏனெனில், இந்தியாவை அக்காலத்தில் ஐரோப்பியரெல்லோரும் ஒரு பெரிய பொன் விளையும் களமாக எண்ணியிருந்தனர்.

இதில் அதிசயம் ஒன்றுமில்லை. மலையாளத்திய மிளகும், மற்ற சாமான்களும் எத்தனையோ காலமாக ஐரோப்பாவுக்குப் போய்க்கொண்டிருந்தது மெய். ஆனால் அது சுற்றுவழிகளில் போய்க்கொண்டிருந்ததால், 15-வது நூற்றாண்டில் ஆப்பிரிக்காவைச்சுற்றிவரும் நேர்வழியுண்டானது வர்த்தகருக்கு ஒருபெரிய உபகாரமாயிற்று. இது இல்லாமலிருக்கும்பொழுதே கிறிஸ்தவ அப்தத்திற்கு அனேக நூற்றாண்டுகளுக்குமுன் மலையாளக்கரைகளுக்கு மேனாட்டுக் கப்பல்கள் போக்குவரவு செய்து கொண்டிருந்தனவென்பது அனேகருக்கு ஒரு சமயம் தெரியாமலிருக்கலாம். என்றாலும் அது வாஸ்தவம். வெகுகாலத்திற்கு முன்னிருந்த யூதேயா அரசனான சாலோமோனுக்கு மிளகு முதலிய திரவியங்கள் இங்கிருந்து போயினவென்பதற்குச் சாக்ஷியமுண்டு. இது கி. மு. 1000 வருஷம் சுமாரென்று தெரிகிறது. பின்னிட்ட காலங்களில், கிரேக்கர், ரோமர், முதலிய ஜாதி

யவரும் முறையே இந்த வியாபாரத்தை விடாமல் செய்துகொண்டு தான் வந்தார்கள்.

கடைசியாக அரேபியர்கள் இதை ஆக்கிரமித்தார்கள். இவர்கள் முன்னுக்கு வருவதற்குள், மலையாளத்தில் ஒரு பேதம் கண்டது. பழைய நாளில் கொச்சி, கொல்லம், கொடுங்கலூர் முதலிய இடங்களில் தான் கப்பல்கள் தங்குவதும், வியாபாரம் நடப்பதும். அரேபியர் இந்த வியாபாரத்தை ஆக்கிரமித்தபின் மேற்சொல்லிய இடங்களுக்கு மகிமை குறைந்து, கல்லிக்கோட்டை செழிக்க ஆரம்பித்தது. அதே காலத்தில் சமரீன் அரசனுடைய கையும் மேலாகி வந்தது. இந்த மட்டில் நமக்கு உறுதியுண்டு. ஆனல் 'சமரீன்' வம்சம் எப்போது ஆரம்பமாயிற்று? மூலபுருஷன் யார்? எவ்விடமிருந்து அவர் வந்தார்? அந்த வம்சாவளியை இடையறுது விளக்கி, அந்த வம்ச சரித்திரத்தையும் கதையாகச் சொல்லுவது சாத்தியமா?

இந்தக் கேள்விகளுக் கெல்லாம் பதிலொன்றுதான். இது ஒன்றும் சாத்தியமல்ல. ஏனெனில் ரிகார்டுகள் ஒன்றும் இல்லை. எப்பொழுதாவதிருந்தாலும், அவை வெகுவாய் நசித்துப் போயின வென்றே காணுகிறது. கல்லிக்கோட்டை அரண்மனையில் ஏதாகிலும் இருக்கலாம். கொச்சிப் புஸ்தகசாலையிலும் ஏதாகிலும் இருக்கலாம். ஆனல், அவைகளையாரும் இதுவரைபரிசோதித்து அவற்றில்காணும் ரகசியங்களை வெளியிடவில்லை. ஆதலால் ஸ்ரீவால்மீகி பகவான் இக்ஷ்வாகுவம்ச சரிதத்தை ஆதியோடந்தமாகச் சொல்லி விடுகிறேனென்று ராமாயணத்தில் சங்கற்பித்ததுபோல, சமரீன் வம்ச சரித்திரத்தைச் சொல்ல முயல்வது நமக்கு அசாத்தியம். இருப்பதை ஏதோ ஒருவாறு முடைந்து வைக்கலாம். ஆகவே அப்படியே செய்துவிடுகிறோம்.

கேரளராச்சியம் முன்னொருகாலத்தில்'பெருமாள்கள்' என்று பெயர் பூண்ட அரசர்களால் ஆளப்பட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குக் கோடுங்கலூர் ராஜதானியாம். இது சேரராச்சியத்தின் பகுதி. கேரளோற்பத்தி யென்னும் புராணத்தில்,மலையாள சீமை முழுவதையும் ஸ்ரீபரசுராமமூர்த்தி நாலு நம்பூதிரி பிராம்மணருக்குத் தானம் செய்து விட்டதாகவும் அவர்களுக்குள் வழக்குகள் உண்டாகித் தகரார் அதிகரிக்கவே, அவர்களை யெல்லாம் அடக்கியாளவேண்டி, முதன்முதல் 'பெருமாள்' என்னும் பட்டத்துடன் ஒரு அதிபதி யேற்பட்டதாகவும் காணுகிறது. இது சரியாகவேயிருக்கலாம். சில்லரை அரசர்களுக்குள் எப்போதெல்லாம் இவ்வாறு தர்க்கம் வலுத்து, அதனல் மகாஜனங்களுக்கு உபத்திரவம் அதிகரிக்கிறதோ, அப்போதெல்லாம், அவர்களை அடக்கவேண்டிப் பகவான் ஒரு கைவலுத்த அதிபதியை அனுப்பிவிடுகிறார்.

இவ்வாறு ஏற்பட்ட அதிபதி 12-வருஷத்திற்கொருமுறை மறுபடி நியமனமாக வேண்டுமென்று ஒருவிதி துவக்கத்திலிருந்ததாம். ஆனல் 12-வருஷம் ஒருவன் சர்வாதிகாரம் செலுத்தினல், மறுபடி அவனை அப்புறப்படுத்துவது சுலபமல்ல. அதிலும் அவன் புத்திசாலியாகவும், வீரனகவுமிருந்தால், அது சாத்தியமே அன்று. இந்த ரகசியம் தெரிந்து தான் கூனி ராமனை 14-வரு வனம்போகச் சொல்லியதும், துரியோதனன் பாண்டவரைத் துரத்தியதும். ஆகவே இந்த 12-வருஷ நியமனம் தானகவே ரத்தாகி, ஒவ்வொரு பெருமாளும் ஒருமுறை நியமனமானல், அவருடைய ஜீவதசையில் மறுபடி நியமனம் வேண்டியதில்லை யென்று ஒரு ஸ்மிருதி யேற்பட்டது. பிறகு இதுவும் மிராசாகிவிட்டது.

இப்படி யேற்பட்ட பெருமாள்களுடைய அதிகாரம் ஒருகாலத்தில் கன்னியாகுமாரி முதல் கோகர்ணம் வரையுள்ள கோவணம் போன்ற நாடெங்கும் சென்று வந்ததாகத்

தெரிகிறது. இந்த வம்சத்தில் கடைசியாயிருந்தவருக்குச் சேரமான் பெருமாள் எனப் பெயர் வழங்குகிறது.

இவர் 36-வருஷம் ஆண்டுவந்தார். கடைசியாக ஏதோ காரணங்களால் இவருக்கு உலக வாழ்க்கை ருசியற்றுப் போய்விட்டது. அக்காலத்தில் மகம்மதீய மதம் அரேபியாவிலும் வேறிடங்களிலும் பிரபலமாகி வந்தது. அந்த மதத்தில் பெரியவராயிருந்து லங்கையில் தேகவியோகமடைந்து சமாதி பெற்ற ஒருவருடைய கோரியைப் பார்த்துத் தொழுதுவருவதற்காக, ஒருமுறை அரேபியாவிலிருந்து ஒரு கூட்டம் மகம்மதியர் சென்றார்கள். தங்கள் காரியம் முடிந்தபின் அவர்கள் திரும்ப ஊருக்குப்போய்க் கொண்டிருக்கையில், கொடுங்கலூரில் வந்து கொஞ்சம் தங்க, அவர்களுடைய நித்திய விதிகளையும், பக்தியையும் கண்டு, சேரமான் பெருமாளுக்கு அவர்களிடத்தில் விசுவாசம் அதிகரித்து, அவர்களுடைய மதக் கோட்பாடுகள் தனக்கு வெகு ஹிதமாகக் கண்டதால், தானும் பக்கிரியாகி, அவர்களுடன் சேர்ந்து, மெக்காவுக்குப் போய் அவ்விடத்திலேயே தன் காலத்தை முடித்துவிட்டார். இப்பொழுதும் ஜபார் என்னும் ஊரில் ஒரு கோரியிருப்பதாகவும், அதில் 'அப்துல் ரஹமான் சமிரி' என்னும் பெரியவர் ஹிஜரி 212-ம் வருஷத்தில் அவ்விடம் வந்து, 216-ம் வருஷத்தில் இறந்துபோனதாகக் கல்லில்எழுத்துவெட்டியிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தப் பெயர் ஒரு சமயம் சேரமான் பெருமாள் மகம்மதீயரானபின் எடுத்துக் கொண்டதாக இருப்பது சாத்தியம் என்று அனேகர் நம்புகிறார்கள். ஆனால் கோரியிருக்கிறதா வென்றுமட்டும் யாரும் போய்ப் பார்த்து நிஷ்கரிஷிப்பதில்லை!

சேரமான் பெருமாள் தான் பக்கிரியாவதற்குமுன் தன்னுடைய ராச்சிய முழுவதையும் பல சில்லரைகளாகப் பிரித்து, கொச்சி ராச்சியத்தைத் தன்வம்சத்தவருக்கும், மற்றவைகளைத்தாயாதிகளுக்கும் கொடுத்துவிட்டாராம். இப்படிச் செய்ததில், அவருக்கு முக்கியசேனாதிபதியாயிருந்து பலபெரிய ஆபத்துகளில் உதவிவந்த 'சமரீன்' என்னும் பெரியவருக்குமட்டும் ஒரு பகுதியும் கிட்டவில்லை. ஆதலால் அவர் பெருமாளுடன் கூடவேபோய், அவர் தருமப் பட்டணம், என்னும் துறையில் மெக்காவுக்குக் கப்பலேற இருக்கையில், தனக்கென்ன கதியென்று கேட்க, பெருமாளும் அவ்விடத்தில்தான் கட்டியிருந்த ஒரு அரண்மனையை இவர்வசம் ஒப்புவித்து, அதையும் அதைச் சுற்றிக் கோழி கூப்பிடு தூரம் எல்லைகட்டி, அந்தப் பிரதேசத்தையும் இவருக்கு அதீன மாக்கினார். இது அவருடைய சௌரிய முதலிய குணங்களுக்குச் சுத்தமாகப் போதாதாகையால், பெருமாள் அவருக்குத் தன்னிடம் மீந்திருந்த கத்தி யொன்றைக்கையில் கொடுத்து, "நீங்கள் சேத்தும், கோன்றும் அடக்கியாளுக," என்று ஆசீர்வதித்துச்சென்றாராம். ஆகவே, சமரீனுக்குத் தலைமைப் பட்டணம் 'கோழிக்கூடு' அல்லது கல்லிக்கோட்டை யாகவும், அவருடைய ராச்சியம் அதைச் சுற்றித்தனது பாகுபலம் எட்டிய மட்டிலும் ஆயிற்று. இப்படி யவர் சுற்றியிருக்கும் சிற்றரசர்களை வென்று அவர்களைத் தன் அதீனமாக்கி வரவே, கடைசியில் அவர் ராச்சியம் தெற்கே கொச்சிவரை யெட்டியது. அது முதல் கொச்சி அரசர்களுக்கும், சமரீனுக்கும் நீங்காத கலகத்திற்கு இடமுண்டாகி, ஊர் இரண்டு பட்டு, இருவரும் கைவலுத்தவராதலால், தகரார் சுலபத்தில் பைசலாகாமல், கடைசியாக வாஸ்கோடிகாமாவென்னும் கூத்தாடிக்கு எளிதாயிற்று. நிற்க.

சுமார் கி.பி. 700-ஆண்டிற்கப்புறம் சமரீன்கள் கல்லிக்கோட்டையிலிருந்து கொண்டு அதிகாரம் செலுத்தி வந்தது விசதமாகிறது. ஏனெனில், ஏறக்குறைய அந்தக் காலத்திலிருந்த சமரீன் ஏராள நாட்டிற்கு உடையவர் என்று சிரிய கிரிஸ்தவர், யூதர் முதலிய அன்னிய

தேசத்தவரிடம் காணும் சாசனங்களால் வெளியாகிறது. கல்லிக்கோட்டை அரண்மனை மேற்சொல்லியபடி சமரீன்வசம் வந்ததும், அவர் அதைப்பலப்படுத்தி சமீபத்தில் ஒரு கோட்டைகட்டித் துறைமுகத்தையும் பசந்து படுத்தினார். தவிர, தம்முடைய நீதி, நியாயம், நாணயம் முதலிய நற்குணங்களால், வியாபாரிகளை அவ்விடம் வந்து தங்கும்படி தூண்டினார். அப்படியே அனேகர் வந்து சேர்ந்து, கல்லிக்கோட்டை வியாபாரம் வலுத்து வந்தது.

இரண்டொருதாரணம் போதுமானது. கீழ்நாட்டு ஜைனவர்த்தகனாகிய அம்பரேசன் செட்டியென்பவன், ஒரு சந்தர்ப்பத்தில் கல்லிக்கோட்டையருகில் தன் கப்பல் காற்றிலலைபட்டு முழுகிப்போக இருக்கையில், அவ்விடமிறங்கி, சமரீனைக்கண்டு, தன்னுடைய திரவியத்தை அவருடைய கஜானாவில் வைத்துவைக்கும்படிக்கும், பிறகு தன் சௌகரியம்போல் பெற்றுக்கொள்ளுவதாகவும் கேட்டுக்கொண்டான். அவரும் சம்மதித்து அவனையே பணத்தைக் கட்டிக்கொண்டுபோய் வைக்கும்படி சொன்னார். அப்படியே வைத்துவிட்டுத் தன் காரியமாகப்போய்ச் சிறிது காலம் கழிந்து மறுபடி வந்து பணத்தைக்கேட்டான். அவனையே போய் எடுத்துக்கொள்ளும்படி சொன்னார். போய்ப்பார்க்கையில், எல்லாம் தான் வைத்தபடியே 'ஒரு தூசு விலகாமலிருந்ததால்,' அவனுக்கு வெகு சந்தோஷமாகி, இப்படிப்பட்ட சத்தியசந்தனுடைய ராச்சியத்தில்தான் நாமிருந்து பிழைக்கவேண்டுமென்று அங்கேயே ஸ்திரமாயிருந்துவிட்டானாம். இதுபோலவே, வேறு அனேகரும் வந்து தங்கவே கல்லிக்கோட்டை சிறந்து வந்தது.

இப்படியே மகம்மதியக்குருவான 'கோயா' என்னும் அரேபியரொருவர், மலையாளத்தில் வந்து, சிற்றரசர் அனேகரிடத்தில், ஊர்காய்ப் பரணிகளுக்குள், அடியில் பொன்னையும், மேலாக ஊர்காயும் வைத்து, அடைக்கலமாக ஒப்புக் கொடுத்துப் பிறகு சிறிதுகாலம் கழிந்து மறுபடி பெற்றுப்போகையில், சமரீன் ஒருவர் மட்டும் பொன்னைத் தொடாமலிருந்ததையும், மற்றைய அரசர் தன்னை மோசஞ்செய்ததையும் கண்டு கல்லிக்கோட்டையிலேயே தங்கி, அன்றுமுதல் அங்கே மகம்மது மதத்தைப் பெருகச் செய்தாராம்.

கல்லிக்கோட்டைக் கருகில் திருநாவாய் என்னும் புராதன ஸ்தலமொன்றுண்டு. இவ்விடத்தில் ஒருபெரிய ஆலமரத்தடியில், ஒவ்வொரு மகாமகத்திலும், (12-௵த்திற்கொரு முறை வருவது) ஒரு மலையாள மகா ஜனப் பெருங்கூட்டம் கூடுவதுண்டு. இக்கூட்டத்தில்தான் பழையநாளில் 'பெருமாளை' நியமித்து, அவருக்கு ஆளும் யோக்கியதையைப் பகிரங்கப்படுத்துவது வழக்கம். சேரமான் பெருமாள் ராச்சியத்தைப் பிரித்தபின், அவர் வம்சத்தவராகிய பெருமாள்களுடைய கைவலி குறைந்துபோயிற்று. சமரீன் கைவலியோ மேற்குறித்தபடி மிகுந்து ஓங்கி வந்தது. கல்லிக்கோட்டையைச் சுற்றிலுமுள்ள சிற்றரசரும் ஒவ்வொருவராக இவர் அதீனமாகி வந்தார்கள். ஆதலால் மேற்சொல்லிய 'கோயா' என்னும் மகம்மதியப் பெரியவர் வந்து, 'மாப்பிள்ளைமாரும்' (மலையாள மகம்மதீயருக்கு இந்தப் பெயர் பொதுவாக வழங்குவது,) பெருகவே, இந்தப் பெரியவருக்கு இடங் கொடுத்த சமரீன் விஷயத்தில் தனக்குள்ள நன்றியைக் காட்டவேண்டி அவர் சமயம் பார்த்திருந்தார். கடைசியாக ஒரு மகா மகத்தில் வழக்கப்படி மகா ஜனங்கள் கூடினார்கள். கோயாவும் அவருடைய சிஷ்யர்களான மாப்பிள்ளைமாரும் இதை ஆக்கிரமித்து, சமரீன் வேண்டுகோளின்படி நயபய மிரண்டையும் கொண்டு, ஜனங்களை வசமாக்கிக் கொச்சிப் பெருமாள்களுக்கு இனி மலையாளத்தில் முதற் பதவிக்கு யோக்கியதையில்லை யென்றும், அதற்குப் பதிலாகக் கல்லிக்கோட்டையில் சமரீன்

களுக்குத்தான் அந்த பதவியும் அதிகாரமும் கிடைத்திருக்கிறதென்றும் சொல்லி, அதற்குச் சேரமான் பெருமாளுடைய கத்தியையும், ஆசீர்வாதத்தையும் சாக்ஷியமாக்கினார்கள். அந்தக் கத்தி இன்றுவரை சமரீன் சுவாதீனத்தி லிருக்கிறது. ஆனால் அதை அவர்கள் வெகுகாலமாக உறையிற் போட்டுப் பூஜையில் வைத்து விட்டார்கள்.

இப்படி மகாஜனங்கள் சமரீனை மலையாள சார்வபௌமனாக மனப்பூர்வகமாய் நியமிக்கும்படி கோயாவும் அவருடைய மாப்பிள்ளைகளும் உதவியதால், அன்று முதல் மாப்பிள்ளைகள் சமரீனுக்கு ஆப்தரானார்கள். அவர்களுக்கும் சமரீன் வேண்டிய சகாயமெல்லாம் செய்து மரியாதையாய் நடத்தி வந்தார். அதற்கு அறிகுறியாகத்தான் நாம் முதலில் குறிப்பிட்டபடி நாளதுவரை சமரீனுக்கு மாப்பிள்ளைமார் வாத்திய முதலிய பதிவுகளை விடாமல் நடத்தி வருகிறார்கள். தவிர, கோயாவின் பெயர் நெடுங்காலம் வழங்க வேண்டி, சமரீனுடைய ராஜதானிக்கு 'கோய்க் கோட்டை' அல்லது கல்லிக்கோட்டையென்று பெயர் வந்ததாகவும் ஒரு ஐதிகமுண்டு.

இதன்றிச் சேரமான்பெருமாள் அரேபியா போனபின், மகம்மதீய பக்தி யதிகரித்து, அவ்விடமுள்ள இஷ்டரனேகருக்குச் சிபார்சு காகிதம் கொடுத்து, மலையாளத்திற்கு அனுப்பியதாகவும், அதை வெகுமானித்து அவர்களுக்குப் பள்ளிவாசல் கட்டிக்கொள்ள அனுமதி கிடைத்ததாகவும், அப்படி ஆதரித்தவரிலெல்லாம் சமரீன்கள் முக்கியஸ்தரென்றும் தெரிகிறது.

(இன்னும் வரும்.)

## எகிப்தியர் நாகரிகம்

ஸ்ரீமான் பூர்வ விருத்தாந்தி.

### எகிப்தியர் விருந்திடுவேது

இதைப்பற்றி முன்னொருமுறை கொஞ்சம் விவரித்தோம். ஆனால் இவ்விஷயத்தில் நம்முடைய வழக்கங்களுக்கும், அவர்களுடைய வழக்கங்களுக்கும் வித்தியாசங்கள் பலவாகி இருப்பதால், முக்கியாம்சங்களை இங்கு சுருக்கியுரைக்கிறோம்.

சாதாரணமாய் விருந்தினர்கள் சுமார் நடுப்பகலில் போஜனத்திற்குப் போவார்கள். தராதரம்போல் வண்டிகளிலோ, நடந்தோ போவது வழக்கம். வண்டிகளிலும், பல்லக்குகளிலும் சவாரி செய்பவருக்குக் குடைபிடிப்பது ஓர் பெரிய மரியாதை. இதையனுசரித்தே நமதுநாட்டிலும் "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்," எனவும், "சத்திரபதி" எனவும் அரசர்களுக்குப் பட்டப்பெயருண்டு.

விருந்தினர் வந்ததும் "இலைபோடுவதில்லை." வந்தவர்களுக்குச் சங்கீதம், செப்பிடுவித்தை முதலியவற்றைக்கொண்டு கொஞ்சம் பொழுது போக்காக வேண்டியது ஒரு விசேஷ உபசாரம். வந்தவர்களும் போஜன மண்டபத்தைப் புகழ்ந்து, அவ்விடத்திலுள்ள படங்கள் முதலிய அலங்காரங்களை மெச்சிக் காலங்கழிக்க வேண்டும். அதிதிகளில் அந்தஸ்துக்காரர்கள் எக்காலத்திலும் ஒரேமாதிரிதான் நடப்பது போலும். அதாவது குறித்தகாலத்திற்கு இரண்டொரு நிமிஷம் அப்புறப்பட்டே வருவது. மற்றவரெல்லாம் காத்திருப்பது தம்முடைய அந்தஸ்தைக் காட்டுவதோர் முக்கிய குறிப்பென்பது அவர் மதம்!

வந்தவரில் வேண்டிய பெயருக்குக் கைகால் கழுவ ஜலம் கொடுத்து உபசரிப்பதை நம்மவர் நன்றாயறிவார்கள். ஆனால் நம்மவரறியாத உபசாரமொன்று எகிப்தியர், கிரேக்கர், யூதர் முதலியோருக்குள் உண்டு. அதாவது, கைகால்

கழுவியபின் ஒவ்வொருவருக்கும் தலைக்கு வாசனை எண்ணெய் தடவுவதாம். ஆதலால் அக்காலத்தில் 'கேசரஞ்சன தைலம்' முதலியவற்றிற்குச் செலவு வெகு அதிகம்.

இது முடிந்தவுடன் சாப்பாட்டிற்கு எழுந்திருக்கையில் ஒவ்வொரு அதிதிக்கும் ஓர் தாமரை மலர் கிடைக்கும். எகிப்தியருக்குத் தாமரை வெகு சுலபமாய்க் கிடைத்ததால், அதையே சாதாரண மரியாதை யாக்கினர் போலும். இந்தப் பூவை வாங்கியவர் விருந்து முடியும்வரை கையிலே வைத்துக்கொண்டிருப்பது மரியாதை. தவிர தாமரை முதலிய புஷ்பங்களை மாலையாக்கி அதிதிகள் தலைக்குச் சுற்றுவதும் சாமான்னிய மரியாதையாம்.

அதிதிகள் உட்கார்ந்தவுடன் எல்லோருக்கும் சிறு கிண்ணங்களில் திராக்ஷரசம் குடிக்கக் கொடுப்பார்கள். ஆண், பெண் இருதிறத்தாரும் குடிப்பது வழக்கம். குடித்துவிட்டு யஜமானனுக்கு ஆசிகள் வழங்கிச் சங்கீதம் பரதம் முதலியவற்றை நுகர்ந்து அதிதிகள் ஆனந்தமாயிருக்க, சிறிது சிறிதாக விருந்துப் பண்டங்கள் வெளிவரும். ஸ்திரீ புருஷர்கள் கலந்தும் உட்காருவதுண்டு. வெவ்வேறு அறைகளில் உட்காருவதுமுண்டு. கலந்து உட்காருவதில் ஆக்ஷேபமிருந்ததாகக் காணவில்லை. அதற்கு மாறாகத் தம்பதிகள் சேர்ந்து உட்காருவதே அவர்கள் சிலாக்கியமாகக் கொண்ட விஷயம். விருந்திடுபவர் தம்பதியாக உட்கார்ந்து வந்தவர்களை யுபசரித்து இடங்காட்டுவார்கள். சங்கீதக்காரரும், கூத்துக்காரரும், இவர்களுக்கு எழுந்து மரியாதை செய்வார்கள். தென்னிந்தியாவில் விலைமாதர் கச்சேரி நடக்கையில், வருபவருக்கு மரியாதை செய்வதற்காக ஒரு பெண் 'ரெடி'யாயிருப்பது போல வென்க. யஜமானனுடைய மேஜைக்காலுக்கு ஒரு குரங்கோ, நாயோ, அல்லது வேறு 'செல்வப்பசுவோ' கட்டியிருக்கும்.

பெண்டுகள் கூடியிருக்கும் இடங்களில் பேச்சு வெகு பலமாகக் கேட்கும். இப்பொழுதும் எங்நாட்டிலும் காணுகிறபடியே எகிப்தியரிலும் ஸ்திரீகள் ஆடை ஆபரணங்களைக் குறித்தே வெகுதூரம் பேசுவார்கள். ஜிமிக்கை அழகும், புடவைத்தரமும், தட்டார் வரன்முறையும், சாலியன் பெருமையும் எத்தனை அத்தியாயம் வேண்டுமானாலும் வரையலாம். ஆனால் நமது ஸ்திரீகளுக்கில்லாத ஆபரணம் ஒன்று எகிப்திய ஸ்திரீகளுக்குண்டு. அதாவது கால்களுக்குப் பாதரக்ஷை. இதைப்பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். ஆதலால் இச்சமயத்தில் பாதரக்ஷை வருணனை வெகு விசேஷமாக நடக்கும். வந்தவரெல்லோரும் வீட்டின் அழகையும், அதிலுள்ள படங்கள் முதலியவற்றின் அழகையும், பாத்திரங்களுடைய பெருமையையும் புகழ்ந்து, எஜமான், எஜமானி யிவர்களுக்குத் திருப்தியுண்டாக்குவார்கள்.

மதுவைப்போலவே மாமிசாதிகளும் பல வகைப்பட்டன. ஆனால் பசுமாடுமட்டும் எகிப்தியருள் தீனிக்காக வதை படுவதேயில்லை. காளைகளும், கன்றுகளுமோ வென்றால், தாராளமாய்க் கொல்லப்படும். கறிவகைகளும், மச்சவ்கைகளும், மாமிசவகைகளும், திராக்ஷரசமும் வேண்டியமட்டில் பரிமாறுவார்கள்.

அதிதிகள் கீழேயாவது அல்லது நாற்காலியின் மேலாவது உட்காருவார்கள். மேனாட்டாரைப் போல கத்தி, முள் முதலிய ஆயுதங்கள் இவர்களுக்குள் இல்லை. ஆதலால் வலதுகையைக் கொண்டே சாப்பாட்டுக் காரியம் ஆகும். சாப்பிட்டவுடன் கைகழுவுவது சாதாரண வழக்கம். நம்மவரில் தேசஸ்தப் பிராம்மணருக்குள் கைகழுவச் சர்க்கரை உபயோகிப்பதுண்டு. அதுபோல எகிப்தியருள்ளும் ஏதோ ஒரு பொடியை உபயோகிப்பார்கள்.

சாப்பாட்டுக்கு உட்காரும்போது ஈசுவரனுக்கு நமஸ்காரம் சொல்லாமல் எகிப்தியர் சாப்பிடுவதே யில்லை. இந்தியாவில் எல்லா

வருணத்தாரும் இதை யனுஷ்டிப்பது ஓர் பெரிய சனாதன தருமம். சாப்பிடும் போதோ, அல்லது சாப்பிட்டான பிறகோ, ஆஸிரிஸ் தேவதையின் உருவத்தை ஒரு க்ஷேமித்த பிரேதம் போல அதிதியொவ்வொருவருக்கும் காட்டுவதுண்டு. தேகம் அநித்தியமாதலால், ஒருவரை யொருவர் விசுவசித்து, நன்றுய்த் தின்று, ஈசுவரனை மறவாமல் காலங்கழிக்க வேண்டுமென்பது இதன் உட்கருத்து. சாப்பாடு முடிந்தவுடன் மறுபடி சங்கீதமோ, நாட்டியமோ, கொடி வித்தையோ, நடக்கும். பிறகு விருந்து முடிவுபெறும்.

## 7. எகிப்தியரின் மதம்.

எகிப்து நாட்டில் ஒரு மனிதனைக் காண்பதைக் காட்டிலும் ஒரு தெய்வத்தைக் காண்பது எளிது என்று ஒருவர் கூறுகின்றார். உண்மையாகவே எகிப்தியர் வணங்கிவந்த தெய்வங்கள் பலவாம். ரா, ஹோரஸ், ஆஸிரிஸ், ஐஸிஸ், தமு, ஆமே, ஸேத் முதலிய பல கடவுளர்கள் அவர்களால் வணங்கப்பட்டனர். ஒவ்வொரு கடவுளின் தாராதரமும் பதவியும் இன்னவென்பது கூறமுடியாததாகும். எகிப்தியருக்குக்கூட அவ்விஷயங்கள் தெரியாமலேயிருந்ததுண்டு. இவ்வாறு பல தெய்வங்கள் கொண்டாடப் படுவதற்குக் காரணம், எகிப்தியர் தனித்தனி ஸமூகங்களாகஇருந்தபோது போற்றிவந்த தெய்வங்களையே, அவர்கள் ஓரரசன் கீழமர்ந்தபோதும்விடாமல் கொண்டாடிவந்தனர், என்பதாம். இவ்வாறு வெளித்தோற்றத்துக்கு எகிப்தியர் பலகடவுளைத் தொழுபவர் என்று தோன்றின போதிலும், உண்மையில் அவர்கள் அனைவரும் ஒரே கடவுளைத்தொழும் வகுப்பினரென்பது ஊன்றிநோக்கின் தெரியவரும். ஸர்வஜகத் காரண பூதரான தெய்வம் "ரா" என்பதாம். "ஹோராஸ்" என்பது சூரியமூர்த்தி. சிலவேளைகளில் "ரா" வும் "ஹோரஸு" ம் ஒன்றாக மதிக்கப்பட்டதுண்டு, என்றாலும் ஆங்காங்கு வாழ்பவர் தங்கள் தங்களுக்கேற்ற தெய்வத்தையே முதற் கடவுளாகப் பாவித்து வந்தனர். இதனால்தான் ஒவ்வொரு தாழ்ந்த தேவதையும் உயர்ந்த தேவதையாயிற்று. நான்காம் அமென்ஹோதப்என்னுமரசன் சூரியதெய்வத்தையே பரம்பொருளாகக் கொண்டாட வேண்டி சட்டமிட்டானென்றும், அவனுடைய முயற்சி பயன் பெறவில்லை யென்றும் முன்னமேயே கூறியுள்ளோம். இவ்விஷயம் நமது இந்தியாவில் ஆக்பர் சக்கரவர்த்தி ஏற்படுத்திய ஒரு கொள்கையை ஞாபகப்படுத்துகின்றது. நவீன துவேஷிகளான எகிப்தியர் அக்கொள்கையை அங்கீகரிக்கவில்லை. பழையகொள்கை முன்னிலும் பன்மடங்கு அதிகமான மும்முரத்துடன் அனுசரிக்கப்படத் தொடங்கிற்று. அதுமுதல் எகிப்தியருடைய மதம் மாறுபாடடையவில்லை. எகிப்தியரது கொள்கைக்கும் மற்றைய மதத்தினர் கொள்கைக்கும் அதிக வித்தியாசமில்லை. ஆத்மா நித்தியம் என்பது எகிப்தியரது அபிப்பிராயம். அவர்களுடைய போதனைகள் எல்லாம் மாந்தர் நன்னெறியில் நடந்தொழுக வேண்டுமென்று வற்புறுத்துகின்றன.

அவர்கள் வணங்கிவந்த தெய்வங்களைப்பற்றி இரண்டொருவார்த்தை சொல்லுவாம். "ஆமென்" என்பது எகிப்து தேசத்தின் வடபாரிசத்தில் அரசுசெலுத்திய எதியோபியரின் முக்கியகடவுளாம். சண்டைசெய்யும்போது அவர்கள் அத்தெய்வத்தின் பெயரையே கூவிக்கொண்டு போவார்கள். அத்தெய்வம், அவர்களுக்கு அசரீரியாய் நின்று வர்த்தமானங்களை வெளியிடுவதுண்டாம். எதியோபியா அரசர்களை அத்தெய்வமே தேர்ந்தெடுக்குமாம்.

"அனுபிஸ்" என்பது எகிப்தியருடைய வேட்டைத்தெய்வம். அது நாய்த்தலையையுடையது. வேட்டையாடுவதில் நாய் மிகுந்த உதவிசெய்வதினால், வேட்டைக்கு அதிதெய்வமான 'அனுபிஸ்' என்னும் தேவதைக்கு நாய்த்தலையை யமைத்தனர் போலும்!

இவ்வனுபிஸ் ஆஸிரிஸ் என்னும் தெய்வத்தின் மகனும்.

"ஆபிஸ்" என்பது எகிப்தியருடைய நந்தி யங்கடவுள் எனப்படும். காகெள என்னும் அரசனல் இத்தெய்வத்தின் வழிபாடு ஏற் படுத்தப்பட்டது. ஒரு பசுவின் வயிற்றினின் றும், மின்னலினுல் கருத்தரிக்கப்பட்டு, இந் நந்தி தோன்றுகின்றதென்பது எகிப்தியரின் அபிப்பிராயம். இவ்விருஷபத்தின் நிறம் கரு மை. முகத்தில் நாற்கோண வடிவுள்ள ஒரு வெள்ளைச்சதுரம் இருக்கும். அதன் முதுகில் ஒரு கழுகின் உருவமும், நாக்கில் ஒருவித வண்டின் உருவமும் இருக்கும். வால் மயிர் இரட்டையாக விருக்குமாம். இவ்வித அடை யாளங்களுடைய காளையைத் தேர்ந்தெடுத்து, அதற்கென்று ஏற்பட்ட கோயிலில் கொண்டு போய்விட்டு அதைத் தொழுவார்கள். இந் நந்தியைக் குறித்துக்கொண்டாடப்படும் திரு விழா ஏழுநாள் நடைபெறும். திரள் திர ளான ஜனங்கள் விழவு நடக்கும் 'மெம் பிஸ்' நகரத்துக்குச் செல்வார்கள். இந் நந்தி ஆஸிரிஸ் என்னும் தெய்வத்தின் அவ தாரமென்று எகிப்தியர் எண்ணியிருந்த படியால், ஜனங்கள் அதனிடம் ஆரூடம் கேட்க வருவார்கள். கொடுக்கப்படும் உண வை அது ஏற்றுக்கொள்ளுமானல் நற்சகுன மென்றும், ஏற்றுக் கொள்ளாமற்போனல் தீய சகுனமென்றும் கருதப்பட்டது. நமது நாட்டில் பிண்டத்தைக் காக்கை எடுத்துத் தின்னுமலிருந்தால், சிராத்தம் பலிப்பதில்லை யென்று எண்ணுவதுபோல வென்க. தீப தூபங்களால் அந்நந்தியை ஆராதித்துவிட்டு அதன் காதருகில் சென்று ஆரூடம் கேட்க விரும்புவோர்கள் பலவிதக்கேள்விகளைக் கேட் பார்கள். கேட்டபிறகு ஜனங்கள் தங்கள் இரு காதுகளையும் பொத்திக்கொண்டு வெளியில் வந்து கைகளைச் செவித்துளையினின்றும் எடுப் பார்கள். அப்போது முதன்முதல் செவியில் விழும் வார்த்தையையே தாங்கள்கேட்ட ஆரூ டத்தின் விடையென்று கருதுவார்களாம். ஒரு விருஷபம் இறந்துவிட்டால், அதைப்போன்ற ஏற்ற லக்ஷணங்கள் பொருந்திய வேறொரு விருஷபத்தைக் கண்டுபிடிக்கும் வரையில் ஜனங்கள் துக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள். புதி தாக நந்தி கிடைத்ததும் அதைச் சகல மரி யாதையுடனும் மெம்பிஸ் நகரத்துக் கோவி லில் கொண்டுபோய்ச் சேர்ப்பார்கள்.

"ஆதென்" என்பது சூரியதெய்வம். அத னைத்தான் நான்காம் அமென்ஹோதப் என்னு மரசன் முதற்கடவுளாக்க முயன்றான்.

"ஹோரஸ்" என்பதும் சூரியமூர்த்தி. ஒவ்வொரு நாளும் மனிதகோடிகளின் நன் மைக்காக 'ஸேத்' அல்லது 'ஸூதேக்' என் னும் அசுரனுடன் சண்டைசெய்வது இந்த 'ஹோரஸ்' என்னும் தெய்வமாம். இவ்வசு ரன் ஒவ்வொரு ராத்திரியிலும் தோற்றோடிப் போய், மற்றும் நாட்காலையில் முன்போலச் சண்டைக்கு வருவானும். இவ்விஷயத்தில் இந்தியர்களுக்கும் எகிப்தியர்களுக்குமுள்ள ஒருவித ஒற்றுமை கவனிக்கத்தக்கது.

"ஐஸிஸ்" என்பதன் வணக்கம் எங்கும் வியாபித்திருந்தது; இதற்கென்ற திருவிழா புஸிரிஸ் என்னுமிடத்தில் நடைபெற்றது. தர்மதேவதையெனக் கொண்டாடப்பட்டது இந்த ஐஸிஸ் தேவதையே.

"ஆஸிரிஸ்" என்னும்தேவதை மனிதர்க ளுக்கு உழவுதொழிலைக்கற்றுக்கொடுத்ததாம். பாட்டு, கூத்து முதலிய கேளிக்கைகளுக் கெல் லாம் இதுதான் அதிதேவதை. உலகமுழுவ திலும் நாகரீகத்தைத் தெரிவிப்பதற்காக இத் தேவதை சஞ்சாரம் செய்ததாம். இதன் தம்பியான 'தைபூன்' அண்ணனைக் கொன்று அவன் உடலை இருபத்தாறு கூறாக்கி விட்டா னும். ஆஸிரிஸின் மனைவியான மேற்கூறிய ஐஸிஸ் கணவனின் உடற் கூறுகளைச் சேர்த் தெடுத்ததில் அவனுடைய சிறப்பு அவயவத்

தைக் காணுமையால், அதைப்போன்ற உருவ மொன்றைச் செய்து தெய்வமெனக் கொண்டாடும்படி ஜனங்களுக்குக் கட்டளையிட்டன ளாம். அவ்வாறு இலிங்கமாகிய ஆஸிரிஸின் சிறப்பு அவயவம் வணங்கப்படும் பொருள்களில் ஒன்றுக ஏற்பட்டதெனக் கர்ண பரம்பரைச் செய்தியுண்டு. ஆஸிரிஸ் இந்தியாவில் பிறந்ததாக ஒரு சாரார் கூறும் கூற்றுக்கும் மேற்கூறிய இலிங்க வணக்கத்துக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு.

கோயில்களில் பூஜைசெய்யும் குருக்கள்மார் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டிருப்பார். யாரேனு மொருவன் இறந்துபோனுல், நெருங்கிய சுற்றத்தார் தலைக்ஷவரம் செய்துகொள்வதில்லை. மயிரை வளரவிடுவார்கள். எகிப்தியனொருவன் தேச சஞ்சாரம் செய்தால் திரும்பி வரும் வரையில் க்ஷவரம் செய்துகொள்வதில்லை. மகம்மதியர்களைப் போலவே, எகிப்தியரும் தங்கள் சிறுவர்களுக்கு 'ஸுன்னத்' பண்ணுவதுண்டு. ஆடவர்கள் இரண்டு வஸ்திரங்கள் உடுத்துக் கொள்வார்கள். ஸ்திரீகளுக்கு ஒரே வஸ்திரந்தானுண்டு. குருக்கள்மார் மூன்று நாள்களுக் கொருமுறை தேக சுத்தத்துக்காகச் சர்வாங்க க்ஷவரம் செய்து கொள்வார்களாம். பிரதிதினமும் அவர்கள் பகலிலும் இரவிலும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் பண்ணுவார்கள். மாமிச போஜனம் அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தது. குருத்துவம் பரம்பரை பாத்தியமானது. பானத்திற்கு வெண்கலப் பாத்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. பாத்திரசுத்தியிலும் தேக சுத்தியிலும் எகிப்தியர் முதன்மையானவர். வைதீக கருமங்களை எள்ளளவேனும் பிழைபடாமல் செய்வார்கள்.

காளை மாடுகளை அவர்கள் பலியிடுவதுண்டு. இந்தியர்களைப் போல, எகிப்தியர்களும், பசுவை மட்டும் சர்வ பரிசுத்தமான பிராணியெனக் கொண்டாடுவார்கள். எகிப்தியர்கள் அந்நியருடைய பாத்திரங்களைத் தொடமாட்டார்கள். அந்நியரால் பாகஞ் செய்யப்பட்ட சோற்றை உண்ணுர்கள். பலியிடுவதில் ஆடுகள் சிலகோவில்களில் உபயோகிக்கப்பட்டன. பன்றி, எகிப்தியருக்குச் சர்வ நிஷித்தமான பிராணி. எவனுவது பன்றியைத் தொட்டு விட்டால், உடனே ஸசேல ஸ்நானம் செய்ய வேண்டும். பன்றி மேய்ப்பவர்கள் கோயில்களுக்குள் வரக்கூடாது. அவர்கள் மற்றை வகுப்பாருடன் கல்லியாண சம்பந்தம் செய்யவுங்கூடாது. இந்த அசுத்தப்பிராணியும் பாக்கஸ், லூனு, என்னும் தேவதைகளுக்குப் பௌர்ணமி தினங்களில் பலியிடப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது.

அரசனுடைய சர்வாதிகாரத்துக்குத் தடையாயிருந்தவர் குருக்கள்மார் என்று முன்போரிடத்தில் கூறியிருக்கிறோம். அவர்களுக்கு விசேஷ பலமுண்டானது அவர்களுடைய அளவிறந்த செல்வத்தினலேயே. தர்மசிந்தையுள்ள ஒவ்வொரு அரசனும் கோவில்களுக்குப் பலவிதமாகத் தானங்கள் செய்வான். ஜனங்களும் பிரார்த்தனை செய்து காணிக்கைப்பொருள்களைக் கொடுப்பதுண்டு. பூமிகள், தோப்புகள், கறவைமாடுகள், காளைமாடுகள், பொன் வெள்ளிக்கட்டிகள், நவமணிகள், அடிமைகள் முதலிய எப்பொருள்களும் கோயில்களுக்குக் காணிக்கையாகக் கொடுக்கக் கூடியனவாம். தேவஸ்தானத்தைச் சேர்ந்ததாகவே ஒரு சயின்னியம் இருந்ததென்ருல், அதன் செல்வாக்கையும் சிறப்பையும் பற்றித் தனியே கூற வேண்டுமோ?

கீழ்ப் பிராணிகளுக்குள், எகிப்தியரால் கொண்டாடப்பட்ட சில ஜந்துக்கள் இருந்தன. பூனை, கீரி, நாய், கழுகு, ஓநாய், முதலை முத

லியவைகள் அவர்களால் பூஜிக்கப்பட்டு வந்தன. இவைகள், எகிப்தியருக்குத் தீங்கிழைத்து வந்த மற்றைய பிராணிகளுக்கு விரோதிகளாக இருந்தபடியால் பூஜிக்கப்பட்டன போலும். ஆனால் எகிப்தியர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காரணம் கூறுகின்றனர். ஆஸிரிஸ் என்னும் தேவதையின் ஆத்மா ஒரு காளை மாட்டில் புகுந்தபடியால் காளைமாடுகள் பூஜார்ஹமாயின. பூஜாவிதிகளடங்கிய கிரந்தத்தை ஒரு கழுகு மூக்கினால் தூக்கிக் கொண்டுவந்ததினால், அது பூஜிக்கப் பட்டது. ஓநாய் சண்டைக்குத் துணை செய்தது. மீனிஸ் என்னும் அரசன் நாய்களால் துரத்தப் பட்ட போது மோரிஸ் என்னும் ஏரிக்குப் போய்ச் சேர்ந்து, அங்கு கரைமீதிருந்த முதலையின் மீதேறிக் கொண்டு அக்கரையேறிப் பத்திரமாய்ப் போனபடியால், முதலை கொண்டாடப் படக் கூடியதாயிற்று. இவ்வாறே எகிப்தியர் பூஜிக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு ஐதிகமான காரணமுமுண்டு.

இவைகள் எல்லாவற்றையுங் காட்டிலும் எகிப்தியருள் வெகு ஆச்சரியமான வழக்கமொன்றுண்டு. அஃதென்னவெனில், அவர்கள் பிரேதேசங்களைப் பதனஞ் செய்ததுவாம். பிரேதங்களைச்சுகந்த பரிமள வஸ்துக்களால் பதனப் படுத்துவதற்காகச் சில உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பிரேதத்தினுடைய மூளையையும் குடரையும் ஆயுதங்களினாலும் மருந்தினாலும் வெளியே எடுத்து, அவைகளைப் பனங்கள்ளினால் கழுவி, பரிமளப் பொடிகளால் நிரப்புவார்கள். உடலுக்குள்ளும் சுகந்த வஸ்துக்களை நிரப்பி, அதை மறுபடியும் நன்றாகத் தைத்து, அதன் மீது ஒருவித திராவகத்தைத் தடவிச் சிலகாலம் வைத்திருப்பார்கள். பின்னர் மறுபடியும் அப்பிரேதத்தைக் கழுவி, ஒருவித பசையில் நனைக்கப்பட்ட பஞ்சுத்துணியால் சுற்றி உறவினரிடம் கொடுத்து விடுவார்கள். இவ்வாறு செய்வதற்கு அதிகச்செலவு பிடிக்குமாகையால், ஏழைச்சனங்கள், குடர் முதலியவற்றை வெளியே எடுக்காமல் உடலுக்குள் செல்லும்படி ஒருவித திராவகத்தை ஊற்றிச் சிலகாலம் வைத்திருந்து, சுகந்தப் பொடிகளால் பிரேதத்தைப் பதனம் செய்வார்கள். அழகாலும், அந்தஸ்தாலும் மேம்பட்டோருடைய பிரேதம் நாலைந்துநாள் வீட்டிலேயேயிருந்த பிறகு தான் பதனஞ் செய்வதற்கு அனுப்பப் படும். உறவினர்கள் அவ்வாறு சுகந்தமூட்டப்பட்ட பிரேதத்தைத் தகுந்த அளவுள்ளதோர் பெட்டியில் அடக்கஞ்செய்து பிரேத அறையில் சுவற்றின்மீது சார்த்தி விடுவார்கள். இவ்வாறு பதனம் செய்யப்பட்ட பிரேதங்கள் நெடுங்காலம் கெடாமலிருக்கும். நாலாயிரம் வருஷங்களுக்கப்பால் கண்டெடுக்கப்பட்ட பிரேதங்கள் இன்னும் ஆச்சரியப்படத்தக்க நல்லநிலைமையில் இருப்பனவற்றை ஐரோப்பியக்கண்காட்சிசாலைகளில் காணலாம்.

இவ்விதமான பிரேதங்கள் உறவினரால் நன்கு மதிக்கப்பட்டு வந்தன. இவைகள் கடனுக்கு ஈடாக வைக்கப்படுவதுமுண்டு. அவ்வாறு வைத்த பிரேதங்களை மீட்காமல் போனவர்கள் இறந்தால், அவர்களுக்குச் சரியான சரம கிரியைகள் செய்யப்படாவாம். கடன் கொடுத்தவர்களை ஏமாற்றப்பார்க்கும் கெட்ட வழக்கத்தைத் தடுப்பதற்காக இந்த விதியை உண்டுபண்ணினர் போலும்!

(இன்னும் வரும்.)

---

பள்ளிக்கூடங்களில் சம்பளம் உயர்த்துவதற்கு முக்கிய காரணம் கட்டடம் முதலிய துணைக்கருவிகள் நன்றாகவேண்டுமென்பதும், முதற்கருவியாகிய உபாத்தியாயருக்கு வயிறுநிறையச் சாப்பாடு கிடைக்கவேண்டுமென்பதுமாம். ஆனால் முந்தியது வெகு சுலபமா யாகிவிட்டது. உபாத்தியார் பிழைப்புத்தான் பழையபடியே இருக்கிறது. பிரைவேட் மானேஜர்களுக்கு இவ்விஷயத்தில் அக்கறையே கிடையாது. ஆதலால் இது விஷயத்திலும் சர்க்கார் நிர்ப்பந்தமில்லையேயென்று ஒரு உபாத்தியாயர் பிரலாபிக்கிறார்.

# மேனாட்டாரும் கீழ்நாட்டாரும்
## வித்யாவிஷயம்

(தொடர்ச்சி)

ஸ்ரீமான் கே. ஏ. துரைசாமி அய்யர் அவர்கள் பி.ஏ., எல்.டி.

சென்ற பங்குனிமாதத்துச் சஞ்சிகையில் வித்தியாவிஷயம் கூறிப் போந்ததில், முக்கியமாய் வித்தைகளை அபிவிருத்திசெய்யும் கிரமங்களும், அதற்கு வேண்டிய உபாயங்களும் கூறப்பட்டதுடன், காலத்திற்குத் தகுந்தபடி வித்தைகளை யனுசரித்தும், சற்றே மாறுபடுத்தியும் கொண்டுபோக வேண்டுமென்னும் விஷயம் கூறலாயிற்று.

இந்தச் சஞ்சிகையில் வேறு சில அம்சங்களை ஒருவாறு வரைவதாக உத்தேசித்திருப்பதில், சில சாரார்களுக்கு அபிப்பிராய பேதங்கள் காணப்படுமாதலின் அவர்கள் நொந்துகொள்ளாமல் மன்னிக்கவேண்டுமென்னும் பிரார்த்தனையை முன்னிட்டு எழுதலாகிறது.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று கூறியுள்ளது யாவரும் அறிந்த விஷயமே. சகல ஜாதியாரும் இவ்வளவு அருமையான வித்தையைக்கற்றுக்கொள்ளவேண்டுமென்பது அவசியமாய்த் தோன்றுகிறதானுலும், சிலர் இதினின்றும் வித்தியாசமாய் அபிப்பிராயப்படுவார்களென்பது திண்ணம். அவர்கள் அங்ஙனம் எண்ணுவதற்குச் சான்றுகள் சாமான்னிய நடவடிக்கைகளில் சில சமயங்களில் ஏற்படுகின்றன. 'கீழ் ஜாதியார்' என்று கூறப்படுபவர்களுள் சிலர் தத்தம் வித்தியா மகிமையால் உன்னத ஸ்தானங்களை வகிக்கும்படி ஏற்படுகிறதால், சில சமயங்களில் 'உயர்ந்த ஜாதியார்' சற்று உதாசீனமாய் நடத்தப் படலாம். இது வித்தையினுடைய தோஷமா, அல்லது அந்த வித்தையைக் காரியாகாரியங்களில் அனுபவத்திற்குக் கொண்டு வராததா என்பதைக் கூறவும் வேண்டுமா?

"நிறைகுடம் நீர் தளும்பாது" என்னும் நியாயம் நன்ருய்க் கற்றறிந்தவர்களுக்கே அல்லாது, அரைகுறையாய்ப் படித்தவர்களுக்கல்லவல்லவா? ஆதலால் சில சமயங்களில் இம்மாதிரி காணப்படும் தோஷங்களை முன்னிட்டு வித்தை மற்றவர்களுக்கு வேண்டாமென்று கூறுவது அவ்வளவு நியாயமாய்த் தோன்றவில்லை. தர்ம நியாய சாஸ்திரங்களைக் கற்றவர்களிலுஞ் சிலர் மேல் ஜாதியாராகினும், அவற்றைத் தம் நடவடிக்கையில் அனுபவத்திற்குக் கொண்டுவரக் கூடவில்லை யென்பது சாதாரணமாய்க் காணப்படுகின்றது.

தவிர சற்றேனும் எழுதப்படிக்கத் தெரியாதவராயின் அவர் எளிதில் மோசத்திற்கும், தற்குறியார் கையெழுத்துப் போடப்பட்ட பத்திரங்கள் சில சமயங்களில் பிறந்து அவற்ருல் உபத்திரவத்திற்கும் ஆளாகிருர்கள். கணக்குவழக்குத் தெரியாதவர் ஆனதினுல் உத்தியோகஸ்தர்கள் நியாயங்களை எடுத்துச் சொன்னுலும், சட்டங்களையும் கணக்குகளையும் காண்பித்தாலும், கிரகிக்கும் சக்தியின்றித் தப்பபிப்பிராயங்களுடன் நடக்கிருர்கள். இம்மாதிரியான குறைவுகளை நீக்கவும், வேலையில்லாக் காலங்களில் ஏதாகிலும் சன்மார்க்க போதனைகளடங்கிய புஸ்தகங்களைப் படித்துக் காலத்தைப் போக்கட்டும் என்று உத்தேசித்தும், எவ்விதமான பிழைப்பிற்கும் கல்வி யனுகூலமாயிருப்பதால், மேனாட்டு ராச்சியங்களில், வித்தை சகலமான ஜனங்களுக்கும் அவசியமென்று சட்ட நிரூபண சபைகள் மூலமாக அவர்களுக்கு வித்தை கற்பிக்கும் விஷயமாய்ச் சட்டங்கள் பிறந்திருக்கின்றன.

சாதாரணமாய், ஆறு, ஏழு, வயதுமுதல், 14, 15-வயது வரையில் எல்லாரும் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த்தான் தீரவேண்டுமென்று நிர்ப்பந்த முண்டு. ஒவ்வொரு குடியிருப்பிலும்

படிக்கத் தகுந்த குழந்தைகள் எவ்வளவு உள்ளன என்று கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. அக்குழந்தைகளுடைய தாய் தகப்பன்மாரோ அல்லது ரக்ஷகர்களோ, அவர்களைக்கிரமமாய்ப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதினின்றும் தவறுவரேல், அவர்கள் சிக்ஷைக்குப் பாத்திரர் என்று சட்டம் படிக்கிறது.

தாய்தந்தையர்கள் பரம ஏழைகளாயிருந்து குழந்தைகளுக்குச் சம்பளங் கொடுக்கவும், புஸ்தகம் கடித முதலியவை வாங்கிக் கொடுக்கவும் சக்தியற்றவர்களா யிருக்கலாமாதலின், அக்குறையை நிவாரணஞ் செய்யும்பொருட்டு, ஸ்கூல் அதிகாரிகள் அத்தகைய குழந்தைகளைச் சம்பளமில்லாமற் படிப்பிப்பதும் தவிர, அவர்களுக்கு வேண்டிய உபகரணங்களையும் சம்பாதித்துக் கொடுக்கிறார்கள். இதுமாத்திரமேயல்ல. ‘வீட்டிலே குடிப்பதற்குக் கஞ்சியும் கூழுந்தான்’ என்னும் அவஸ்தையில் அநேகர் இருக்கலாமாதலாலும், பசி உபத்திரவம் ஒரு பக்கமிருந்தால் படிப்பில் கவனம் செல்லாதாதலாலும் ஏழையர்களுடைய இக்கஷ்டத்தை நீக்கச் சில ஸ்கூல்களில் ‘இடைவேளையுண்டி’ உதவி, ஆதரவுடன் குழந்தைகளைப் படிப்பிக்கிறார்கள்.

தவிரவும் கைத்தொழில் செய்து ‘அத்தக்கூலி’ வாங்கிப்பிழைக்கும் ஜனங்களின் குழந்தைகள் பாலிய பருவத்திலிருந்தபோதிலும் குடும்பத்திற்கு யதாசக்தி திரவியம் சம்பாதித்துக்கொடுக்கிறார்கள். ஆதலின், அந்தச் சகாயத்தைக்கெடுக்காமல் அவர்களுக்கும் ஒருமாதிரி வித்தியாப்பியாஸம் கிடைக்கும் பொருட்டு ‘இராத்திரிப் பள்ளிக்கூடம்’ நடத்தி வருகிறார்கள். குடியானப்பிள்ளைகள் உழவு, பயிர்நடுதல், அறுப்பு முதலிய காலங்களில் ஸ்கூலுக்குப்போக அனுகூலமா யிராததால், அவர்களுக்கும் ஏகதேசமாகச்சாகுபடி இல்லாத காலங்களில் ஸ்கூல்கள் நடத்தப்படுகின்றன. குருடு, செவிடு, ஊமை, முதலியோர்க்கும் இவ்வாறே! இம்மாதிரியாக சகல குழந்தைகளும் வித்தையை யடையவேண்டுமென்னும் கருத்துக்கொண்டு, ‘கட்டாயப் பிரைமரிப் படிப்பு’ ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நம் இந்து தேசத்தில், பிள்ளைகள் மாத்திரமே அதிகமாய்ப் பள்ளிக்கூடத்திற்குப் போவதால், மேனாட்டிலும் அப்படியே இருக்கலாமென்று நினைப்பது சகஜமே. ஆனால் அங்கேயோ அப்படியல்ல. பிள்ளைகளுக்குப் படிப்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்களுக்கும் அவசியமென்று தீர்மானிக்கப்பட்டு, அவர்களுக்குத் தனித்தனி ஸ்கூல்கள் வைத்தும், கலந்தும் படிப்பிக்கப் படுகிறார்கள். இது காரணம்பற்றி மேனாட்டு ஸ்திரீகள் தம் புருஷர்களுடைய பாரங்களைத் தாங்களே சற்றுத் தாங்கியும், தம்குழந்தைகளை நேர்வழியில் படிப்பித்தும், இன்னும் அநேக விதமாய் உபகாரம் புரிகிறார்கள். படிப்புஇவ்வளவுதூரம் நிர்ப்பந்தமாயிருப்பதனாற்றான் சாமான்னியமாய் மேனாடுகளில் (ஜப்பானிலுங் கூடத்தான்) படிக்கத் தகுந்த வயதுள்ள 100-குழந்தைகளில் 95-க்குக்குறையாமல் ஆண்பெண்ணடங்கலாய்ப் பள்ளிக்கூடம் போகிறார்கள். தற்குறிகள் துர்லபம். நம் நாட்டிலோ சொல்லவேண்டியதில்லை. நாட்டுப்புறங்களுக்குப் போய்விட்டால் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களைக் காண்பதரிது. “படிப்பு அதிகமாய்ப் பரவாமலிருக்கும்போதே பி. ஏ. பாஸ் செய்துவிட்டு; 15-ரூபாய் உத்தியோகத்திற்குத் தாளம் போடவேண்டி யிருக்கிறதே” என்று சிலர் ஆக்ஷேபிக்கக் கூடும். இங்ஙனம் கூறுவது படிப்பின் பிரயோஜனம் சர்க்கார் உத்தியோகம் ஒன்று தான் என்று நினைப்பதாலல்லவா? அஃதன்று. முக்கியமான தாற்பரியம் என்னவென்றால் அவரவர்படிப்பினால் புத்தி விசாலித்து, தாம் செய்யுங் காரியங்களைப் படிப்பில்லாத தம்முன்னோர் செய்ததினும் சீர்மையாய்ச் செய்யவேண்டுமென்பதல்லவா?

சிலர் சற்று எழுதப்படிக்கத் தெரிந்துவிட்டால் தலை கீழாய் விழுகிருர்கள். அவர் முன்னோர் செய்துவந்த வியவசாயம் நெசவு முதலிய தொழில்கள் இவர்களுடைய கௌரவத்திற்குக் குறைவாகி விடுகின்றன. இங்ஙனம் நினைப்பது என்ன மூடத்தனம்! ஒருகாலத்தில் ஒருவன் பூட்ஸ்களுக்குச் சாயம் பூசிப் பிழைத்து வந்தான். அவன் யோக்கியமாய் வேலைசெய்து வந்தவனுதலால், காலக்கிரமத்தில் அவனுக்கு உயர்ந்த ஸ்திதி வாய்த்தது. அவனைத் தாழ்ந்த நிலைமை முதல் அறிந்த ஒரு கிரகஸ்தன் பொருமையால் அவமானிக்கக் கருதி,'நாலுபேரை வச்சிண்டு' "நீபூட்ஸ்களுக்குச்சாயம்போட்டுக்கொண்டிருக்கவில்லையா?" என்று வினவ அவன் 'மூஞ்சிபிலடிச்சாப் போல்' "ஆம் அது மெய்யே, ஆனுலும் அந்தக்காரியத்தை நான் எல்லோருக்கும் திருப்திகரமாய்ச் செய்துகொண்டு வந்தேனல்லவா?" என்று பதிற் சொல்ல, கிரகஸ்தன் நாணமடைந்து தலைகுனிந்து சென்ருன். இதனுலறியவேண்டியது யாதெனின், அவரவர் ஏற்றுக்கொண்ட வேலையைக் குணம்பெறச்செய்யாததுதான் அகௌரவமேயொழிய, வேலையில் கௌரவாகௌரவம் ஒன்றுமில்லை, என்று. ஆகையால் உபதேசகர்களாய் ஏற்படுகிறவர்கள் இம்மாதிரியான துரபிமானங்களை ஆரம்பத்திலேயே வேரோடு பிடுங்கிக் களைதல் வேண்டுமென்பதும் தானே ஏற்படுகிறது.

நம்மிந்தியாவில் பரோடா தேசத்து மகாராஜாவாகிய சத்திரபதி ஸயாஜிராவ் கைக்வார் மாத்திரம் அவர் ராச்சியத்தில் சம்பள மில்லாமல் 'ப்ரைமரிப்படிப்பு' ஏற்படுத்தி யிருக்கிருர். இந்தியா கவர்ன்மெண்டாரும் அத்தகையப் படிப்புக்கொடுக்க வேண்டியது அத்தியாவசிய மென்று தீர்மானித் துள்ளாராயினும், அதற்கு வேண்டிய திரவிய கோடிகளை அவ்வளவு சடுதியிற்காணக் கூடாமையால் அவர்கள் உத்தேசம் நிறைவேறத் தாமதப்பட்டிருக்கிறது.

ஆனுல் மற்ற ராச்சியங்களில் எங்ஙனம் சாத்தியமாயிருக்கிறது? எந்தக் காரியமும் தக்க ஏற்பாடுகளிருந்தாற் கைகூடுமல்லவா? என்ருல், அங்கங்கே ஜனங்களுடைய அத்தியந்தப் பிரயத்தினமும், ராஜாங்கத்தினுடைய ஒத்தாசையும் சேர்ந்து காரியங்கள் முடிவு பெறுகின்றன. சில ராச்சியங்களில் சர்க்காரே சகல பாரத்தையும் வகித்து நடத்திவருகின்ருர்கள். வேறுசில தேசங்களில் ஜனங்களுடைய உற்சாகமே முக்கிய காரணமாயிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் "வித்தைக்கமிட்டி" ஒன்று ஏற்பட்டு இருக்கிறது. அவ்விஷயமாக ஜில்லாவில் ஒரு விசேஷ வரிபோடவும், அதை வசூலிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு. இம்மாதிரி திரவியத்தைச் சம்பாதித்து வேண்டியபடி விநியோகம் செய்யவே சர்க்காராரும் அதற்கு அனுகூலமாக ஒத்தாசை புரிகிருர்கள்.

தவிரவும் வித்தையில் சிரத்தையுள்ள தனிகர்கள் தங்கள் ஜீவதசையிலேயோ, அல்லது, மரணத்தின் முன்போ, தங்கள் சொத்தில் ஒரு அம்சத்தை வித்தைக்கென்று விட்டுவிடுகிருர்கள். அதனுல் கம்மிட்டியாருக்குச் செலவிற்குவேண்டிய பணம் தாராளமாய்க் கிடைத்து விடுகிறது. இக்கம்மிட்டியார்கள் மாதாந்தர வருஷாந்தர ரிபோர்ட்டுகள் பிரசுரிக்கிருர்கள். அதன் மூலமாய் என்ன என்ன குறைகள் உண்டாயிருந்தன வென்றும், அவைகளை நீக்க எம்மாதிரி முயற்சிகள் செய்யப்பட்டன வென்றும், ஒருவர் அனுபவங்களை மற்றவரனுபவங்களுடன் ஒத்துப்பார்த்துத் தங்கள் முறைகளைச் சீர்படுத்திக் கொள்ளுகிருர்கள். ஆகையால் நாளுக்குநாள் பலவகை வித்தைகளும் செழித்து ஓங்கி வளர்கின்றன.

நம்தேசத்திலும் வித்தை இம்மாதிரிவிருத்தியடையவேண்டுமானுல், நாமும் அவ்வழிகளையனுசரித்து நடந்தால்தான் சாத்தியப்படும்.

எல்லாக் காரியங்களுக்கும் "கவர்ன்மெண்ட் ஏன் செய்யக்கூடாது?" என்று கேட்பது அவ்வளவு யுக்தியுக்தமா யிருப்பதாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் முழுவதும் அன்னிய ஒத்தாசை வேண்டிவந்தால், எக்காலத்தில்தான் நாம் நமது காரியங்களை நோக்கிக் கொள்ளச் சமர்த்தராவது? கவர்ன்மெண்டார் அவர்களாலியன்ற ஒத்தாசை செய்துகொண்டு தானிருக்கிறார்கள். ஆனால் ஜனங்கள் அதிக சிரத்தையெடுத்து உழைத்து, அவர்களை வேண்டிக்கொண்டால் இன்னும் அதிக ஒத்தாசை செய்வார் என்பதிற் சற்றும் ஐயமில்லை. ஆதலால் ஒவ்வொரு கிராமத்திலும் வித்யா நிர்வாக சபையொன்று ஏற்பட்டு, அதன் பிரதிநிதிகள் தாலூகா சபைகளுக்கு மெம்பர்களை அனுப்ப, இப்படியே மேன்மேலும் ஜில்லா சபைகள் ராஜதானி சபைகள் ஏற்பாடாகவேண்டும். விருக்ஷம் அடித்தூண் ஒன்றாயிருந்தும், பெருங்கிளைகளும் சிறுகிளைகளுமாய்ப் பிரிந்து, பரஸ்பரம் பலத்தை யடைவது போல, இச்சபைகள் வலுத்து, விஷயங்களை நேராய் ஆராய்ந்து காரியங்களை யாதொரு இடையூறுகளும் நேராமல் நடத்தவேண்டும். இவ்வளவு பொறுப்பை ஏற்றுக்கொள்வது சிரமமானாலும், பாரம் தூக்கத்தூக்கத்தான் அதிக பாரத்தை வகிக்கப் பூலமுண்டாகும். ஆதலால் சிறிய காரியத்தை முதலி லாரம்பத்திலும், அது எந்தப் பெரிய காரியத்தின் அம்சமோ அதன் பேரில் திருஷ்டிவைத்துக்கொண்டு நாளடைவில் அந்தப் பெரிய காரியமும் எளிதில் முடியும்படி முயலவேண்டும்.

இவ்விஷயங்களுக்கு ஜன உற்சாகமும் தன பலமும் முக்கியம். வித்தையானது ஒரு மனிதனுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொடுக்கும் சாதனமாயிருத்தலால், அந்தத் தானத்தைக் காட்டிலும் விசேஷ பலனைக் கொடுக்கக் கூடியது வேறொன்றில்லையென்று தீர்மானித்து, நம்முள் உள்ள தனிகர்கள் ஒத்தாசை செய்ய முன் வருவாரேயானால், காரியம் எளிதில் கைகூடும். பகவான் ராஜாக்களை ஜனங்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தியிருக்கிறார். அவர்கள் பாரமோ எளிதில் தாங்கக் கூடியதன்று. அது போலத் தனிகர்களுக்கும் பெரிய பொறுப்பை வைத்திருக்கிறார். அவர், "தனம் தன்னுடையவும் தன்குடும்பத்தினுடையவும் விசேஷ சுகத்திற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று நினைப்பது ரொம்பவும் தப்பிதம். "ஜனங்களுடையநன்மைக்காக அவர்கள் தனத்திற்கு ரக்ஷணகர்த்தா" என்று அநேகர் முன் கூறியுள்ளது போல, தற்காலத்தில்ஒருகோடிப் பிரபுவும் தருமசிந்தையு முள்ளவருமான ஆண்ட்ரூ கார்னகீ என்பவர் கூறியிருக்கிறார். அவர் இங்ஙனம் கூறியுள்ளார் மாத்திரமன்று. ஸ்காத்லாந்து தேசத்திலுள்ள சிறுவர்கள் யாருக்கும் தரித்திரத்தினால் படிக்க முடியாமல் போனால், அவர்கள் எல்லோருக்கும் யூனிவர்ஸிடி படிப்பு எளிதில் கிடைக்கும் வண்ணம் கொஞ்ச காலத்திற்கு முன் இவர் $7\frac{1}{2}$-கோடிரூபாய் தர்மமாய் விட்டார். அதுபோல நம்தேசத்திலும் தாதா என்னும் பார்ஸீ தனவான் ஸையன்ஸ் விஷயத்தில் விசேஷமான இரகசியங்களைக் கண்டுபிடிக்குமாறு ஒரு வித்யாசாலை யேற்படுத்த 30-லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இதுபோலவே வேறு சிலரும் செய்திருக்கிறார்கள். இதுதான் தனமிருப்பதற்கு லக்ஷணம். தனத்தின் பிரயோஜனமும் இதுவே. ஆதலால் யாரார்சக்தியுள்ளவர்களோ அவர்கள் எல்லாம் காரியத்தை உபேக்ஷிக்காமல் தம்மாலியன்றவளவு திரவியசகாயம் புரிவரேல் காரியம் கைகூடலாம் என்று தோன்றுகிறது.

இதற்குத் திருஷ்டாந்தமாக நம் நாட்டிலுள்ள சில வித்யாசாலைகள் எம்மாதிரி நடக்கின்றன என்று சற்று ஆலோசிக்கலாம். மிஷினரிகள் என்று ஆங்கிலத்தில் வழங்கும் பாதிரிமார்களையும், அவர்கள் வித்தியா விஷ

யத்தில் செய்திருக்கும் பிரயத்தனத்தையும் என்னவென்று சொல்லுவது? ஆக ஆயிரமைலுக்கப்புறமிருக்கும் ஜனங்கள் ஒரு காரியத்தில் உற்சாகப்பட்டு அதற்கு வேண்டிய சகாயம் புரிந்து தகுந்த மனிதர்களை யனுப்பி அந்தச் சாலைகளை என்ன நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்! உதாரணமாக மதிராஸில் 'மில்லர் ஸ்கூல்' என்று வழங்கி வந்து, தற்காலத்தில் 'கிரிஸ்டியன் காலேஜ்,' என்று பிரசித்தியடைந்திருக்கும் வித்தியா சாலையை எடுத்துக்கொள்ளலாம். ஆரம்ப உத்தேசம் வேறு என்று சிலர் கூறுவர். அது பிரகிருதத்திற்கு யோஜிப்பா யில்லை. இதுவரை நாம் அடைந்திருக்கும் நன்மையை நினைப்போமேல் அத்தியாச்சரியமாயிருக்கிறது. அபலார் இவ்வளவு தூரம் நம்தேசத்தில் செய்யலாமென்றால், அவ்வழியை யனுசரித்தால் நாம் எவ்வளவு செய்யக்கூடாது?

இதுகாறும் தத்தம் நாட்டில் தாமே வித்யா விஷயத்தில் என்னென்ன பிரயத்தனங்கள் செய்தால் கல்வி யபிவிருத்தி யடையும் என்பது கூறிப்போந்தது. நம்மிந்தியாவில் முற்காலத்து ரிஷீசுவரர்களும், பிரம்மஞானிகளும் உபயோகித்துவந்த சம்ஸ்கிருத பாஷையிலுள்ள தர்ம்ம சாஸ்திரங்களும் இதரக்கிரந்தங்களும் படிக்கப்படுவதுடன் ராஜ பாஷையிலுள்ள அநேகவித சாஸ்திரங்களும் கற்றுக்கொள்ளலாம். ஆனாலும் பின்கூறியவற்றுள் விசேஷதேர்ச்சியை அபிலஷிக்கிறவர்களுக்கு இந்நாட்டில் அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டிய அனுகூலங்கள் போதாததால், வெளிநாடுகளாகிய யூனைடெட்ஸ்டாகாணங்கள், இங்கிலாந்து, ஜர்மனி, ஜப்பான் முதலியதேசங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ளவர்களுடையவித்தைகளைக் கூடியமட்டிலறிந்து, நம்நாட்டிற்குத் திரும்பிவந்து அவ்வித்தைகளை இங்கே பலருக்கும் கற்றுக்கொடுத்து இவ்விடத்து முக்கிய குறைகளை நீக்கவேண்டும். இந்தியா முக்கியமாய் வியவஸாய ராச்சியமாயிருக்கிறது. பலவிதக் கைத்தொழில்களும் யந்திரத் தொழில்களும் கற்றுவந்து வியவசாயச் சரக்குகள் அனாவசியமாய் ஏற்றுமதி செய்யப்படுவதை நிறுத்தி, இவ்விடத்திய ஆள்களுக்குக்கூலிகிடைக்கும்படியாயும், இவ்விடத்திலுள்ள தனத்தையே உபயோகப்படுத்தி, கம்பெனிகள் ஏற்படுத்தி யாதொரு குறைவுமின்றி அவற்றை நடத்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். இம்மாதிரி செய்யாதவரையிலும் இந்தியா மற்ற ராச்சியங்களுக்குச் சமமாகத் தலை நீட்டமுடியாது.

இதனால் வெளிநாடுகளுக்குப் போகவேண்டியது அவசியமென்றேற்படுகிறது. காலத்தை யனுசரித்துத் தர்மசாஸ்திரங்கள் இடங்கொடாமற் போனாலும், சாஸ்திரம்தெரிந்தவர்கள் பலருங்கூடி ராச்சியக்ஷேமத்தையே கருத்தாகக் கொண்டு இம்மாதிரி காரியங்களுக்கு அனுவாதம்கொடுப்பதும், வெளிப்புறப்படும் சிஷ்யர்கள் அசல்தேசங்களுக்குப்போனாலும், சொந்த மதாசாரங்களுக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்ளும்படி உபதேசிப்பதும், பெரியோர்கள் கடமையாகும். சமுத்திரயானமும் வேண்டித்தானிருக்கிறது. அது சாஸ்திர விரோதம் என்றுள்ள வாதத்திற்குச் சமாதானங் கூறப்படவில்லை. எதாயினும் ஒரு ஸையன்ஸ் சாஸ்திரத்தில் படிப்பு அதிகமா யடைந்திருக்கும் புத்திமான்கள் போனால்தான் இந்தக் காரியம் சித்தியாகும். ஒவ்வொரு ராஜதானியிலிருந்தும் வருஷத்திற்கு 50-பெயருக்குக் குறையாமல் புறப்பட்டுப்போய் வித்தைகளைக் கற்றுவரவேண்டும். இம்மாதிரி சுமார் 20-வருஷம் செய்தால், நமக்கு வேண்டிய அம்சங்களை எல்லாம் கிரகித்துக் கொள்ளலாம். வங்காளத்திலுள்ள நம் நண்பர்கள் இதில் ஜாக்கிரதையாய் இருப்பது ரொம்பவும் சந்தோஷகரம். முற்கூறியுள்ள ஜில்லாசபை, ராஜதானி சபைகளுடைய காரியமாகுமிது. ஆதலால் தனிகர்களும் புத்திமான்களும் இவ்விஷயங்களுக்கு வேண்டிய பிரயத்தனங்களைக் காலதாமதமின்றிச் செய்து ராச்சியத்திற்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவரேல், எல்லாரும் அவர்களுக்குக்கிருதக்ஞர்களாய் இருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

(இன்னும் வரும்)

## நமது மடாதிபதிகளுக்கு அறிக்கை

### அந்தந்தச் சமயத்தாருக்கு ஞான குருபீடங்களாக விளங்கும் மடாதிபதிகளே!

இந்த மகுடத்துடன் 'பூர்ணசந்திரோதயம்' பத்திரிகையில் வெளிவந்திருப்பதை வேண்டிய மட்டில் எடுத்து இங்கு பிரசுரிக்கிறோம். அது எவ்விதமாகிலும் மடாதிபதிகள் காதுக்கு எட்டவேண்டுவதே நமக்கும் அபிமதம். எ.டி.]

நம் தேசத்தில் உத்தேசம் 20-கோடி ஹிந்துக்கள் இருக்கின்றார்கள். அதில் சென்னை ராஜதானியில் 3-கோடி பெயர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பெரும்பான்மையாரின், ஞானம், ஆசாரம் முதலியவைகள் சம்பந்தப்பட்ட மட்டில், உங்களின் ஆதீனத்திற் குட்பட்டிருக்கின்றார்கள். அவர்களை நல்வழிப்படுத்தலும், ஞானசம்பத்துப் பெறும்படி செய்தலும் அந்தந்த மடத்தைச் சார்ந்தவர்கள் அந்தந்த மடத்தின் சித்தாந்தமாயுள்ள சமயமுறை சம்பிரதாயமுறைகளை அனுஷ்டிக்கும்படி செய்வித்தலும், அந்தந்த மடாதிபதிகளைப்பொறுத்த கடமையாம்.

உங்கள் சிஷர்களான ஜனங்கள் சீலம் நல்லொழுக்கம் முதலியவைகளில் வழுவாது நடைபெற வேண்டியே, அவர்களைப் பாதுகாத்தற் பொருட்டே, உங்களுடைய மடாலயங்கள் உங்களுடைய பூர்வ ஆசாரியர்களால் ஸ்தாபிக்கப்பெற்று இருக்கின்றன. ஜனங்கள் ஞானமின்மையும் ஆசாரக்குறைவும் உடையராக இருப்பார்களாகில், அந்த ஸ்திதிக்கு மடாதிபதிகளும் உத்தரவாதிகள் ஆவார்கள். மனைவியின் குற்றம் கணவனையும், புதல்வனின் குற்றம் தகப்பனையும், மாணவரின் குற்றம் அண்ணாவியையும், ஜனங்களின் குற்றம் மடாதிபதிகளையும் பொறுத்தன.

இப்போது மடங்களும் மடாதிபதிகளும் நல்ல ஸ்திதியில் இல்லை என்று நீங்களே நன்றாய் அறிவீர்கள். கல்வி, கேள்வி, வரவர, மலினமாகிக் கொண்டு வருகிறது. தர்ம முறையும் நீதி முறையும் வரவரக்குன்றி வருகின்றன. சதாசாரமும் சத்சங்கமும் வரவரப் பொய்த்துப் போகிக்கொண்டிருக்கின்றன. வித்வத்சபை, சாஸ்திர விசாரணை, ஞானப்பயிற்சி, தபஸ் இவை போலிவழியில் நிகழ்கின்றன. இன்னும் மடங்களினுடையவும் மடாதிபதிகளுடையவும், குறைகளையும் நேர்மையின்மையையும் சொல்லப்புகில் பெருகும். அதனால் கேட்போர் மனம் நைந்து உருகும். பிரகிருத ஸ்திதியைத் தாங்கள் ஒவ்வொருவரும் ஏகாந்தம் பெற்றுத் தனியாய் அவர் அவர் மனத்தின்கண் சிந்தனை கொள்ளுவீர்களாகில், உண்மையில் நீங்கள் அனுதாபப் படுவீர்கள்.

மண், பெண், பொன் என்ற உலக ஆசைகளை முற்றும் துறந்தவர்களாக உங்கள் முன்னோர்கள் இருந்தமையால், அவர்களுடைய சுயநயம் பாராட்டாமல் பொதுநயம் பாராட்டுவார்கள் எனவும், கர்மபோகிகளாக நடுநிலைமை தவறாமல் நடைபெறுவார்களெனவும் நம்பி, ஜனங்கள் ஏராளமான வருவாய்கள் உண்டாகும் வண்ணம், மானிய நிலங்கள், திரவியங்கள் மடங்களுக்கு நன்கொடையாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போதும் கொடுக்கின்றார்கள்.

ஷை திரவியங்கள் மடத்தின் நியாயமான செலவுகளுக்கும், (அதாவது ஆராதனைகள், குருபூஜை, வித்தியார்த்திகள் உணவு, முதலியன) மடாலயங்களின் மராமத்துக்கும்; எஞ்சினவை பாடசாலைகள் முதலிய தர்மத்திற்குமென்றும் நீங்கள் அறிவீர்கள். வேடிக்கைகள், விளையாட்டுகள், ஆடம்பரமான மற்ற விஷயங்களுக்கு, அத்திரவியங்களை விநியோகிக்கக் கூடாது என்பதும், தங்களுடைய பூர்வ ஆச்சிரமத்திலுள்ள பந்துக்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் அவர்கள் குடும்பக் கிருத்தியங்களுக்கும் அத்திரவியங்கள் உபயோகிக்கக்கூடாது என்பதும், நீங்கள் அறியவேண்டும்.

மேற்படி திரவியங்களும் மற்ற வருவாய்களும், உங்களிடத்தில் மடாலய தர்ம பரிபாலனத்திற்காகவும், அந்தந்த மடத்திற்குரிய சமயமுறையும் ஞானமும், ஜனங்களுக்குள் அபிவிர்த்தியாகிப் பரவச் செய்வதற்காகவும், அடைக்கலமாக ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றன, என்பதை தாங்கள் அறியவேண்டும். அப்பொருள்களுக்குத் தாங்கள் அந்நார்கள், டிரஸ்டிகள், தர்மகர்த்தர்கள், ஆவீர்கள். சொந்தக்காரர்களல்லர்; இதுவே நன்கொடை கொடுத்தவர்களின் கருத்து; பொதுஜன அபிப்பிராயமும் இதுவே; சாஸ்திர தாத்பரியமும் இதுவே; இதற்கு மாறாக எள்ளளவேனும் சுவப்பிரயோஜனம் நாடி ஒரு காசும் செலவழிப்பீர்களேயாகில் அது மகா பாபம். பசு மாடு பயிரில் மேய்ந்தால் கண்டுபிடித்து விரட்டி விடுவார்கள், புலித்தோல் போர்த்து மேய்ந்தால் கண்டுபிடித்து விரட்டல் எங்ஙனம்?

“வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று”—குறள்

அவ்வண்ணம் நடைபெறுவீர்களாகில் துறவிஸ்தானம் என்ற உயர்நலம் அமைந்த பதவியை இழக்கிறதுமன்றி, சிரேயஸ்கரமான பதவியையும் இழப்பீர்கள் என்பதை தாங்கள் நன்கு அறியவேண்டும்.

அந்தந்த மடத்தைச் சார்ந்தவர்களுக்குத் தங்கு தடையின்றிச் சாப்பாடு போட்டுவருகிறீர்கள். அதனால் சோம்பலாளிகளைத் தான் உண்டு பண்ணுகிறீர்கள். அவர்கள் நடமாடும் இறைப்பைகளாக இப்போது திரிகின்றார்கள். அன்னமிடுதல் நலமே. ஆனால் அது பிரயோஜனமுள்ளதாக இருத்தல் வேண்டும். அந்நடமாடும் இறைப்பைகளை, கல்வி அறிவு, கேள்விகளால் நடமாடும் கோவில்களாகச் செய்யுங்கள். அதனால் சுகிருதம் உண்டு.

பக்தஜனங்களின் பிரயோஜனத்திற்காக, யாத்தி

ரை செய்கிறதில், வீணான பரிவாரங்களையும், ஆடம்பரங்களையும் தர்வித்தால், யாத்திரை சுலபமாகவும் அதிகப்பிரயோஜனமுள்ளதாகவும் நிகழும்; சத்காலக்ஷேபம் செய்வதற்குச் சாவகாசங்களும் ஏற்படும். சந்நியாசிகள் வாகனங்களில் ஏறக்கூடாது என்றவிதியிருக்கிறது. பிராணிஹிம்சை ஏற்படுவதால் அன்றோ? மனிதவாகனமான சிவிகையில் ஏறுதல் கொடியபாவம். இதைத்தவிர்த்து ஒருவிதமான பாபத்திற்கும் உள்ளாகாமல், ரயில்வண்டி மோட்டார்கார், பைஸிக்கீல் முதலிய நவீன வண்டிகளில், ஆசாரக்குறைவுக்கு இடமில்லாமல் ஏற்பாடு செய்து, யாத்திரை செய்தல் நன்மையாம். உயிர்பாகமான ஞானமுறையை விடாமல் உடல்பாகமான வெளிவிஷயங்களில் காலத்தை அனுசரித்து நடத்தல் அறிவுபற்றியதாம். கிறிஸ்து மதத்தில் உழைக்கின்ற பாதிரிமார்களைப்பாருங்கள்; எங்கே எங்கே எந்த வாகனம் கிடைக்குமோ அதைக் கைக்கொண்டு, காரியத்தின் மேல் கண்ணோக்காய், எத்தனையோ பெரியகாரியங்களைச்செய்துகொண்டு வருகிறார்கள். இவ்விஷயத்தில், அவர்களைப்போல தாங்களும் நடைபெறுவீர்களாகில், மிக லாபகரமாயும் பலனுள்ளதாகவும் முடியும். "பழையன கழிதலும், புதியனபுகுதலும், வழுவலகால வகையினானே" என்ற ஆன்றோர் வாக்கை அநுசரித்து நடத்தல் வேண்டும். ஞானமுறையைத் தவிர, மற்றவெளிப்படையான ஸ்தூலபாகங்களைக் காலத்துக்கு நேர்மையாக மாற்றிக்கொள்ளுதல் தவறன்று. அப்படி நடப்பீர்களாக.

ஊர்கோலமென்றும், பாணகாக்ஷியென்றும், உத்தியோகஸ்தர்விருந்தென்றும், அவர்களுக்குச்சாதராக்கள் போர்த்துதல் என்றும், ஆங்கிலர்களுக்குத் தீனிசாப்பாட்டுக்கென்றும், வியவகாரத்திற்கென்றும், சிறுவிளையாட்டுகளுக்கென்றும், பூர்வ ஆச்ரமத்தினர்களான தாயத்தார், மாமன், தாய்தந்தையர், முதலினோர்க்கு என்றும், இவ்விதமாகப் பலவாறான விநியோகங்கள் செய்தல் தர்மமுறை அன்று. சாஸ்திரவிரோதமானவை. ஆங்கிலச் சட்டமும் சம்மதிக்காது.

மடத்தின் சொத்துக்களை ஹீனக்கிரயத்துக்கு விக்கிரயஞ்செய்தலும், பந்துக்கள் முதலாயினருக்கு அவைகளை ஹீனக்குத்தகைக்குக்கொடுத்தலும் ஆகிய இவைபோன்ற விநியோகங்கள் நியாயமல்ல.

இக்காலஸ்திதியைப் பாருங்கள்; பெரும்பாலும் ஜனங்கள் கல்வி கேள்வியில்லாமல் மூடர்களாக இருக்கின்றதைக் கவனியுங்கள், அவர்களுக்குக் கல்விப்பயிர்ச்சி, ஞானப்பயிர்ச்சி செய்வித்தல் உங்கள் கடமை யென்றும் அறியுங்கள். நம்மவர்கள் அவரவர்கள் சமயமுறை அறியாமையால், கிறிஸ்து மதத்தில் விளக்குப்பூச்சிபோல் விழுந்து மடிகிறார்கள், என்பதையும் உணருங்கள். நம்முடைய சநாதநதர்மம் ஒப்பு உயர்வு அற்றமதம். இம்மதம்தான் உலகமெங்கும் பரவவேண்டும் என்றும், நாஸ்திகம் அதிகரித்துக்கொண்டுவருகிற மேல் நாட்டாருக்கு முக்கியமாகப் பிராஞ்சுக்காரர்களுக்கு, ஹிந்துமதமும் அதன் தர்சநங்களும் மிகவும் அநுகூலமானவைகளென்றும், அவைகளால் தான் அவர்கள் நாஸ்திகத்தினின்று ஆஸ்திகத்திற்குத் திரும்பிவரக்கூடுமென்றும், அவைகளால் தான் நலம்பெறுவார்கள் என்றும், பிரான்சுதேசத்து வித்வத்சிரோணி பண்டித ஷால்ஸ் அம்மையார் ஷைதேசத்து அரசாட்சிமுறையில் விவரமான ரிபோர்ட்டு செய்திருக்கிறார் என்பதை நீங்கள் அறியவேண்டும். இந்நிலையில் நம்மவர்கள், கீழாயினோராக இருந்தாலும் சரி, மேலான குலத்தினோராயிருந்தாலும் சரி, நம்முடைய உயர் நலம் உள்ளமதத்தையும் அதன் ஆசாரங்களையும் விட்டு, கிறிஸ்துமதத்தில் சேர்கின்றது மிகவும் பரிதபிக்கக்கூடிய விஷயமன்றோ? சித்திர குப்தன் கணக்கில் இந்தப்பாப சம்பவத்தின் கர்மபலனில் மடாதிபதிகளுக்கு ஒருபெரிய பகுதி ஏற்படுமென்றும் நீங்கள் அறியவேண்டும். ஆகையால் நமக்கென்ன, என்று தூங்காமல் எழுமின்! விழிமின்! பெரியோர்கள் நீதி முறையை நாடுமின்! அதைத் திரும்பவும் இத்தேசத்தின்கண் நாட்டுமின்! ஜனங்கள், நல்வழி நடத்தும் தலைமையார் இல்லாமல் தவிக்கின்றார்கள். ஒரு ஊரில் கிறிஸ்து மார்க்கத்தில், ஒரு சிறுவன் சேர்க்கப்பட்டால், அச்சமயத்தில் நம்மவர்கள் படும் துன்பமும், துயரமும், பரிதபிப்பும், இத்தன்மையென நீங்கள் அறிவீர்களா? அதற்குக் காரணம் நீங்கள் அல்லவா? உங்களுடைய தர்மத்தை நீங்கள் சரிவர செய்யாமையின் காரணமாக அஃது உண்டானதன்றோ? எங்களுடன் சற்றுநேரம் மனம் ஒப்பி உள் நோக்கிச்சிந்தியுங்கள். அப்போதாவது நீங்கள் மனம்நோவீர்கள். உங்கள் பக்த கோடிகளான ஜனங்களிடம் காருண்ணியமும் வைப்பீர்கள். அவர்களின் பொருட்டு உண்மையாக வேலைசெய்வீர்கள்.

---

கரும்புச் சக்கையைக் கடுதாசி செய்வதற்கு உபயோகப் படுத்தலாமென்று வெகுநாளாக ஜனங்கள் எண்ணி வந்திருக்கிறார்கள். என்றாலும், கரும்பை ஆலையில் கொடுத்து நசுக்கும் பொழுது, அதன் நார் துண்டித்தும், கசங்கியும் போவதால் நாளது வரை காரியம் பலிக்கவில்லை. சக்கையை அடுப்பெரிக்கத்தான் உபயோகிக்கிறார்கள். சமீபகாலத்தில் ஒருபுதிய யந்திரம் நிர்மாணிக்கப் பட்டிருப்பதாகவும், அந்தச்சகாயத்தைக் கொண்டு, சர்க்கரை இப்பொழுது காணுவதைவிட ஆதாயம்கூடிக்காணும்படி செய்வதுடன், நார் பதம் கெடாமல் எடுத்து, அதன் மூலமாய் உயர்ந்ததரத்தில் கடிதாசிசெய்யவும் இதிலிருந்து கழிக்கப்பட்டதை மட்டத்தரகடிதாசி செய்யவும், உபயோகிக்கப் போகிறதாக அமெரிக்காவிலிருந்து சமாசாரம் தெரிகிறது. கரும்பு சாகுபடி செய்பவர்கள் இதைக்கவனிப்பாராக.

## புஸ்தக விமர்சனம்

ஸ்ரீராமாயண வினுவிடை. ஸப்தகாண்டங்களும், இராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. மூன்றாம்பதிப்பு. ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர் பி.எ., எல்.டி., ஜனரல் ஸப்ளேஸ்கம்பெனி, மைலாப்பூர். விலை ரூ 1.

'மூன்றம் பதிப்பு' என்னவே புஸ்தகத்தின் யோக்கியதை விசதமாகும். இம்மாதிரிப் புத்தகங்கள் மூன்று, இதற்கு மூன் விஹாரிணியில் விமர்சனமாகியிருப்பதால், அதிகமாக இச்சமயம் எழுதுவது அனுவசியம். விஷயம் அனேகமாய் ஸ்ரீவால்மீகியமாயும், கம்பர் முதலிய வழிநூல்களை யொட்டியும் இருக்கிறது. 'ரவிவர்மா' படங்களில் சில சேர்ந்திருப்பது உசிதமே. ஸ்ரீமான் அய்யாவர்களுடைய தமிழ் நடையைக் குறித்து நாம் மெச்சுவது அனுவசியம். கைநன்றாய்ப் பழகிவிட்டதால், வெகு ரசமாகவே நடையோடுகிறதென்று சொல்லாமலே ஏற்படும். 'வினுவிடை' யைப்பற்றி மட்டும் நமக்கிருக்கிற அபிப்பிராயம் மாறவில்லை.

### பத்திரிகைகளின் வரவு

மாதாந்தரம்.—பிழைக்கும்வழி, விவேகபோதினி, சக்கிரவர்த்தினி, வித்தியாபானு, ஹிதகாரிணி, ரஞ்சிதபோதினி, மாதர் மனோரஞ்சனி, மங்களோதயம் (மலையாளம்), கிருஷிகன், பிரபஞ்சம், பூர்ண சந்திரோதயம்.

பக்ஷாந்தரம்.—இந்து சாதனம், உதயாகை.

வாராந்தரம்.—நீலலோசனி, தேசாபிமானி, லோகானுகூலன், லோகோபகாரி, யூனெடெட் இந்தியா, திராவிடாபிமானி, வித்யாபாஸ்கரன், பாண்டியன், நாகர்கோவில் டைம்ஸ்.

வாரம் இருமுறை.—மைசூர் டைம்ஸ்.

## சமாசாரக் குறிப்புகள்

யக்ஞ யாகாதிகளைக்குறித்து, அவைகள்வேதசாஸ்திரங்களுக்குச் சம்மதப்பட்டவையல்ல வென்று தனம் திவான்பஹதூர் ஸ்ரீமான் ரகுநாதராயரும், சம்மதப்பட்டவைதானென்று வேறு இரண்டொருவரும், பத்திரிகைகளில் வாதித்து வருகிறார்கள். இந்த மாதிரி விஷயங்களில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது கால தருமம். முந்தி யொருகாலத்தில் யாகாதிகள் வெகுவாய் மலிந்திருந்தது நிச்சயம். அதற்கு ஸ்ரீகாளிதாஸ மகாகவி 'நேற்றைய' சாக்ஷி. 'பிராம்மணங்கள்' முதலிய பூர்வ மீமாம்ஸைசாஸ்திரம் பழைய சாக்ஷி. ஆனல் காலக்கிரமத்தில் ஜனங்களுடைய மனோதருமம் மாறிப் 'பழையன கழிந்து, புதியனபுகுந்து' நடப்பதும் நிச்சயம். அதற்கு இக்காலத்தில்யாகங்கள்எங்கேயோ மூலைமடக்குகளில் மட்டும் நடப்பதும், அவற்றை ஸ்ரீமான் திவான்பஹதூர் முதலிய ஆரிய சிரேஷ்டர் கண்டிப்பதும் போதுமான சாக்ஷியமாம். ஆதலால் இனி அதைக் குறித்து வாதாடுவது வீண். பேச்சு மாத்திரத்தில் அவற்றிற்கு என்ன மரியாதை யிருந்தபோதிலும், நடவடிக்கையில் அவையினிப் பிரபலிக்கப்போவதில்லை யாதலால், காலக்கிரமத்தில் அவை அற்றுப்போவதில் யாருக்கும் விசாரம் வேண்டியதில்லை. புத்திமான்கள் அதைத் துரிதப்படுத்த முயலவேண்டியது தான் காலதருமம்.

***

இவ்வருஷம் சர்க்காரிடமிருந்து பட்டம் பெற்றுச் சம்மானம் வாங்கியவர்களில், பத்திராதிபர் இரண்டொருவரிருப்பதைக் கண்டு சந்தோஷிக்கிறோம். 'இந்தியன் பாட்ரியட்' என்னும் ஆங்கில பத்திராதிபரின் எடிட்டருக்கு 'திவான் பஹதூர்' பட்டமும், 'கூடலூர் தேசாபிமானி' பத்திராதிபருக்கு 'ராவ் பஹதூர்' பட்டமும் கிடைத்தன. இந்தப் பட்டப் பெயர்கள் விஷயத்தில் நமக்கு விசேஷப் பிரமையில்லை. ஆனல், இதனுடைய உட்கருத்தைமட்டும் நாம் கிரமமாயறிய வேண்டியது அவசியமாம். இதுவரை இந்தியாவில் 'பத்திரிகை' சம்பந்தப்பட்டவர்களைச் சர்க்கார் 'பறையரைப் போல்' அனுதாணை செய்து வந்தது மட்டுமேயன்றி, அவர்களைத் துரைத்தன விரோதிகளாகவும் பாவித்து வந்தார்களென்று நம்மவருக்குள் ஒரு அபிப்பிராயம் பலங்கொண்டிருந்தது. அந்தரங்கம் எப்படியிருந்தபோதிலும், இப்படி யெண்ணுவதற்குக் காரணமும் கொஞ்சம் உண்டென்பதில் தடையில்லை. ஆனல், இப்பொழுது நாம் பேசும் விஷயத்தை நோக்குமிடத்து, சங்கதி வேறாகி வருவது வெளியாகுமென்று நம்புகிறோம். பத்திரிகைகள் சத்தியத்தையும், தருமத்தையும் கைவிடாது, நடக்கும் சங்கதிகளை உள்ளபடி யுரைத்து, நடக்க வேண்டியவைகளையும் நிர்ப்பயமாகவும், அவரவர் புத்திக்கெட்டிய மட்டில் நாணயமாகவும், வெளியிட்டு வந்தால், அதனல் ராஜா, பிரஜை இருதிறத்தாருக்கும் க்ஷேமமேதவிர வேறில்லை என்னும் ரகசியத்தை இருதிறத்தாரும் அறிந்து வருவதற்கு இதை நாம் சாக்ஷியமாகக் கொள்ளுகிறோம். அம்மட்டில் நமக்குச்சந்தோஷமே தவிரவேறொன்றுமில்லை.

***

ஸ்ரீசங்கர பகவத்பாத ஆசாரிய சுவாமிகளுடைய காலம் இன்றைக்கு எத்தனை ஆயிரம் வருஷத்திற்கு முந்தியிருக்கலா மென்பதில் தர்க்கம் வெகு காலமாக வலுத்துச சிலர், 2000ஹூ ங்களுக்கு முன் என்றும், சிலர் 1500ஹூங்களுக்கு முன் என்றும், மற்றும் சிலர் 1100ஹூங்களுக்கு முன்என்றும், வாதாடி வந்திருக்கிறார்கள். இப்பொழுது கொச்சி சமஸ்தான ஜோதிஷர் ஸ்ரீமான் பிச்சுவையரவர்கள் சில ஜோதிஷ ஆதாரங்களையும், கொல்லமாண்டு ரகசியத்தையும் முன்னிட்டு கி. பி. 805-ம் ஹூ, என்றால், இன்றைக்குச் சுமார் 1100ஹூங்களுக்கு முன்னடித்தான் சுவாமிகளிருந்திருக்க வேண்டுமென்று நிஷ்கரிஷிக்கிறார். நாமும் இதைத்தான் வெகுநாளாக நம்பி வருகிறோம்.



எழும்பூர் புதிய ரெயில்வே ஸ்டேஷன்--சென்னை.